# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 மாசி 11 செவ்வாய்க்கிழமை (23.02.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 089


# ஐ.தே.க. - பொன்சேகா தரப்புகள் தனித்தனி வழி போவது உறுதி

## ஜனாதிபதித் தேர்தல் கூட்டு முடிந்த விவகாரம்

கொழும்பு, பெப்ரவரி 23

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐ.தே.கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி ஒரு தரப்பிலும், முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா தலைமையில் ஜே.வி.பியும் மற்றைய சில கட்சிகளும் பிறிதொரு தரப்பிலும் தனித்தனியாகக் களம் இறங்குவது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது.

ஜனாதிபதித் தேர்தல் சமயத்தில் எதிர்க்கட்சிகள் இடையே ஏற்பட்ட ஐக்கியம் அத்தோடு முடிந்தது. பொதுத் தேர்தலை அவை பிரிந்து நின்று எதிர்கொள்வது ஆளும் தரப்பின் வெற்றியை மேலும் உறுதிப்படுத்தியிருப்பதாக அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவையே எதிரணியின் தலைவராகவும் -

ஐ.தே.கட்சியின் சின்னமான யானையையே எதிர்க்கட்சிக் கூட்டணியின் சின்னமாகவும் -

ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று ஐ.தே. கட்சி வலியுறுத்திய பின்னணியில் அதற்கு இணங்குவதற்கு ஜெனரல் பொன்சேகாவும், ஜே.வி.பி. தலைவர்களும் மறுத்துவிட்டனர் என்று கூறப்படுகின்றது.

பிறிதொரு பொதுச்சின்னத்தில் ஜெனரல் பொன்சேகாவின் தலைமையில் போட்டியிடவேண்டும் (24ஆம் பக்கம் பார்க்க)

## தங்கேஸ்வரி, கிஷோர் ஜனாதிபதியுடன் சந்திப்பு

கொழும்பு, பெப்.23

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கட்சியில் போட்டியிடவுள்ள முன்னாள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் தங்கேஸ்வரியும் மற்றும் ஐந்து (24ஆம் பக்கம் பார்க்க)

## கல்விச் சுடர்

**உள்ளே**

ஜி.சீ.஫. உயர்தர மாணவர்களுக்கான தமிழ் பாட மாதிரி வினாத்தாள்.

**நாளை**

ஜி.சீ.஫. உயர்தர மாணவர்களுக்கான உயிரியல் பாட மாதிரி வினாத்தாள்.

## யாழ்.மாவட்ட ஐ.தே.க. வேட்பாளராக மகேஸ்வரனின் துணைவியாரும் போட்டி

யாழ்ப்பாணம், பெப்.23

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்.மாவட்டத்தின் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் பட்டியலில் முன்னாள் அமைச்சரும், எம்.பி.யுமான தியாகராஜா மகேஸ்வரனின் துணைவியார் திருமதி விஜயகலா மகேஸ்வரனும் இடம்பெற்றுள்ளார் எனத் தெரிய வருகின்றது.

அந்தப் பட்டியலில் ஐ.தே. கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் எஸ்.சத்தியேந்திரா, சிறீதாமோதரா, கே.லவக்குமார், எம்.குலேந்திரராஜா, ரி.கிருபைதாசன் மற்றும் இரு முஸ்லீம் வேட்பாளர்களின் பெயர்களும் இடம்பெற்றுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் இன்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான ஸ்ரீகோத்தா சென்று ஆவணங்களில் கையெழுத்து இடுவர் என்றும் நாளை மறுதினம் யாழ். செயலகத்தில் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்வர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-10-93)

## யாழில். இருந்து பூநகரி நோக்கிச் சென்ற பஸ் விபத்துக்குள்ளாகியதில் 12 பேர் படுகாயம்

யாழ்ப்பாணம், பெப்.23

யாழ்ப்பாணத்திலிருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு பூநகரி நோக்கிப் பயணித்த இலங்கைப் போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்று நேற்றுக் காலை கிளிநொச்சி குஞ்சுப்பரந்தன் சந்திக்கு அருகில் விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த 12 பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் கிளிநொச்சி மற்றும் யாழ். ஆஸ்பத்திரிகளில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் அரச ஊழியர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(24ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.தொகுதியில் போட்டியிட 4 சுயேச்சைக் குழுக்கள் கட்டுப்பணத்தை செலுத்தின

யாழ்ப்பாணம், பெப்.23

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக நேற்று இரண்டு சுயேச்சைக் குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தியதாக யாழ். மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் எஸ். குகநாதன் தெரிவித்தார்.

நேற்றுவரை யாழ்.மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக நான்கு சுயேச்சைக் குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளன. கடந்த 18, 19 ஆம் திகதிகளில் இரு சுயேச்சைக் குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தியிருந்தன என்பது தெரிந்ததே. (அ-6)

## பொன்சேகா தலைமையில் ஜே.வி.பி. உட்பட 5 கட்சிகள் வெற்றிக்கேடயச் சின்னத்தில்

கொழும்பு, பெப். 23

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஜெனரல் சரத் பொன்சேகாவைத் தலைவராகக் கொண்ட ஜனநாயகத் தேசிய முன்னணியின் வெற்றிக் கேடயச் சின்னத்தின் கீழ் போட்டியிட ஜே.வி.பி. உள்ளிட்ட ஐந்து கட்சிகள் முன்வந்துள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியையும் இந்தக் கூட்டணியில் வந்து இணையுமாறு ஜனநாயகத் தேசிய முன்னணி அழைப்பு விடுத்துள்ளதோடு இது தொடர்பாகத் தீர்மானம் எடுப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சிக்கு இன்னும் கால அவகாசம் இருக்கின்றது என்றும் அது தெரிவித்துள்ளது.

ஜெனரல் சரத் பொன்சேகாவின் கொழும்பு அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்டி நல்லாட்சி ஒன்றை உருவாக்கும் நோக்கில் நாம் கடந்த (24ஆம் பக்கம் பார்க்க)

## சரத்பொன்சேகாவின் அடிப்படை உரிமை மீறல் மனு உயர் நீதிமன்றத்தில் இன்று விசாரணைக்கு வருகிறது

கொழும்பு, பெப். 23

ஜெனரல் சரத் பொன்சேகா கைது செய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டமையை ஆட்சேபித்துத் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனு தொடர்பில் - அதில் கோரப்பட்டுள்ள இடைக்கால நிவாரண வேண்டுகோள்கள் குறித்து - உயர்நீதிமன்றம் இன்று விசாரணை நடத்தவிருக்கின்றது.

பொன்சேகாவின் மனைவியானஅனோமா பொன்சேகாவினால் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுவை ஏற்கனவே உயர்நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுக்கொண்டுவிட்டது என்பது தெரிந்ததே.

(24ஆம் பக்கம் பார்க்க)

## தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பிக்கும் திகதி நீடிப்பு

கொழும்பு, பெப். 23

பொதுத் தேர்தல் கடமைகளில் ஈடுபடவுள்ள அரச ஊழியர்கள் தபால் மூல வாக்களிப்புக்காக விண்ணப்பிக்கும் கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது.

புதிய ஏற்பாட்டின் பிரகாரம் இம்மாதம் 26ஆம் திகதிவரை அரச ஊழியர்கள் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியுமெனத் தேர்தல்கள் செயலகம் குறிப்பிட்டுள்ளது.

தபால் மூல வாக்களிப்பிற்காக விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான கால எல்லை நேற்றுடன் முடிவடையவிருந்த போதிலும், பல்வேறு தரப்பினர் விடுத்த வேண்டுகோள்களுக்கு அமையத் தேர்தல்கள் செயலகம் இந்தக் கால நீடிப்பை அறிவித்துள்ளது.

அரச ஊழியர்கள் தமது நிறுவனத் தலைவர்கள் (24ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க நீதிமன்றில் இன்று வாதாடுகிறார் ருத்திரகுமாரன்

கொழும்பு, பெப். 23

தீவிரவாதிகள் எனப் பட்டியலிடப்பட்ட அமைப்புகளுக்கு மனிதாபிமான உதவிகள் செய்வதைக் கட்டுப்படுத்தும் சட்டத்திற்கு எதிராக அமெரிக்க உச்சநீதிமன்றத்தில் விஸ்வநாதன் ருத்திரகுமாரன் இன்று நேரில் ஆஜராகி வாதிடவுள்ளார் என இணையத்தளத் தகவல்கள் கூறுகின்றன.

மனிதாபிமான உதவிகள் மற்றும் தீவிரவாத அமைப்புகளுக்கு உதவி செய்தல் இவ்வற்றுக்கு இடையே உள்ள வேறுபாடுகளை தெளிவாக்கும்படி அவர் நீதிமன்றத்தில் வாதிடுவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (24ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு மாவட்டத்தில் பொன்சேகா போட்டி

கொழும்பு, பெப். 23

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஜெனரல் சரத் பொன்சேகா ஜனநாயக தேசிய முன்னணியின் தலைவராக இருந்துகொண்டு கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுவார் என்று ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

மேலும் இத் தேர்தலில் பொன்சேகாவின் மனைவி அனோமா பொன்சேகா போட்டியிடுவாரா, இல்லையா என்பது பற்றியும் [illegible] ணியின் கீழ், போட்டியிடுவோரின் விவரங்களும், தேசிய பட்டியலுக்காக (24ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளம்பரங்களை காட்சிப்படுத்துவோர் மற்றும்

# விடுதிகள் நடத்துபவர்கள் மாநகர சபையில் உரிய அனுமதியைப் பெறவேண்டும்

யாழ்ப்பாணம், பெப்.23

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் அங்கீகாரமற்ற முறையில் உருவாகும் விடுதிகள் மற்றும் விளம்பரங்கள் என்பன தொடர்பாக யாழ்.மாநகர சபையின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளதால் அனுமதி பெற்று இயங்காத விடுதிகள் மீது சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று மாநகர மேயர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக யாழ்.மாநகர மேயர் விடுத்துள்ள பத்திரிகை குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மாநகரசபை எல்லைக்குள் அங்கீகாரமற்ற விடுதிகள் நாளாந்தம் திடீர் திடீரென முளைத்து வருகின்றன. இவை உரிய முறையில் அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். தவறும் பட்சத்தில் அவற்றின் மீது சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இதே சமயம் மாநகர எல்லைக்குள் நிறுவனங்கள் தமது விளம்பரங்களை காட்சிப் படுத்த விரும்புவோர் மாநகர சபையிடம் விண்ணப்பித்து உரிய கட்டணங்களை செலுத்தி அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும்.

விளம்பர முகவர்களாகச் செயற்படுவோருக்கு எக்காரணம் கொண்டும் விளம்பர அனுமதி வழங்கப்படமாட்டாது எனவும் யாழ். மாநகர சபை மேயர் திருமதி யோ.பற்குணராஜா அறிவித்துள்ளார். (ஓ-10)


## திருமறைக் கலாமன்றம் சிறுவர் கலைக்கூடம்

**Children's Theatre**

எமது மன்றத்தால் நடத்தப்படுகின்ற சிறுவர் கலைக்கூடத்தில் 2010 ஆம் ஆண்டுக்கான புதிய பிரிவில் சேர்ந்து பயில விரும்பும் சிறுவர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சிறுவர் கலைக்கூடமானது சிறுவர்களின் உடல், உள வளர்ச்சியை மனதிற் கொண்டு அவர்கள் தமக்குரிய உரிமையுடன் வளரவும் கலை, விளையாட்டு ஊடகங்களுக்கூடாக உருவாக்கம் பெறவும் தக்கதாக இலவசமாக நடத்தப்படுகிறது.

பிரிவு I (5-10 வயது)
பிரிவு II (11-14 வயது)
பிரிவு III (15-17 வயது)

சிறுவர் கலைக்கூடத்தில் இணைந்துகொள்ள விரும்புபவர்கள் விண்ணப்பப் படிவங்களை யாழ்.திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் பெற்று 05.03.2010 செவ்வாய்க்கிழமைக்கு முன்னதாக ஒப்படைக்கவும்.

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 2393 (சி-565074)

பிரதி இயக்குநர்,
திருமறைக் கலாமன்றம்.

## உடனடி வேலை வாய்ப்பு

நெல்லியடியில் இயங்கிக் கொண்டிருக்கும் சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கனேடிய கிளை நிறுவனத்திற்கு உதவி முகாமையாளர், முகாமைத்துவ பயிற்சியாளர்கள் தேவை.

உடன் தொடர்புகளுக்கு:- 0771363797, 0214905001 (92164)


## கண்ணீர் அஞ்சலி

யாழ்.பல்கலைக்கழக கணித புள்ளிவிவரவியல் துறையின் விரிவுரையாளர் கா.கண்ணனின் (U.K.) அன்புத் தாயார்

**அமரர் காங்கேயநாதன் விமலராணி**

அவர்களின் மறைவையிட்டு எமது இதய பூர்வமான கண்ணீர் அஞ்சலிகளைச் செலுத்துகின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

விரிவுரையாளர்கள், ஊழியர்கள்,
கணித புள்ளிவிவரவியல்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.
(94960)

## நெஞ்சைவிட்டகலா முதலாம் ஆண்டு நினைவுகளில்



தாயின் மடியில்: 1984 ★ 10 ★ 13

இறைவன் அடியில்: 2009 ★ 03 ★ 06

**அமரர் வல்லிபுரம் சபேசன் (மதன்)**

அன்பின் இருப்பிடமாய் அறிவின் பெரும் சுடராய்
களங்கமற்ற அன்பால் கருணை உள்ளம் கொண்ட அன்பு மகனே!
தாங்கமுடியவில்லை உன் துயரைத் தடுக்க முடியவில்லை
ஓராண்டு சென்றாலும் உம் நினைவை மறக்க முடியவில்லை
முத்தான உங்கள் முழு நினைவுகளும் நித்தமும்
எம் நெஞ்சில் நிழலாய் தொடரும்.

கச்சாய் வீதி,
சாவகச்சேரி.
(C/565080)
குடும்பத்தினர்.

## 'கொவிசெத' சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு, பெப்.23

தேசிய லொத்தர் சபையின் 'கொவி செத' 743ஆம் இலக்க நேற்றைய சீட்டிழுப்பில் 'Z' என்ற ஆங்கில எழுத்தும் 17/31/43/67 என்ற இலக்கங்களும் அதிர்ஷ்டத்திற்குரியனவாக தேர்வு செய்யப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் சுப்பர் பரிசுத்தொகை வெல்லப்படவில்லை. நான்கு இலக்கங்களையும் சரியாகக் கொண்ட சீட்டை வைத்திருக்கும் ஒருவருக்கு முதலாம் பரிசாக இருபது லட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

ஆங்கில எழுத்துடன் மூன்று இலக்கங்களைச் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 12பேருக்கு இரண்டாம் பரிசாக தலா இருபதாயிரம் ரூபா கிடைக்கும்.

மூன்று இலக்கங்களை சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 308 பேருக்கு மூன்றாம் பரிசாக தலா இரண்டாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

ஆங்கில எழுத்துடன் இரண்டு இலக்கங்களை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 627 பேருக்கு நான்காம் பரிசாக தலா ஆயிரம் ரூபா கிடைக்கும்.

இரண்டு இலக்கங்களை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 15,586பேருக்கு ஐந்தாம் பரிசாக தலா ஐம்பது ரூபா கிடைக்கும்.

ஆங்கில எழுத்துடன் ஒரு இலக்கத்தை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 8,938பேருக்கு ஆறாம் பரிசாக தலா நாற்பது ரூபா கிடைக்கவுள்ளது.

ஒரு இலக்கம் மட்டும் சரியாகக் கொண்ட சீட்டை வைத்திருக்கும் 222,433 பேருக்கு ஏழாம் பரிசாக தலா இருபது ரூபா கிடைக்கும்.

ஆங்கில எழுத்தை மாத்திரம் சரியாகக் கொண்ட சீட்டை வைத்திருக்கும் 35,041 பேருக்கு எட்டாம் பரிசாக தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது. (ஓ-10)


## ISUZU வாகனங்கள்

பதிவு செய்யப்படாத ISUZU, டொல்பின் வாகனங்கள் விற்பனைக்குண்டு.

★ இலகு தவணைக்கட்டண வசதி.

தொடர்பு: பூபதி காட்சியறை, யாழ்.மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை. தொ.பே: 0777427777 (C/565082)


## யாழ்.இந்துவில் அதிபர் குமாரசாமி பூங்கா

யாழ்.இந்துக்கல்லூரியில் நிறுவப் பட்டுள்ள முன்னாள் அதிபர் பி.எஸ். குமாரசாமி ஞாபகார்த்தப் பூங்கா நாளை மறுதினம் வியாழக் கிழமை காலை 8.30 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

கல்லூரியின் பழைய மாணவர் சங்க ஐக்கிய இராச்சியக் கிளையின் தலைவரும் சட்டத்தரணியுமான க.செவ்வேளின் நிதியுதவியில் அமைக்கப்பட்ட இந்தப் பூங்காவை பழைய மாணவர் சங்க ஐக்கிய இராச்சிய கிளையைச் சேர்ந்த பொறியியலாளர் சபா.சுகந்தன் திறந்து வைப்பார். (ஓ-10)


## Barnabas இன் மாபெரும் மலிவு விற்பனை

✻ Japan Sony T.V கள் 29", 21", 14" மிகவும் குறைந்த விலையில்...
✻ யாழ்ப்பாணத்தில் உறுதி உத்தரவாதம் இலகுவான கொள்வனவு முறைகள் எம்மிடம் மட்டுமே.
✻ மாவட்டத்தின் எந்த வியாபாரிகளுக்கும் விலைக்கழிவு



5 வருட உத்தரவாதம்

பர்ணபாஸ் எலக்ரோனிக்ஸ்
360/1, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0217900728

மதன் எலக்ரோனிக்ஸ்
சுதுமலைச்சந்தி, மானிப்பாய்.
தொ.பே: 0217901574, 0777448668


## மரண அறிவித்தல்கள்



### கந்தையா இராசன்
(பிரபல கட்டட ஒப்பந்ததாரர்)

கொக்குவில் கிழக்கு, காளிகோயிலடியைப் பிறப்பிடமாகவும், ஆத்திசூடி வீதி, கந்தர் மடத்தை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா இராசன் நேற்று (22.02.2010) திங்கட் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், சரஸ்வதியின் கணவரும், ராஜ்மேனன் (அவுஸ்திரேலியா), தயாளினி, ரூபநந்தினி (நிகழ்ச்சித் திட்ட உதவியாளர், கட்டடத்திணைக்களம், யாழ்ப்பாணம்), ராஜ்கரன் (முகாமைத்துவ இறுதியாண்டு மாணவன், யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சிவகுமார் (போதனா வைத்தியசாலை), சோபனா ஆகியோரின் மாமனாரும், தவமணி, நவரட்ணம் ஆகியோரின் சகோதரரும், பிரமிக்கா, கன்சியன் லூவின் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.02.2010) செவ்வாய்க்கிழமை ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

56/19, ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம்.

தகவல்:
குடும்பத்தினர்.

### செல்லப்பா பாலகிருஸ்ணன்

பொன்னாலையைப் பிறப்பிடமாகவும், அளவெட்டி, கிளான்கொடையை வசிப்பிடமாகவும் தற்போது சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டையில் வசித்தவருமாகிய செல்லப்பா பாலகிருஸ்ணன் நேற்று (22.02.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா-மீனாட்சி தம்பதிகளின் புத்திரனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், பவானி, கோமதி (கனடா), குகன் (உரிமையாளர், B.K மல்ரி சொப், நாச்சிமார் கோயிலடி), முகுந்தன் (முகாமையாளர், கப்பிரல் எலயன்ஸ், கணக்கீட்டு ஆசிரியர்) ஆகியோரின் தந்தையும், சக்திவேல், அருணகிரிநாதர் (கனடா), மதிவதனி (ஆசிரியை, உயரப்புலம் அ.மி.த.க.பாடசாலை), பிரதீபா (இலங்கை வங்கி, காங்கேசன்துறை) ஆகியோரின் மாமனாரும், யதுகுலன், குலவேணி, கரிகரன், பிருதுவி, சாருக்சன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.02.2010) புதன் கிழமை காலை 9மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை.
(94966)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி நாகராசா சரஸ்வதி

அவ்வொல்லை, புலோலி மத்தி, பருத்தித்துறையைச் சேர்ந்த திருமதி நாகராசா சரஸ்வதி நேற்று (22.02.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகராசாவின் அன்பு மனைவியும், விக்னேஸ்வரன் (ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரி), அமரர் லோகேஸ்வரன் (பரந்தன் ஓட்டுத் தொழிற்சாலை), வரேந்திரராசா (ப.நோ.கூ.சங்கம், பருத்தித்துறை), ஸ்ரீகண்ணன் (இ.போ.ச.பருத்தித்துறைச்சாலை), ஸ்ரீகாந்தன் (இ.போ.ச, பருத்தித்துறைச்சாலை), திருமதி சோ.கெங்காதேவி (ஆசிரியை, அல்வாய் வடக்கு றோ.க.த.க பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.02.2010) செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் பருத்தித்துறை, சுப்பர்மடம் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புலோலி மத்தி,
பருத்தித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.

### வைத்தி வல்லிபுரம்
(முன்னாள் தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்க ஊழியர்)



புதுத்தோட்டம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், சூராவத்தை, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்தி வல்லிபுரம் நேற்று (22.02.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்தி- சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா-செல்லம்மா தம்பதியிரின் மருமகனும், சந்திரவதியின் அன்புக் கணவரும், மதிவதனி, கிருஷ்ணவதனி, மதுசுதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், புருஷோத்தமனின் அன்பு மாமனாரும், விபோதனின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான கந்தையா, சின்னத்துரை மற்றும் ஈசன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தங்கராணி, பரமேஸ்வரி, மகாலிங்கம், குமாரலிங்கம், சிவலிங்கம், இந்திராணி, கதிர்காமலிங்கம், கணேசலிங்கம், மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.02.2010) செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் கட்டுப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"ஐஸ்வர்யமஹால்",
சூராவத்தை, சுன்னாகம்.
(94964)

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# மூன்றில் இருபங்கு பெரும்பான்மையை இலக்கு வைக்கும் ஜனாதிபதி ராஜபக்ஷ

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் சில புதிய பாடங்களையும் நமக்குப் போதித்திருக்கின்றன என்பது உண்மைதான்.

இந்தத் தேர்தல் முடிவுகளின்படி வடக்கு, கிழக்குப் பிரதேசங்களான தமிழர் தாயகம், தென்னிலங்கையிலிருந்து கருத்தியல் ரீதியாக வேறுபட்டிருக்கின்றது என்பது வெளிப்படையாகத் தெளிவுபட்டிருக்கின்றது.

அதேசமயம், சிறுபான்மையினர் மத்தியில் காத்திரமான நம்பிக்கையைத் தரும் வகையில் இதுவரை நிலவிய ஒரு கருத்து நிலைப்பாட்டை இந்தத் தேர்தல் முடிவுகள் தகர்த்தெறிந்து, அந்த நம்பிக்கையை வெறும் மாயையாக்கியிருக்கின்றமையும் இங்கு மறுக்க முடியாத ஒரு விவகாரமாகும்.

இலங்கைத் தீவின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை - ஆட்சித் தலைவரை - தெரிவு செய்யும் விடயத்தில் சிறுபான்மையினர், குறிப்பாகத் தமிழ்ப் பேசும் சமூகத்தினர் வலுவான பங்கினைச் செலுத்தமுடியும். அவர்களின் பங்களிப்பு தேர்தல் முடிவை - தெரிவுப் போக்கை - மாற்றியமைக்கும் என்று இதுவரை நிலவிவந்த அசைக்க முடியாத நம்பிக்கையையே இத்தேர்தல் மூலம் தகர்த்தழித்திருக்கின்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

சிறுபான்மையினரைப் புறக்கணித்து ஒதுக்கிவிட்டு - அவர்களின் ஆதரவை உதாசீனப்படுத்தித் தள்ளிவிட்டு - பெரும்பான்மையினரின் ஆதரவை மட்டும் வளைத்துப் போட்டுக்கொண்டு - நாட்டின் தலைவரைத் தெரிவு செய்யும் தேர்தலில் அமோக வெற்றியை ஈட்ட முடியும் என்ற புதிய அரசியல் கலாசாரத்தை இலங்கையில் நிரூபித்து உறுதிப்படுத்தி, நிலைநிறுத்தியிருக்கின்றார் ஜனாதிபதி ராஜபக்ஷ.

அடுத்துவரும் பொதுத் தேர்தலிலும் அத்தகைய வரலாற்று சாதனை ஒன்றை நிலைநிறுத்த அவர் விரும்புகின்றார் என்பது வெளிப்படையாகியிருக்கின்றது.

இலங்கையில் தற்போது நடைமுறையில் இருக்கும் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமையின் கீழ் தென்னிலங்கையின் இரு பிரதான கட்சிகளும் எப்படி அணி சேர்ந்தாலும் - எவ்வாறு தலையால் கிடங்கு கிண்டினாலும் - பொதுத் தேர்தலில் தனித்தோ அல்லது கூட்டணியாகவோ போட்டியிட்டாலும் அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்ள முடியுமே தவிர, மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்ள முடியவே முடியாது என்றே இதுநாள்வரை கூறப்பட்டு வருகின்றது.

இதுவரை நடந்த தேர்தல் முடிவுகளும் அதனையே எமக்குப் புலப்படுத்தி வந்தன. பொதுத் தேர்தல் முடிவுகளின் மூலம் எந்தப் பிரதான கட்சியும் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெற முடியாமல் போனமை மட்டுமல்ல, அதன் பின்னர் பிரதான எதிர்க்கட்சியிடமிருந்து ஆளும் கட்சி, கொத்துக் கொத்தாய் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கட்சி மாறவைத்துக் கொள்ளையிட்ட போதிலும் கூட, இந்த மூன்றில் இரு பங்கு பெரும்பான்மை எந்த அரசுக்கும் வந்து சேரவேயில்லை. அதுதான் விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தலின் கீழ் தெரிவு செய்யப்பட்ட இலங்கை நாடாளுமன்றங்களின் பட்டறிவாக இருந்து வந்திருக்கின்றது.

ஆனால் ஜனாதிபதித் தேர்தலில் புதிய அரசியல் கலாசாரத்தை நிலைநாட்டிக் காட்டிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இந்தப் பொதுத் தேர்தல் மூலம் தமது ஆளும் தரப்பு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெறும் என்று சூளுரைத்திருக்கின்றார்.

பிரிந்து, சிதறித் தமக்குள் முரண்பட்டு, மென்மேலும் பலவீனமடைந்திருக்கும் இலங்கையின் எதிர்க்கட்சிகளின் செயற்போக்கைப் பார்க்கும்போது, அத்தகைய இமாலய சாதனையை மஹிந்தரின் தரப்பு நிலைநாட்டுவதற்கான வாய்ப்பை அக்கட்சிகளே தமக்குள் முரண்படுவதன் மூலம் வழங்கி விடக்கூடும் என்றே தோன்றுகின்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைப் பொறுத்தவரை அவர் அடுத்த ஏழு ஆண்டுகளுக்கு மட்டுமே ஆட்சி அதிகாரத்தில் இருக்கமுடியும். தற்போதைய அரசமைப்பு மற்றும் உயர்நீதிமன்றத்தின் வழிகாட்டுத் தீர்ப்புகள் ஆகியவற்றின்படி அவர் 2016 நவம்பருடன் வீட்டுக்குப் போகவேண்டியவர்தான்.

அத்தகைய நிலை நெருங்கி வரும் சமயத்தில், அதன் பின்னர் ஆட்சியில் நீடிக்கும் முயற்சியில் அவர் ஈடுபட்டாலும் அது சட்ட ரீதியாக வாய்ப்பளிக்க மாட்டாது என்பது தெளிவு.

ஆகவே, இப்போதைய பொதுத் தேர்தலிலேயே வசதியான வெற்றியைப் பெற்று, அதன்மூலம் - 2016 நவம்பருக்குப் பின்னரும் - தாம் அதிகாரத்தில் நீடிப்பதற்கான ஏற்பாடுகளை முற்கூட்டியே வடிவமைத்துக் கொள்வதுதான் ராஜபக்ஷவின் உத்தேசமாகும்.

தற்போதைய பொதுத் தேர்தலின் பின்னர் இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்ற பெயரில் அவர் கொண்டுவரும் செயல் திட்டத்தில், தமது இரண்டாவது பதவிக் காலத்தின் பின்னரும் தாம் அரசியல் அதிகாரத்தில் நீடிக்க வாய்ப்பளிக்கக் கூடிய சட்ட ஏற்பாடுகளை அவர் செருகிக் கொள்வார் என எதிர்பார்க்க முடியும்.

இதற்கேற்ப, அரசமைப்பை மாற்றுவதற்கு அவருக்கு மூன்றில் இரு பங்கு நாடாளுமன்றப் பலம் தேவைப்படுகின்றது. அதற்காக இலக்கு வைக்கிறார் அவர். அதில் அவர் வெல்வாரா? ஏப்ரல் 9ஆம் திகதி இதற்குப் பதில் கிடைக்கும்!

# மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்று அரசமைப்பை மாற்றுவதே அரசின் நோக்கம்

## ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, பெப்.23

''பொதுத் தேர்தலில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெற்று அரசமைப்பை மாற்றுவதுடன் வடக்கு, கிழக்கு, மலையகம் உட்பட நாட்டின் சகல பகுதிகளிலும் பெரும் அபிவிருத்தியை முன்னெடுப்பதே அரசின் நோக்கம்.''

- இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இம்முறை அமைச்சரவையை சிறிதாக்கும் அதேவேளை, இளைஞர்களுக்கு முன்னுரிமையளிப்பதும் தமது எதிர்பார்ப்பாகுமெனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்த நாட்டில் அரசியல் செய்ய எவருக்கும் உரிமையுண்டு. தனிப்பட்டவர்களைப் பாதிப்படையச் செய்ய நாம் தயாரில்லை. அவ்வாறு அரசியல் நடத்தவும் முடியாது. எவரும் அரசியல் நடத்தும் சுதந்திரம் இந்நாட்டில் உள்ளது என்பதை மக்கள் அறிவர் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பதுளை மாவட்ட விசேட மாநாடு சனிக்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் பண்டாரவளை நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது. நாடாளுமன்ற சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம். லொக்கு பண்டார, அமைச்சர்கள் நிமல் சிறி பால டி சில்வா, டிலான் பெரேரா, பிரதியமைச்சர் வடிவேல் சுரேஷ், ஊவா மாகாண ஆளுநர் நந்தா மெத்தியூ, மாகாண அமைச்சர் செந்தில் தொண்டமான் உட்பட மாகாண அமைச்சர்கள், முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் ஜனாதிபதி மேலும் தெரிவித்தவை வருமாறு:-

முன்னாள் சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம். லொக்குபண்டாரவின் புதல்வர் இம்முறை தேர்தலில் போட்டியிடுகிறார். இத்தகைய புதிய இளைஞர்களை வரவேற்று ஆதரவளிப்பது சிறந்தது. புதியவர்களுக்கு கௌரமளிப்பதும், வரவேற்பதும், வாழ்த்துவதும் இலங்கையில் மட்டுமன்றி முழு ஆசியாவிலுமுள்ள சிறந்த பழக்க வழக்கமாகும்.

ஊவா மாகாண மக்கள் உறுதியானவர்கள். இவர்களால் தெரிவு செய்யப்பட்ட டபிள்யூ. ஜே. எம். லொக்கு பண்டார போன்றவர்கள் தாம் பதவி வகித்த கட்சிக்காக நேர்மையாக உழைத்தவர்கள்.

இம்முறை இளையோர் பலர் எம்முடன் உள்ளனர். கடந்த முறை மூன்றிலிரண்டு பெரும்பான்மையை நாம் பெற 19 ஆசனங்கள் எமக்குக் குறைவாக இருந்தன. இம்முறை அதனை நாம் பெற்று மூன்றிலிரண்டு பெரும் பான்மையை நாம் பெற்றுக்கொள்வது மிக உறுதி.

பல்வேறு கருத்துக்கள், வதந்திகள், சேறுபூசுதல் நடவடிக்கைகளுக்கு எமது மக்கள் துணை போகின்றவர்களல்ல. அதற்கு செவிமடுப்பவர்களுமல்லர். அவர்கள் எம்மை வெற்றி பெறச் செய்வது உறுதி. எமது பக்கம் விரல் நீட்டியவர்கள் தற்போது தாமே திண்டாடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதை மக்கள் அறிவர்.

தனிப்பட்ட எவரையும் நாம் தாக்கப்போவதில்லை. அவ்வாறு அரசியல் நடத்தவும் முடியாது. அதனால் தான் அரசியல் நடத்தும் உரிமையை அனைவருக்கும் உரியதாக்கியுள்ளோம். இளைஞர்களை நாம் வாழ்த்து வதுடன் நேர்மையாக அரசியல் நடத் துமாறும் கேட்டுக்கொள்கின்றோம்- என்றார்.

இந்நிகழ்வின் போது பதுளை மாவட்டத்திலிருந்து ஐ.தே.க. ஆதரவாளர்கள் பலர் அரசாங்கத்துடன் இணைந்து கொண்டனர். அத்துடன் ஜனாதிபதியைச் சந்தித்து அவரிடமிருந்து ஸ்ரீலங்கா சுதந்திக் கட்சியின் அங்கத்துவப் பத்திரத் தையும் பெற்றுகொண்டனர். (ஒ-சி)



கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஊனமுற்ற படை வீரருக்கு ஓட்டோ ஒன்றை வழங்குகின்றமையைக் காணலாம்

## கூட்டுறவுப் பணியாளர் பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், பெப்.23

யாழ்ப்பாணம் கூட்டுறவு பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்ற கூட்டுறவுப் பணியாளர் சாதாரணதரம் - 2009 பரீட்சை முடிவுகளைவவுனியா-மாகாண கூட்டுறவு நிறுவனம் யாழ.மாவட்ட கூட்டுறவுச் சபைக்கு அனுப்பி வைத்துள்ளது. இந்தப் பரீட்சைக்குத் தோற்றியோர் தமது பெறுபேறுகளை யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையில் பார்வையிட முடியும் என்று கல்லூரி அதிபர் திருமதி வே.செல்வரத்தினம் அறிவித்துள்ளார். (ஒ)

## இலட்சார்ச்சனை

யாழ்ப்பாணம், பெப்.23

சாவகச்சேரி சந்திரசேகர வாரிவனநாதர் சிவன் ஆலய மாசிமக இலட்சார்ச்சனை நாளை மறுதினம் வியாழக்கிழமை ஆரம்பமாகி நான்கு நாள்கள் நடைபெறும்.

சிவப்பிரம்மஸ்ரீ க.பரராஜசேகரக் குருக்கள் தலைமையில் இலட்சார்ச்சனை நடைபெறும். (ஒ-207)

## முல்லை. வலய ஆசிரியர்களின் சம்பளம்; வெள்ளியும் சனியும் வழங்க ஏற்பாடு

அச்சுவேலி, பெப்.23

முல்லைத்தீவு கல்வி வலயத்தில் பதிவுசெய்த ஆசிரியர்களுக்கான பெப்ரவரிச் சம்பளக் கொடுப்பனவுகள் யாழ்.மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் பணிமனையில் எதிர்வரும் வெள்ளிக்கிழமையும் மறுநாள் சனிக்கிழமையும் வழங்க ப் படவுள்ளன. சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் குறித்த தினங்களில் தவறாது கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா அறிவித்துள்ளார்.

சம்பளக் கொடுப்பனவை பெற்றுக் கொள்ளும்போது பின்வரும் ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

* பெற்றுக்கொண்ட லீவு விவரம் B100 படிவத்தில்.
* தற்காலி இணைப்புக் கடிதம்.
* தற்காலிக இணைப்புப் பதவியேற்ற கடிதத்தின் பிரதி பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன்.
* தேசிய அடையாள அட்டையின் புகைப்படப் பிரதி.
* சம்பந்தப்பட்ட ஆசிரியர்களின் வங்கிக் கணக்கு இலக்கம்.

ஜனவரி மாதம் சம்பளக்கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளாத ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு நிலுவையும் வழங்கப்படும்.

சம்பளக் கொடுப்பனவு தொடர்பான முறையீடுகள், கோரிக்கைகள் இருப்பின் எழுத்துமூலம் வலயக்கல்விப் பணிப்பாளருக்கு தெரியப்படுத்துதோடு அதன் பிரதியை மாகாணக் கல்வித் திணைக்களத்திக்கு அனுப்பிவைக்குமாறும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-11)

## நாளை

| | | |
|---|---|---|
| மாசி | 12 | 24.02.2010 |
| | | புதன்கிழமை |
| திதி: | | தசமி |
| | | மு.ப. 10.11 வரை |
| நட்சத்திரம்: | | திருவாதிரை |
| | | பி.இ.12.42 வரை |
| சுபநேரம்: | | 05.00-6.30 வரை |
| ராகுகாலம்: | | 12.30-02.00 வரை |

## விரைவு கணிதச் செய்கை புத்தகங்கள் விநியோகம்

யாழ்ப்பாணம், பெப்.23

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் ஆரம்பப் பிரிவு வகுப்புகளில் விரைவு கணிதச் செய்கைக்கானபுத்தகங்கள் மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

வலயத்தில் தெரிவுசெய்யப்பட்ட சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை, கைதடி கலைவாணி வித்தியாலயம், நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம், மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயம், மிருசுவில் றோ.க.த.க. பாடசாலை ஆகிய வற்றுக்கென அனுப்பப்பட்ட புத் தகங்கள் நேற்று கல்வி அலுவலகத் தில் வைத்து விநியோகிக்கப்பட்டன. (ஒ-207)

## சப்ரகமுவ பல்கலைக்கழக அனுமதி; தகுதிகாண் பரீட்சைக்கு விண்ணப்பங்கள்

யாழப்பாணம், பெப்.23

இலங்கை சபரகமுவ பல்கலைக் கழகம் பல்கலைக்கழக அனுமதி - 2009/2010 கல்வியாண்டுக்கு கணனி மற்றும் தகவல் அமைபபு, உடறகல்வி, விளையாட்டு விஞ்ஞானம், முகாமைத்துவம் ஆகியவற்றில் பட்டதாரி பாடநெறியை பயில்வதற்கான தகுதி காண் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப் பாடநெறிக்கான பல்கலைக் கழக அனுமதியை பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கும் விண்ணப்பதாரிகள் பல்கலைக்கழக அனுமதிக்காக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பித்துள்ள விண்ணப்பங்களுக்கு மேலதிகமாக இந்தத் தகுதிகாண பரீட்சைகளுக்கு விண்ணப்பித்துத் தோற்றி சித்தியடைதல் வேண்டும் எனத தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப் பாடநெறிக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதிக்கு முன்னதாக ''சிரேஷ்ட உதவிப்பதிவாளர், கல்வி மற்றும் மாணவர் சேவை, இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக த.பெ. இல 02, பெலிஹுல்ஓய'' என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

இது தொடர்பான விவரங்களை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் இணையத்தளமான www.sab.ac.lk முகவரியில் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகம் மகிழ்ந்த பாராட்டு



இன்று நகரில் நாளுக்கொரு புதிய வங்கி.
ஆனால் நாமெல்லாம் அசாதாரண
சூழ்நிலையில் சிக்கித் தவித்த போது தனியார்
வங்கியாய் யாழ். நகரில் தலைநிமிர்ந்து நின்று
ஹற்றன் நஷனல் வங்கி நமக்கெல்லாம்
சளைக்காது சேவை செய்தது என்றால் அதன்
பெருமை அதை வழி நடத்திய

உயர் திரு. **தீசைவீரசிங்கம் ஜெயராசசிங்கம்**

அவர்களையே சாரும். பண்பாளன், பதவிக்கேற்ற தோற்றம், முக அமைப்பில் மழலை, அறிவில் முதிர்ச்சி, பதவியில் ஏற்றம் பெற்றார் என்பதறிந்து பூரித்து நிற்கிறோம். இறை ஆசியுடன் இன்னும் நிச்சயம் மேன்மேலும் உயர்நிலை பெறுவார் என்பது உறுதி.
வளர்க! வாழ்க பல்லாண்டு!
ஜெயம்!

105, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். மனம் நிறைந்து வாழ்த்துவோர்
இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல் ஸ்தாபனத்தார்.
(சி/565081)

## சேவை நலன் பாராட்டு

எமது வலயத்தில் தமிழ்ப் பாடத்திற்கான ஆசிரிய ஆலோசகராக
6 ஆண்டுகள் கடமையாற்றி தனது சேவைக் காலத்தில்
33 ஆண்டுகளை நிறைவுசெய்து நேற்றைய தினம்
(22.02.2010) ஓய்வு பெற்ற
**திருமதி இந்திராணி ஜெயநாயகம்** B.A., Dip. in Edu. ஆசிரிய ஆலோசகர் - தமிழ்
அவர்களை ஓய்வுகாலத்தில் தனது குடும்பத்தினருடன்
குதூகலமாக சுகபலத்துடன் வாழ இறைவனைப் பிரார்த்தித்து
வாழ்த்துகின்றோம்.

தீவக கல்வி வலயம், வேலணை. நலன்புரிக்கழகம்.
(94957)

## குருக்கள் ஐயாவுக்கு நல் வாழ்த்துக்கள்

இன்று (23.02.2010) அகவை அறுபதிலே
அம்பாள் அருள்பெற்று ஆசிதர வேண்டுகின்றோம்

**க.சிவலோகநாதக் குருக்கள்**
**- இராயேந்திரக்குருக்கள்**
(பிரதம குரு, ஸ்ரீ முத்துமாரி அம்மன், திருநெல்வேலி)



தந்தையாய்
தலைவனாய்
அம்பாள்
தொண்டனாய்
நீடித்த
ஆயுளுடன்
நோய்நொடிகள்
அணுகா
வண்ணம்
அம்பாள்
அருள்பெற்று
ஆசிகள் தந்து
ஆண்டுகள் நூறு
வாழ்ந்திட
வாழ்த்துகின்றோம்.

முத்துமாரி அம்மன் கோயிலடி,
திருநெல்வேலி. ஆலயத் தொண்டர்கள்.
(94965)

Affiliated with JOBSNET
Ministry of Labour Relation and Manpower

19 வருட அனுபவம்

- தபால் மூலம் -
தமிழ் மொழி மூலம்

ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month
Feb.2010 To July 2010

~ Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
~ Dip. In Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
~ Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Sales & Marketing Management
விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Health & Hospital Management
சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு, ஹட்டன், வேருவலை மற்றும் நுவரேலியா.

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844 / 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)

ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1st Floor, Supermarket Complex, Main Street, Sainthamaruthu-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.02.2010


## மின்சார இயந்திரம் மூலம் தையலில் ஈடுபட்ட பெண் மின்தாக்கி காயம்

யாழ்ப்பாணம், பெப்.23

மின்சாரத்தில் இயங்கும் தையல் இயந்திரத்தில் தையல் வேலையில் ஈடுபட்டிருந்த இளம்பெண் மின்சாரத்தினால் தாக்கப்பட்டு காலில் எரிகாயங்களுக்கு இலக்கானார்.

நேற்று முன்தினம் நுணாவிலில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த எஸ். தீபா (வயது 23) என்பவரே எரிகாயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

(ஒ-207)

## 'டிராக்டர்' சாரதிக்கு ரூ.25ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம், பெப்.23

அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிய உழவு இயந்திரத்தின் சாரதிக்கு 25ஆயிரம் ரூபா சாவகச்சேரி நீதிமன்றில் அபராதமாக விதிக்கப்பட்டது.

இந்த வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிவான் சாரதிக்கு 25ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத்தொகை செலுத்தத்தவறின் ஒருமாத சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். (ஒ-209)

## நாய்களுடன் மோதி மோட்டார் சைக்கிள் விபத்து

யாழ்ப்பாணம், பெப்.23

வீதியில் நின்ற நாய்களுடன் வேகமாகச் சென்ற மோட்டார் சைக்கிள் மோதியதில் மோட்டார் சைக்கிள் தூக்கி வீசப்பட்டு இருவர் காயமடைந்தனர். மோட்டார் சைக்கிளும் சேதமடைந்தது.

திருநெல்வேலியில் நடைபெற்ற இச்சம்பவத்தில் சாவகச்சேரியைச் சேர்ந்த தில்லையம்பலம் திவாகரன் (வயது 30), யேசுதாசன் ஞானகுலேந்திரன் (வயது 32) ஆகியோர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர். (ஒ-207)

## வர்த்தகர்களுடனான கலந்துரையாடல்

சங்கானை, பெப்.23

வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட வர்த்தகர்களுக்கான கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10மணிக்கு சங்கானை கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் முக்கிய நிர்வாக விடயங்களும், புதிய தீர்மானங்களும் எடுக்கப்படவுள்ளதால் சகல வர்த்தகர்களையும் தவாறது சமுகமளிக்குமாறு சபையின் செயலாளர் எஸ்.புத்திரசிகாமணி கேட்டுள்ளார்.

(ஒ-29)


### கணக்கு லிகிதர் தேவை

யாழ்ப்பாணத்தில் வியாபார நிலையம் ஒன்றிற்கு கணக்கு எழுதத் தெரிந்த ஆண் தேவை. (யாழ். மாநகர எல்லைக்குள் வசிப்பவர் ஓய்வு பெற்றவர் விரும்பத்தக்கது.

தொடர்பு: 021 222 5666
0776569764

### வீடு, வளவு விற்பனைக்கு

அச்சுவேலி தெற்கு, ஆஸ்பத்திரி வீதியில் நான்கு பரப்புக் காணியுடன் கூடிய வீடு வளவு விற்பனைக்குண்டு.

தொடர்பு : பொ. தெட்சணாமூர்த்தி
சிவன் வீதி, ஆவரங்கால், புத்தூர்.
T.P. 0776601929 (C/565077)

### தேவை

சிங்களம் நன்கு தெரிந்த, கொழும்பு - தம்புள்ள வீதிகளில் நன்கு பரிட்சயமுள்ள சாரதி தேவை.

சி. மயூரதன்
ஆயக்கடவை பிள்ளையார் கோயிலடி,
புன்னாலைக்கட்டுவன்.
தொ. பேசி 0771042120 (94961)

### வீடு, வளவு விற்பனைக்கு

No.61, குருசோ வீதி, கண்டுக்குளியில் 3 பரப்புக் [illegible]
[illegible] விற்பனைக்குண்டு.
தொடர்பு: S.S.நாதன் No.167 [illegible]
கண்டுக்குளி, யாழ்ப்பாணம். தொ.பே:0776146434

## லாலா நீல சலவைத்தூள்

வெள்ளை உடுப்புகளுக்கு நீலம் போடுவதற்கு செலவு செய்யத் தேவையில்லை. உங்கள் தேவைக்கு ஏற்றபடி அளவாகப் பாவிக்கலாம்.
எமது அன்பான மாணவர்களே !
பாவித்து உண்மையை தெரிவு செய்யும் பொறுப்பு உங்களிடம் .....

லாலா சோப் தொழிலகம்,
அச்சுவேலி.


## மரண அறிவித்தல்கள்

### முருகேசு பாக்கியம்

காரைநகர், கோவளத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு பாக்கியம் நேற்று (22.02.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் முருகேசுவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, ஜெயலட்சுமி மற்றும் அன்னலட்சுமி, விஜியலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும், இலம்போதரராசா (கொழும்பு), குமாரசுவாமி (மயூரா அழகு மாடம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், மயூரன், கஸ்தூரி ஆகியோரின் அருமைப் பேத்தியும், காலஞ்சென்ற கனகம்மா மற்றும் பத்மநாதன, இராசதுரை (நாவலப்பிட்டி), காலஞ்சென்ற புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.02.2010) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோவளம்,
காரைநகர். (94962) தகவல்: பிள்ளைகள்.

### விஸ்வலிங்கம் தவமணி (மணி)



மல்லாகம், டிப்போ வீதியைப் பிறப்பிடமாகவும் கன்னாதிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வலிங்கம் தவமணி (மணி) நேற்று (22.02.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரிப்பிள்ளை - இரத்தினம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், விஸ்வலிங்கத்தின் அன்பு மனைவியும் சுகந்தினி, அமரர் நிசாந்தன், சுதர்சினி ஆகியோரின் அன்புத் தாயாரும் பாஸ்கரன், இராசகுமார் ஆகியோரின் மாமியாரும், பேபினியின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான தவராசா, யோகராசா, தியாகராசா, தங்கராசா மற்றும் ஆறுமுகராசா (சின்ராசு), சிறிஸ்கந்தராசா (சிறி), இரஞ்சிதமலர் (இரஞ்சி - ஜேர்மனி), ஜெயராசா (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் நாகேஸ்வரி (கொழும்பு), நாகேஸ்வரி (நவாலி), சிவனேஸ்வரி (கொழும்பு), இராஜேஸ்வரி, கேதீஸ்வரன் (ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், இராசநாயகம் மற்றும் கனகம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.02.2010) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

128, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம். (94963) தகவல்: கணவர், பிள்ளைகள், மருமக்கள்.

### சின்னத்தம்பி குணரத்தினம்



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், வவுனியாவில் வசித்தவரும், சுன்னாகத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி குணரத்தினம் நேற்று (22.02.2010) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - இலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், சிவகுரு - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சிவனேஸ்வரியின் அன்புக் கணவரும், மதுஷன், தர்ஷாந் (வர்த்தகப்பிரிவு, விபுலானந்தாக் கல்லூரி, வவுனியா), துளக்ஷிகா (யா/இராமநாதன் கல்லூரி, மருதனார் மடம்), விதுர்ஷனா (யா/இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கனகரத்தினம், தர்மரத்தினம் (அதிபர், நீர்வேலி றோ.க.த.பாடசாலை), தர்மராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சித்திராதேவி, சிவனேசன் (ஜேர்மனி), சிவானந்தன் (நீர் விநியோக சபை, வவுனியா), சிவகுமார் (அரச சார்பற்ற நிறுவன உணவுக் களஞ்சியம், கோப்பாய்), பூமணி, கிரிஷா (ஆசிரியை, நீர்வேலி சீ.சீ.த.க.பாடசாலை), யோகராசா (வலி.கிழ.தென்பகுதி.ப.நோ.கூ.சங்கம்- நீர்வேலி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.02.2010) செவ்வாய்க்கிழமை மு.ப. 11மணிகு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம். (94959) தகவல்: மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்பாய், நீர்வேலிப் பிரதேசங்களில் சட்ட விரோத மின்பாவனை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், பெப்.23

கோப்பாய், நீர்வேலி பிரதேசங்களில் சட்ட விரோத மின் பாவனை அதிகரித்துள்ளதால் தாம் மிகவும் பாதிப்படைவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனைத் தடுப்பதற்கு மின்சார சபை உத்தியோகத்தர்கள் பல்வேறு உத்திகளைக் கையாண்ட போதிலும், அவற்றிற்கெல்லாம் போக்குக் காட்டி விட்டு பல விதமான தந்திரங்களைக் கையாண்டு சட்ட விரோத மின்பாவனை தடையின்றித் தொடர்வதாகவும் தெரிய வருகின்றது.

மின்சார சபையினர் திடீர் திடீரென வந்து பரிசோதனைகளை மேற்கொள்ளும் சமயங்களில் கைத் தொலைபேசி மூலம் செய்தி பரவி ஏனையோர் உஷாரடைந்து தந்திரமாகத் தப்பித்துக் கொள்வதும் உண்டு.

இந்த சட்ட விரோத மின் பாவனை காரணமாக மின்சாதனங்கள் பழுதடைவதோடு அடிக்கடி மின் தடைகளும் ஏற்படுகின்றன.

இதன் காரணமாக சட்ட பூர்வமாக மின்னிணைப்புப் பெற்றவர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகி பரிதாப நிலையில் உள்ளனர். (ரி-72)

# ‘நெஸ்டமோல்ட்’ அனுசரணையுடன் யாழ்ப்பாணத்தில் ‘மினி’ மரதனோட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.23

‘நெஸ்டமோல்ட்’ நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட மெய்வன்மைச் சங்கம் நடத்தும் மினி மரதன் போட்டி எதிர்வரும் மார்ச் மாதம் 6 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இந்த மினி மரதன் ஒட்டப் போட்டிக்கான சகல ஏற்பாடுகளை யாழ்.மாவட்ட மெய்வன்மைச்சங்கம் மேற்கொண்டு வருகின்றது.

இதுகுறித்து யாழ்.மாவட்ட மெய்வன்மைச் சங்கச் செயலாளர் ரமணன் தெரிவித்தவை வருமாறு:-

இந்த போட்டி சர்வதேச தன்மை வாய்ந்தது. இதில் யாழ்.மாவட்ட பாடசாலைச் சேர்ந்த 14 வயதுக்குட்பட்ட இரு பிரிவுகளாக மாணவர்களுக்கும் திறந்த பிரிவாகக் கழக வீரர்களுக்குப் இப்போட்டி நடத்தப்படவுள்ளது.

இந்த போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்களும் போட்டித் தூரத்தினை நிறைவு செய்யும் வீரர்களுக்கு சிறப்பு பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

மினி மரதன் ஒட்ட போட்டியின் சிறப்பு அம்சமாக ஒவ்வொரு கிலோமீற்றர் நிறைவிலும் தாகசாந்தி நிலையங்களும் அமைக்கப்படவுள்ளன.

போட்டிக்கான ஏற்பாட்டுக்காக 50 லட்சம் ரூபாவரை செலவிடப்படவுள் ளது-என்றார். (4-23)

# அனல்மின் இறுதிக்கட்டத்தை ஜனாதிபதி திறந்துவைப்பார்

கொழும்பு, பெப். 22

கெரவலபிட்டிய அனல் மின் உற்பத்தி நிலையத்தின் இறுதிக் கட்டத்தை எதிர்வரும் 25 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திறந்து வைக்கவுள்ளார்.

இதன் மூலம் 100 மெகாவோட் மின்சாரத்தை உற்பத்தி செய்யலாம் என மின்சக்தி எரிசக்தி அமைச்சு தெரிவிக்கின்றது.

இந்தத் திட்டத்தின் மூலமான முழுமையான மின்சார உற்பத்தி 300 மெகா வோட் ஆகும். கடந்த வருடம் திறந்து வைக்கப்பட்ட இதன் முதல் கட்டத்தின் மூலம் 200 மெகாவோட் உற்பத்தி ஏற்கனவே இடம்பெற்று வருகின்றது. இந்தத் திட்டத்தின் மூலம் நாட்டின் மின்சாரத் தேவையின் 20 வீதம் கிடைக்கிறது எனவும் இதனடிப்படையில் வருடத்துக்கு 180 கோடி அலகு மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடிகிறது எனவும் தெரியவருகின்றது. (சி)



சீடா நிறுவனத்தின் நிதியுதவியடன் ‘கெயர்’ சர்வதேச நிறுவனத்தினரால் அமுல்படுத்தப் பட்டு வரும் ‘லிவ்ற்2’ திட்டத்தின்கீழ் நாவற்குழி கிழக்கு சான்றோர் சனசமூக நிலையத்துடனான சமூக முன்னெடுத்தல் குழு அங்கத்தவர்களை ‘கெயர்’ நிறுவனம் அண்மையில் சந்தித்தது.

இந்நிகழ்வில் கனேடியத் தூதுவர் புறூஸ் லெவி மேற்படி குழுவினருடன் கலந்துரையாடுவதனை முதற்படத்திலும் குழு அங்கத்தவர்களுடன் கெயர் நிறுவனப் பிரதிநிதிகள் நிற்பதனை இரண்டாவது படத்திலும் காணலாம். (படங்கள்:- த[illegible])

# சாவகச்சேரி அஞ்சல் அலுவலகத்தின் செயற்பாடுகள் விஸ்தரிக்கப்படவில்லை

யாழ்ப்பாணம், பெப்.23

சாவகச்சேரி அஞ்சல் அலுவலகம் முதலாம் தர அஞ்சல் அலுவலகமாக உள்ள போதிலும் அதன் செயற்பாடுகள் இன்னமும் விஸ்தரிக்கப்படாத நிலையில் உள்ளது.

கடந்த 2000ஆம் ஆண்டு யுத்த அனர்த்தங்களின்போது முழுமையான சேதமடைந்த அஞ்சல் அலுவலக கட்டடம் 2004ஆம் ஆண்டு அனைத்து சேவைகளும் உள்ளடக்கியதாக புனரமைக்கப்பட்டது.

எனினும் இப்பிரிவுகளுக்கென ஒதுக்கப்பட்ட பிரிவுகள் இன்னமும் செயற்படாமல் உள்ளன. இதனால் இப்பகுதி மக்கள் தமது தேவைகளுக்கான தனியார் நிறுவனங்களிலும் யாழ்ப்பாணம் அஞ்சல் அலுவலகத்திற்கும் செல்லவேண்டிய நிலையில் உள்ளதாகப் பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (50-207)

# பிஞ்சிலேயே விற்பனைக்கு வரும் யாழ்ப்பாணத்து முருங்கைக்காய்கள்

யாழ்ப்பாணம், பெப்.23

யாழ்.குடாநாட்டில் முருங்கைக்காய்க்கு திடீரெனப் பெரும் மவுசு ஏற்பட்டுள்ளது.

தற்போது முருங்கைக்காய் சீசன் ஆரம்பமாகியதை அடுத்து அவற்றினை முற்ற விடாமல் சிலர் பிஞ்சாகவே பிடுங்கி வந்து விற்பனை சந்தைகளில் செய்து வருகின்றனர்.

சுற்றுலாப் பயணிகள் இந்த முருங்கைக்காயைக் கண்டதும் என்ன விலை கொடுத்தாலும் வாங்கிச் செல்வதில் ஆர்வம் காட்டி வருகின்றமையாலேயே இவ்வாறு பிஞ்சிலேயே முருங்கைக்காய்களை விற்பனை செய்து விடுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

முருங்கைக்காய்க் கிராக்கியால் அதன் விலையும் ஏறுமுகமாகவே உள்ளது.

கிலோ 500 ரூபா முதல் 600 ரூபா வரை முருங்கைக்காய் விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. (04-224)

# மக்கள் வங்கியின் இரண்டு கிளைகளின் ‘ஒன்லைன்’ சேவை நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம் பெப் 23

யாழ்ப்பாணத்திலுள்ள இரண்டு மக்கள் வங்கிக் கிளைகளின் மத்திய மயப்படுத்தப்பட்ட தரம் உயர்த்திய கணனி வங்கிச் சேவைகள் (ஒன்லைன்) நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டன.

நேற்று காலை 9 மணியளவில் யாழ். பல்கலைக்கழக கிளையிலும் முற்பகல் 11 மணிக்கு யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளையிலும் இந்த சேவைக்கான ஆரம்ப நிகழ்வுகள் இடம் பெற்றன.

யாழ் . பல்கலைக்கழக கிளையின் முகாமையாளர் நாகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சண்முகலிங்கமும் சிறப்பு விருந்தினர்களாக மக்கள் வங்கியின் சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் என்.வசந்தகுமார், வட பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் ரி.கே ஆனந்தராஜா, யாழ். பிராந்திய முகாமையாளர் எஸ்.பத்மநாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கணனி மயப்படுத்தப்பட்ட இந்தக் கிளையில் வர்த்தக பிரமுகர் எஸ்.சிறிஸ்கந்தராஜா முதல் பண வைப்பினைச் செய்ய பிரதம விருந்தினர் பேராசிரியர் என் சண்முகலிங்கன் அதனைப் பெற்று ஆரம்பித்து வைத்தார்.

யாழ்ப்பாண மக்கள் வங்கியின் ஸ்தாபகரும் முகாமையாளருமான அமரர் ஆழ்வாப்பிள்ளை சிற்சபேசன் நினைவாக அவரது உருவப்படம் திரை நீக்கும் நிகழ்வு இடம் பெற்றது. யாழ்பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளையினால் அந்த உருவப்படம் வைக்கப்பட்டு அஞ்சலி உரையும் நிகழ்த்தப்பட்டது.

இந்த நிகழ்வுகளில் யாழ்பல்கலைக்கழக பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், வங்கியின் முகாமையாளர்கள், பணியாளர்கள், வாடிக்கையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக தொழிலதிபர் ஈ.எஸ்.பி நாகரத்தினம் கலந்து கொண்டார். யாழ் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையில் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்ட அனைவரும் இந்தக் கிளையிலும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

இந்தக் கிளையில் தொழிலதிபர் ஈ.எஸ்.பி.நாகரத்தினம் முதல் பண வைப்பினைச் செய்ய மக்கள் வங்கியின் சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் என்.வசந்தகுமார் அதனைப் பெற்று ஆரம்பித்து வைத்தார்.

இந்தக்கிளையின் நிகழ்வில் முகாமையாளர்கள், பணியாளர்கள், வாடிக்கையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (50-14)

(படங்கள்: 19 ஆம் பக்கத்தில்)



நெடுந்தீவு கடற்தொழில் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்திற்கென ஐ.ஓ.எம் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட கடல் உணவு பாதுகாக்கும் குளிரூட்டி அறை பாவனைக்கென அண்மையில் கையளிக்கப்பட்ட நிகழ்வில் நெடுந்தீவு பங்குத்தந்தை அருட்திரு ச.அமலராஜ உரையாற்றுவதை முதலாவது படத்திலும், நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் என்.திருலிங்கநாதன் பெயர் பலகையைத் திரைநீக்கம் செய்து வைப்பதை இரண்டாவது படத்திலும், ஐ.ஓ.எம் நிறுவன திட்ட முகாமையாளர் பற்றிக் சறிக்னன் குளிர் அறையைத் திறந்து வைத்து ஆளியை அழுத்தி இயந்திரத்தை இயக்குவதை அடுத்துவரும் இரு படங்களிலும் காணலாம். (படங்கள்:- லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



தேச நிர்மாணத்துறை பொறியியல் சேவைகள் அமைச்சால் மேசன், தச்சுத் தொழிலாளர்களுக்கான தேசிய தொழில் தகைமைச் சான்றிதழ் வழங்குவதற்கான செயன்முறைத் தேர்வு அண்மையில் பண்ணை அரசினர் வைத்தியசாலையில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.நேர்முகத் தேர்வின்போது மேசன் தொழிலாளர்கள் செயன்முறைப் பயிற்சியில் ஈடுபடுவதைப் படங்களிலும் காணலாம். *(படங்கள்: எம்)*

# முன்பள்ளிகளுக்கு உரிய வசதிகளை ஏற்படுத்த தொண்டு நிறுவனங்கள் முன்வரவேண்டும்

## வலி.மேற்கு பிரதேச சபைச் செயலாளர் உரை

யாழ்ப்பாணம், பெப்.23

முன்பள்ளி ஆசிரியர்களின் தனித்துவ செயற்பாட்டினால் சங்கானை உப -அலுவலகத்திற்குட்பட்ட முன்பள்ளி மாணவர்களின் செயற்பாடுகளும் தனித்துவமாக இருப்பதனைக் காணக்கூடியதாக உள்ளது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள முன்பள்ளி ஆசிரியர்கள் சொற்ப வேதனத்துடன் மாணவர்களின் அபிவிருத்தியில் முழுமையாகச் செயற்படுகின்றனர்.

இவ்வாறான ஆசிரியர்களுக்கு விரைவில் சிறந்த எதிர்காலம் உருவாகும்-இவ்வாறு வலி.மேற்கு பிரதேச சபைச் செயலாளர் சு.புத்திசிகாமணி தெரிவித்தார்.

சங்கானை உப அலுவலகத்திற்குட்பட்ட இந்து இளைஞர் மன்றத்தின் முன்பள்ளி பாடசாலையின் 'மலரும் மொட்டுக்கள்-2010' நிகழ்வு, மன்றத்தின் தலைவர் பா.விஜயகுமார் தலைமையில் இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட சு.புத்திசிகாமணி மேலும் பேசுகையில்:-

யாழ்.மாவட்டத்தில் பல சர்வதேச நிறுவனங்கள் குடாநாட்டு அபிவிருத்திக்காகச் செயற்படுகின்றன.

ஆனால் முன்பள்ளி ஆசிரியர்களின் அபிவிருததி, அவர்களின் வேதனம் மற்றும் முன்பள்ளிகளின் உட்கட்டுமானம் தொடர்பாக முன்வைக்கும் எமது முன்மொழிவுகள், கடிதங்களுக்குப் பெரும்பாலான சர்வதேச நிறுவனங்கள் பங்காற்றவில்லை.

எமது பிரதேச சபைக்குட்பட்ட வளம் குறைந்த முன்பள்ளிகளின் விவரம் எம்மிடம் உள்ளன. ஆனால் சபையில் நிதி வளம் பூச்சியமாக உள்ளது. இந்நிலையில் ஆரம்பக் கல்வியை வளர்க்கும் முன்பள்ளிகளுக்கு அனைத்து தொண்டு நிறுவனங்களும் உதவ முன்வர வேண்டும்- என்றார். சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட சுழிபுரம் பிரதேச சபை உள்ளூராட்சி உதவியாளர் செ.ரமேஷ் சிறுவர்களுக்கான சான்றிதழ் மற்றும் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார். (04-302)

# கோப்பாய் பிரதேச வைத்தியசாலையில் குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு அமைக்க கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.23

கோப்பாய் பிரதேச வைத்தியசாலையில் குழந்தைகளுக்கென தனியான சிகிச்சை அலகினை ஆரம்பிக்குமாறு இப்பிரதேச மக்கள் சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்த மருந்துவமனையில் தற்போது ஏனைய நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்கப்படும் விடுதிகளிலேயே குழந்தைகளும் அனுமதிக்கப்படுவதால் பல்வேறு சிரமங்கள் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கோப்பாய் மருத்துவமனை தற்போது பிரதேச மருத்துவமனையாகத் தரமுயர்த்தப்பட்டதுடன் பற்சிகிச்சைப்பிரிவு, அவசர சிகிச்சைப் பிரிவு, பொதுமருத்துவம், மாதாந்த கிளினிக்குகள், காசநோயாளர் பிரிவு என பல்வேறு பிரிவுகளில் சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன. அத்துடன் நான்கு பொது மருத்துவர்களும், ஒரு பல் மருத்துவரும் தொடர்ச்சியாகச் சிறப்பாகப் பணி புரிகின்றனர்.

இருபாலை, கோப்பாய், ஊரெழு, நீர்வேலி, சிறுப்பிட்டிப் பிரதேச மக்களுக்கு இதுவே பிரதான வைத்திய சாலை என்பது குறிப்பிடத்தக்கது. (ரி-72)

# அம்மைநோய் பரவுகின்றது

நவாலி,பெப்.23

ஆனைக்கோட்டை, நவாலி மற்றும் சில பகுதிகளில் கூகைக் கட்டு, அம்மை நோய் என்பன மிக வேகமாகப் பரவி வருகின்றன.

இதனால் சிறியோர் முதல் பெரியோர் வரை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் பலர் மானிப்பாய் அரசினர் வைத்தியசாலைக்குச் சிகிச்சை பெறச் செல்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (50-100)


**வேலையாள் தேவை**

உரப்பைக் கடைக்கு வேலையாள்கள் தேவை. முன் அனுபவம் தேவை இல்லை. வேலை பழகுபவரும் வரலாம் (நிரந்தரவேலை)

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
ஸ்ரீ இராமராஜ் அன்சன்ஸ்
603,K.K.S Road,யாழ்ப்பாணம்
T.P..0212225986
(94956)

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**

குமரகோட்டம், அதிகாரி லேன், கோப்பாய் மத்தி. என்னும் முகவரியில் 7 பரப்பு 05 குளி காணியுடன் வீடு விற்பனைக் குண்டு.
தொ.பே:222 5102, 0777551431
நேரடித் தொடர்புக்கு:
இல.337 1/1, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.
(ரி/565073)

**விற்பனைக்கு**

Automatic Portable மின்சாரத்தில் இயங்கும் சிங்கர் தையல் மெசின் (Zig Zag) மற்றும் Air Cooler & Heater என்பன விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0778089945

**இலங்கை வங்கி**
**ஏல விற்பனை அறிவித்தல்**

1968 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 22 ஆம் பிரிவு (397 ஆம் அத்தி.) ன் கீழ் விற்பனை அறிவித்தல்.

கடன் தொடர்பு இ: 2889204, 6987860

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 17.04.2009 ஆம் திகதி 1598 ஆம் இலக்க வர்த்தகமானியிலும் 08.04.2009 ஆம் திகதி டெய்லி நியூஸ், தினமின, தினகரன் ஆகிய பத்திரிகைளிலும் வெளியிடப்பட்ட அறி வித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிடவேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விவரித்த சொத்தையும் நிலமனையையும் இல.692, கே.கே. எஸ்.றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு. கே.பி.பாலகிருஷ்ணன் 20.03.2010 ஆம் திகதி மு.ப.10.30 மணிக்கு அதே இடத்தில் வைத்துப் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டத்திலும் பிரிவிலும் நல்லூர் பிரிவில் திருநெல்வேலி இறைவரி உத்தியோகத்தர் பிரிவில் 'அருமகலட்டி' என அழைக்கப்படும் மற்றும் பெயருடைய ஆறரை லாச்சம் (6 ½லாச்சம் V.C ) விஸ்தீரணமுடைய காணி. இவ் ஆறரை லாச்சங்களிலிருந்து (6 ½லாச்சம் V.C ) பிரிக்கப்பட்ட ஒருபகுதி வடக்குப் பக்கத்தில் மூன்றரை லாச்சங்கள் (03½லாச்சங்கள் V.C ) ஏற்கனவே சீதனம் வழங்கப்பட்டுள்ளதுடன் தெற்குப் பக்கமாக காணியின் மீதிப்பாகம் மூன்று லாச்சங்கள் (3 லாச்சங்கள் V.C ) விஸ்தீரணமுடைய காணியும் வீடும் பயிரிடப்பட்ட மற்றும் இயற் கைப் பயிர்களும் வடக்கு எல்லையில் காணப்படும் கிணற்றின் பங்கும் வழி/வாய்க்கால் பாவிப்புரித்தும் ஆகும். இக்காணி யாழ்ப்பாணம் உத்தரவுபெற்ற நில அளவையாளர் R.ரத்னராஜா வரைந்த 20.06.2005 திகதியிட்ட அண்மைய அளவை வரைபடம் இல.1064 இன் கீழ் துண்டு 01 என விவரித்துள்ளதுடன் மூன்று லாச்சங்களும் பதினாறு தசம் எட்டு ஒன்று குழிகளும் (3 லாச்சங்களும் V.C 16.81 குழிகளும் ) விஸ்தீரணமுடையது. இது நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள் வட்டாரம் இல.09 இல் யாழ்ப்பாணம், ஆடியபாதம் வீதி, வரி மதிப்பிலக்கம் 116/2 ஐக் கொண்டது. இக்காணியின் எல்லைகளாவன:- கிழக்கில் P.சேனாதிராஜாவின் ஆதனமும், வடக்கில் கணேசனின் மனைவி குமுதினியின் ஆதனமும், மேற்கில் ஒழுங் கையும், தெற்கில் P.சேனாதிராஜாவின் ஆதனமும் எல்லைகளாகக் கொண்டு இவ் எல்லைக்குள் அடங்கும் சகலதும் ஆகும். இக்காணி யாழ்ப்பாணம் காணிப்ப திவகத்தில் தொகுதி D 356பக்கம் 150 இல் பதிவு செய்யப்பட்டது.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி.

இலங்கை வங்கி,
திருநெல்வேலி.
(சி/565075)

E.பிரேமராஜன்
கிளை முகாமையாளர்.





MINI INFOTEL JAFFNA

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்துடன் ஓர் உதயம்
இன்போட்டல்
தகவல் தொழில்நுட்ப (IT) கண்காட்சி & தொழில் சந்தை
26 - 28 பெப்ரவரி 2010
வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

கண்காட்சியில் பங்குகொள்ளும் அனைவருக்கும் பரிசுகள் காத்திருக்கின்றன.
1ம் பரிசு - ரூபா 15,000 மற்றும் Sports Bicycle courtesy of Tigo
2ம் பரிசு - ரூபா 10,000
3ம் பரிசு - ரூபா 7,500
கண்காட்சியில் பங்குகொள்ளும் குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்படும் அதிர்ஸ்டசாலிக்கு கணனி வழங்கப்படும்.
Tigo mobile FREE SIM பதிவுசெய்யும் முதல் 150 பேருக்கு இலவச *branded T-Shirt* வழங்கப்படும்.
முதல் மூன்று பரிசில்களைப் பெறுபவர்களுக்கு *Champion Trophy* மற்றும் சான்றிதழ் வழங்கப்படும்.





மாபெரும் சைக்கிள் மரதன் போட்டி
26 பெப்ரவரி 2010
தொடர்பு : சத்தியன் - 077 4598026
ரூபன் - 021 2226826
Concept

ORGANIZED BY FITIS
PINNACLE SPONSOR tigo
SPONSOR intel
SPONSOR Microsoft
SUPPORTED BY ICTA Ideas actioned
ELECTRONIC MEDIA SPONSOR சக்தி சக்தி
PRINT MEDIA SPONSOR


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அரச சேவையில் இணைக்கப்படவேண்டும்

## ஊவா மாகாணசபைபை உறுப்பினர் வலியுறுத்து

கொழும்பு,பெப். 23

''சமுர்த்தி அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் செயல்பட்டுவரும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் முகாமையாளர்களை நிரந்தர அரச சேவையில் ஈடுபடுத்தி, ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தில் அவர்களை இணைத்துக்கொள்ளும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படல் வேண்டும் என ஊவா மாகாணசபை மூலம் ஜனாதிபதியை வலியுறுத்தவும் வேண்டும்.''

- இவ்வாறு ஊவா மாகாணசபையின் ஆளும் கட்சி உறுப்பினர் விஜித்த பேருகொட, ஊவா மாகாணசபை அமர்வின் போது, பிரேரணையொன்றினைச் சமர்ப்பித்து உரையாற்றுகையில் தெரிவித்தார்.

சபைத் தலைவர் ரோகண புஸ்பகுமார தலைமையில் சபை மண்டபத்தில் சபை அமர்வு இடம்பெற்றது. சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் விஜித்த பேருகொட தொடர்ந்து பேசுகையில் தெரிவித்தவை வருமாறு:-

1994 ஆம் ஆண்டு நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு, 1995 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கையின் ஏழ்மையை அகற்றும் வகையில்,சமுர்த்தி வேலைத்திட்டத்தை அறிமுகப்படுத்தி, நடைமுறைப்படுத்தியது. இத்திட்டத்தின் மூலம் 18 லட்சம் ஏழைக் குடும்பங்களின் ஏழ்மையை போக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

மேலும், இச்சமுர்த்தி வேலைத்திட்டத்தின் கீழ் சுயதொழில்,சமூகப்பாதுகாப்பு,புலமைப் பரிசில், சமூக அபிவிருத்தி பொருளாதார மேம்பாடு, வாழ்வாதாரம்,உட்கட்டமைப்பு ஆகியசெயற்பாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இது போன்ற முன்னேற்றகரமான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தி வருபவர்கள் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் , சமுர்த்தி முகாமையாளர்களுமாவர்.

இவர்களின் பாரிய அர்ப்பணிப்புகளும், தியாகங்களுமே சமுர்த்தி வேலைத்திட்டம் வெற்றியடைவதற்கான மூல காரணமாகும். கடந்த 14 வருட காலமாகவே இந்த அர்ப்பணிப்பும், தியாகங்களும் தொடர்ந்த வண்ணமுள்ளன. எனவே, சமுர்த்தி பயனாளிகளைவிட, கூடுதல் சேவையாற்றி வரும் சமுர்த்தி முகாமையாளர்களும் நிரந்தர அரச சேவையில் உள்வாங்கப்படு வதுடன், ஓய்வுதியத் திட்டத்திலும் இணைத் துக்கொள்ளப்படல் வேண்டும் - என்றார். (ளி)

# தலவாக்கலை விபத்தில் ஏழு மாணவர்கள் காயம்

தலவாக்கலை மேல்கொத்மலை புதிய வீடமைப்புத் திட்டத்திற்கு அருகில் நேற்றுக்காலை 8 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் பாடசாலை மாணவர்கள் உட்பட எட்டுப்பேர் காயமடைந்துள்ளனர்.

மாணவர்களை ஏற்றிச் சென்ற ஓட்டோ ஒன்று பள்ளத்தில் வீழ்ந்ததில் பாடசாலை மாணவர்கள் 7 பேரும் ஓட்டோச் சாரதியும் காயமடைந்துள்ளனனத்தலவாக்கலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் சிறுகாயங்களுக்குட்பட்ட எட்டுப்பேரும் வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டுள்ளனர் என லிந்துலை வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர். ஆர்.சுரங்க சித்ரானந்த தெரிவித்துள்ளார்.

இந்த விபத்து தொடர்பான விசாரணைகளை தலவாக்கலைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ளி)




# மாத்தளை மாணவருக்கு வழங்கிய மரக்கறிப் பச்சடியில் பற்றீரியாக்கள்

மாத்தளை ,பெப். 23

மாத்தளையில் உணவு விசமடைந்ததால் மாணவி ஒருவர் பலியானதுடன், மேலும் பல மாணவர்கள் நோய்வாய்ப்பட்ட சம்பவம் தொடர்பில் உணவின் மாதிரிகளை பரிசோதனை செய்ததில் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட மரக்கறிப் பச்சடியில் உள்ள பற்றீரியாக்களே உணவு விசமடையக் காரணம் என வைத்திய ஆய்வுநிலையம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

இந்த உணவு மாதிரிகளை பரிசோதனைக் குட்படுத்திய பொரளை வைத்திய ஆய்வுநிலையம் இதனை உறுதி செய்துள்ளது என மாத்தளை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் அநுரதிஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கை தற்போது மாவட்ட சுகாதார சேவையாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

மாணவர்களுக்கு வழங்கப்பட்ட விசமடைந்த பச்சடியில் கெக்கரிக்காய், கரட், பெரிய வெங்காயம் மற்றும் மேலும் சில மரக்கறிகளும் இருந்தன என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த விசமடைந்த உணவை உயிரிழந்த மாணவி உட்பட மேலும் மூன்று பாடசாலைகளைச் சேர்ந்த 168 மாணவர்கள் உட்கொண்டு நோய்வாய்ப்பட்டனர்.

இவர்களுள் 120 மாணவர்கள்வரை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். ஏனைய 48 மாணவர்கள் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுக்கொண்டனர்.

மாத்தளை மாவட்டப் பாடசாலைகளுக்கு உணவு விநியோகிப்பவர்களின் உணவு மாதிரிகளைப் பரிசோதித்து அது தொடர்பான அறிக்கைகளை அதிபர்களிடம் சமர்ப்பிக்குமாறு பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது - என அவர்மேலும் தெரிவித்துள்ளார். (ளி)

# கேகாலையில் கபீர் ஹாஸிம்

எதிர்வரும் பொதுத் தேர்தலில் கேகாலை மாவட்டத்தில் சிறுபான்மையோர் சார்பில் முன்னாள் நாடாளுமன்ற அங்கத்தவரும் மாவனல்லைத் தொகுதி ஐ.தே.கட்சி அமைப்பாளருமான கபீர் ஹாஸிம் போட்டியிடுகின்றமை உறுதியாகியுள்ளதாகத் தெவிக்கப்படுகின்றது.

ரணில் அரசில் அமைச்சர்களில் ஒருவராக விளங்கிய இவர் ஐ.தே.கட்சியின் பிரபல பேச்சாளர்களில் ஒருவராகவும் விளங்குகிறார்.

கேகாலை மாவட்டத்தில் சுமார் 35,000 முஸ்லிம் வாக்காளர்களும் கணிசமானதொகை தமிழ் வாக்காளர்களும் வசிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ளி)

# கித்துல் பண்டங்களின் விலைகள் அதிகரிப்பு

கேகாலை மாவட்டத்தில் கித்துல் பாணி மற்றும் கித்துல் கருப்பட்டி வகைகளின் விலைகள் அதிகரிப்பதால் அவற்றை உற்பத்தி செய்வோர் நல்ல வருமானம் பெற்று வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கேகாலை, ருவான்வெல்ல, புளத்கொஹுப் பிட்டிய போன்ற பகுதிகளில் கித்துல் உற்பத்தியில் பலர் ஈடுபட்டுள்ளனர். (ளி)

# லக்சபான தோட்டத்தில் மாணவி தேக்கத்தில் பாய்ந்து உயிரிழப்பு

மஸ்கெலியா ,பெப். 23

நல்லதண்ணீர் , லக்சபான தோட்ட வாழமலைப்பிரிவில் உள்ள நீர்த்தேக்கத்தில் பாய்ந்து பாடசாலை மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார் என நல்லதண்ணீர் பொலிஸார் தெரிவித்தனர்.

வாழமலைப் பிரிவின் நோட்ட பிரிஷ் கணபதி தமிழ் மகா வித்தியாலயத் தில் தரம் பத்தில் கல்வி பயிலும் மாணவி யான சிவசுப்பிரமணியம் சிவமலர் என்பவரே இவ்வாறு உரிழிந்துள்ளார்.

இந்த மரணம் சம்பந்தமாக ஹற்றன் நீதிமன்ற நீதிவான் சந்துவித்தான சம்பவம் நடைபெற்ற இடத்திற்குச்சென்று மரணவிசாரணை மேற்கொண்டதுடன், சடலத்தை நாவலப்பிட்டி ஆதார வைத்தியசாலை சட்டவைத்திய அதிகாரியால் பரிசோதனைக்கு உட்படுத்தி நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்குமாறும் உத்தரவிட்டுள்ளார். நல்லதண்ணீர் பொலிஸ் நிலைய அதிகாரி பத்மகுமார ஹெட்டி ஆராச்சி உத்தரவின் பேரில் சார்ஜன் இந்திரகிரி மேலதிகவிசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார். (ளி)

# சுகாதார நிலையங்களின் சீரின்மையால் கர்ப்பிணிகளும் குழந்தைகளும் அவதி

## மத்திய மாகாணத்தில்

கண்டி மாவட்டத்தில் கர்ப்பிணித் தாய்மார் மற்றும் குழந்தைகளின் நலன் பேணும் நோக்கில் கிராமிய ரீதியில் அமைக்கப்பட்டுள்ள சுகாதார மத்திய நிலையங்கள் மூலம் சீரான சேவைகள் கிட்டுவதில்லை என சம்பந்தப்பட்டவர்கள் விசனிக்கின்றனர்.

மத்திய மாகாணசபையின் நிர்வாகத்தின் கீழ் இயங்கிவரும் இந்த நிலையங்களுக்கான தண்ணீர் மற்றும் மின்சாரம் ஆகியவற்றின் கட்டணங்கள் உரிய காலத்தில் செலுத்தப்படாமையால் சம்பந்தப்பட்ட நிர்வாகங்கள் அவற்றைத் துண்டித்து விட்டதாலேயே இந்த அவலநிலை நிலவுகிறது என்றும் கூறப் படுகின்றது.

இதன்காரணமாக கர்ப்பிணித் தாய்மாரும், சிறு குழந்தைகளும் சிரமங்களுக்கு மத்தியில் பலமைல் தூரம் சென்றே சிகிச்சைப்பெற வேண்டி யநிலை ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் உடன் நடவடிக்கை மேற்கொண்டு இவற்றை நிவர்த்தி செய்யவேண்டும் - என்று பிரதேச வாசிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (ளி)

# எல்பிட்டியில் 15 வருடங்களில் 15 பாடசாலைகளுக்குப் பூட்டு!

கொழும்பு , பெப். 23

கடந்த 15 வருடங்களில் எல்பிட்டிய வலயக்கல்விப் பகுதிக்கு உட்பட்ட 15 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன எனத் தெரியவருகின்றது.

தென்மாகாணசபைக் கல்வியமைச்சின் உதாசீனப் போக்கும், சீரற்ற நிர்வாகமுமே இப்பாடசாலைகள் மூடப்பட்டமைக்கு பிரதான காரணங்களெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பாடசாலைகளுக்குத் தேவையான ஆசிரியர்களையும் மற்றும் உபகரணங்களையும் பெற்றுக்கொடுக்கத் தவறியதால் அவற்றைக் காலப்போக்கில் மூடிவிடும் நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது எனப் பிரதேசவாசிகள் விசனம் தெரிவித்தனர்.

இவ்வாறு மூடப்பட்ட பாடசாலைகள் கவனிப்பாரற்ற நிலையில் இருப்பதால் பெறுமதியான கட்டடங்களும் மற்றும் உடைமைகளும் சீருலைந்து போயுள்ளன.

சில பாடசாலைகள் முற்றாகப் புதர்களால் மூடப்பட்டு விட்டன. பெரும்பாலான கட்டடங்களில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர். அத்துடன் சில கட்டடங்கள் சட்டவிரோதச் செயல்களுக்கும் பயன்படுத்தப்படுகின்றன - எனப் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

தென்மாகாணசபையின் அசமந்தப் போக்கால் எல்பிட்டிய பிரதேசத்தில் மேலும் பல பாடசாலைகள் மூடப்படலாமெனவும், இதன்மூலம் இப்பிரதேச மாணவர்களின் எதிர்காலம் இருட்டடிப்புச் செய்யப்படுகின்றதெனவும் தெரிவிக்கும் பிரதேசவாசிகள், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் இவ்விடயத்தில் தலையிட்டு ஆவன செய்யவேண்டுமெனக் கோரிக்கை விடுத்துள்ளனர். (ளி)

# குழாய்மூலம் தண்ணீர் பெறுவதில் மாவனல்லை மக்களுக்குச் சிரமம்

மாவனல்லை நகரைச் சூழவுள்ள மேட்டு நிலப்பகுதிகளில் பகல் வேளை களில் குழாய் மூலம் தண்ணீர் கிடைப்பது அரிதாகவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் மஹாவத்த ,கல்கந்த வல்லதெனி போன்ற பகுதிவாழ் மக்கள் தண்ணீர் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் எனத் தெரிவிக்கின்றனர்.

இது பற்றி பிரதேசசபை அங்கத்தவர்கள் பலரும் பிரதேசசபைக் கூட்டங்களில் முறையிட்டும், பொதுமக்கள் கோரிக்கை விடுத்தும் இதுவரை சீரான தண்ணீர் கிடைக்க வில்லை என விசனிக்கப் படுகிறது. (ளி)

# விதைத் தட்டுப்பாட்டை நீக்க காய்கறி உற்பத்திக் கிராமங்கள்

கண்டி ,பெப் . 23

மத்திய மாகாணத்தில் சிறுபோகத்தில் மேற்கொள்ளப்படும் பயிர்ச்செய்கைகளின் போது விவசாயிகள் எதிர்நோக்கும் விதைத் தட்டுப்பாடுகளுக்குத் தீர்வுகாணும் முகமாக பத்துக் காய்கறி விதை உற்பத்திக் கிராமங் களை நிறுவ மத்திய மாகாண விவசாய மற்றும் கமநல சேவைகள் அமைச்சு நடவடிக்கை களை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

மாகாண விவசாய அமைச்சர் நிமல் பியதிஸ்ஸவின் ஆலோசனையின்பேரில் இவை நிறுவப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விதை உற்பத்திக் கிராமங்கள் மூலம் உரிய காலங்களில் நியாயவிலையில் தாராளமாக விதைகளைப் பெற்றுக்கொள்ள வழியேற்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கென கண்டி, மாத்தளை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் உருளைக்கிழங்குக்காக ஒன்பது விதை உற்பத்திக் கிராமங்களும், ஏனைய மரக்கறி வகைகளுக்கென ஒரு கிராமமும் என்ற அடிப்படையில் அமைக்கப்படவுள்ளன என அமைச்சு தெரிவித்துள்ளது. (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவானது எப்படி

முதலில் ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட் ஆகிய கட்சிகளுடன் சந்திப்புக்கள் நடைபெற்றன.

இந்த அமைப்புக்களிடம் மூன்று முக்கிய கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

1. இந்த அமைப்புக்கள் இனிமேல் சிறிலங்கா இராணுவத்தினருடன் சேர்ந்து இயங்கக் கூடாது.
2. அவர்களது இராணுவ பிரிவுகளைக் கலைத்து விட வேண்டும்.
3. தமிழ்த் தேசிய விடுதலையையும், அந்த விடுதலையை முன்னெடுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

ஊடகவியலாளர்களின் இந்த நிபந்தனைகள் தமிழ் ஆயுதக் குழுக்களை பெரிய அளவில் உணர்ச்சிவசப்படுத்தின.

அது என்ன ஏகப் பிரதிநிதித்துவம்? புலிகளும் விடுதலைக்காகப் போராடினார்கள். நாங்களும் விடுதலைக்காகப் போராடினோம். புலிகளை ஏகப் பிரதிநிதிகளாக ஒன்றும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறிவிட்டார் ரெலோ முதல்வர் சிறிகாந்தா.

மற்றய அமைப்புக்களின் உடனடி பிரதிபலிப்புக்களும் இப்படியாகத்தான் இருந்தது.

ஆனால் இவை அனைத்தையும் கடந்து, அவர்களுக்கு ஒரு மிகப் பெரிய பலவீனம் இருந்தது. அந்தப் பலவீனத்தின் மீது ஊடகவியலாளர்கள் தொடர்ந்து அடிக்க, அடிக்க, அந்த அமைப்புக்கள் கூட்டமைப்புப் பற்றி யோசிக்கத் தலைப்பட்டன.

இந்தியப் படைகளின் ஆக்கிரமிப்புக் காலகட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிராகக் களமிறக்கப்பட்ட, ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ, புளொட் போன்ற அமைப்புகள், 10 வருடங்கள் கடந்துவிட்டிருந்த நிலையிலும் புலிவாலைப் பிடித்த கதையாக அந்தப் பாதையில் இருந்து மீள முடியாமல் தவித்துக்கொண்டிருந்தார்கள். அவர்களது நிலைப்பாடு காரணமாகத் தமிழ் மக்கள் மனங்களில் இருந்து அந்நியப்படும் ஆபத்துக்களையும் அவர்கள் எதிர்கொண்டிருந்தார்கள். வடக்கு, கிழக்கின் ஒரு சில பிராந்தியங்களைத் தவிர வேறு பிரதேசங்களில் செல்வாக்கு அற்றவர்களாகவே இந்த அமைப்பினர் இருந்தார்கள்.

தம் மீதுள்ள இரத்தக்கறையை எப்படித் துடைத்துக் கொள்வது, தமது அரசியல் எதிர்காலத்தை எப்படி உறுதிப்படுத்திக்கொள்ளவது என்ற தடுமாற்றம் அவர்கள் மத்தியில் அந்தக் காலகட்டத்தில் இருந்து வந்தது.

இப்படியான ஒரு சந்தர்ப்பத்தில்தான், தமிழ் அமைப்புக்கள், அரசியல் கட்சிகள் போன்றனவற்றை இணைத்து கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கும் முயற்சி பற்றி அவர்களுக்கு முன்மொழியப்பட்டது.

(11ஆம் பக்கம் பார்க்கவும்)

(அங்கு முதலில் சேர்ந்திருக்க வேண்டிய இப்பகுதி தவறுதலாக விடுபட்டு விட்டதால் இங்கே தரப்படுகிறது)

## சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் 160ஆவது மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம்,பெப்.23

சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் 160ஆவது இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை புதன் கிழமை பிற்பகல் 2 மணியளவில் கல்லூரி அதிபர் அருட்தந்தை ஜெறோ செல்வநாயகம் தலைமையில் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

கொத்மலை இணை சேவைகள் மையத்தின் தலைமை அதிகாரியும் சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையின் தலைவருமான பிரிகேடியர் டாக்டர் எச்.லக்ஸ்மன் டேவிட் பிரதம விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளார்.

(04-23)

## தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம்,பெப்.23

கோண்டாவில் பழைய காளி கோயில் என அழைக்கப்படும் சிவமஹா காளியம்பாள் ஆலயத்தின் திருமஞ்சத் திருவிழா எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

(04-201)

## நடைபாதைக் கடைகளில் இப்போது சூடு பிடித்திருக்கும் சைக்கிள் வியாபாரம்

யாழ்ப்பாணம்,பெப்.23

யாழ்.குடாநாட்டில் பல்வேறு விதமான நடைபாதை வியாபாரங்கள் நாள்தோறும் புதிது புதிதாக உருவாகி நடைபெற்று வருகின்றன.



அதில் இப்போது சைக்கிள் விற்பனையும் புதிதாக இணைந்து கொண்டுள்ளது. குடாநாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் இத்தகைய நடைபாதை சைக்கிள் வியாபாரம் சூடு பிடித்துக் காணப்படுகின்றது.

தென்பகுதியில் இருந்து வாகனங்கள் மூலம் கொண்டு வரப்படும் இந்த சைக்கிள்கள் பின்னர் வீதியோரங்களில் நிறுத்தப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

அப்பிள், கொய்யாப்பழம், அன்னாசிப்பழம் போன்றவைதான் குவியல் குவியலாக வீதியோரத்தில் வைத்து விற்கப்பட்டு வந்தன.

தற்போது சைக்கிள்களும் குவியலாக வைத்து வீதியில் விற்பனை செய்யப்படுவது மக்கள் மத்தியில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

(04-224)


## சிரம வாசனா

உத்தியோகப்பூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 217
சீட்டிழுப்பு திகதி 21.02.2010

எழுத்து: H
வெற்றி இலக்கங்கள்: 09 12 14 48

| | பொருந்தங்கள் | பரிசுத்தொகை | வெல்லப்பட்டோர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்கள் சரியானால் | ரூ. 4,431,572.50 | – |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியானால் | ரூ. 1,000,000/= | 01 |
| 2ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியானால் | ரூ. 1,000/= | 165 |
| 3ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியானால் | ரூ. 50/= | 6151 |
| 4ம் பரிசு | 1 இலக்கம் சரியானால் | ரூ. 20/= | 67031 |

இம்முறை வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,813,170.00

வெற்றிப் பெறும் சீட்டுகள் சீட்டிழுப்பு நடத்திய திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சமோ அதற்கு கூடிய தொகைக்கான பரிசுகள் அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டதாகும். பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப் பட்டுள்ளது.

அடுத்த வார சுப்பர் பரிசுத் தொகை ரூ. 4,431,572.50

தேசிய லொத்தர் சபை
234/2. டாலி வீதி. கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர தொலைநகல்: 2433631
இணையதளம்: www.nlb.lk



## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம், யாழ்ப்பாணம் பொதுச் சபைக் கூட்ட அறிவித்தல்

காலம் : 21.03.2010 ஞாயிறு முற்பகல் 10மணி
இடம் : கல்லூரி குமாரசுவாமி மண்டபம்

நிகழ்ச்சி நிரல்

01. தேவாரம்
02. தலைமையுரை
03. செயலாளர் அறிக்கை
04. பொருளாளர் அறிக்கை
05. புதிய நிர்வாகிகள் தெரிவு
06. பிற விடயங்கள்
07. கல்லூரிக் கீதம்

➢ பொதுச் சபைக்குப் பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்புபவர்கள் 06.03.2010 வெள்ளிக்கிழமைக்கு முன்னர் உரிய முறையில் அவற்றை அனுப்பி வைக்கவும். இத் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் பிரேரணைகள் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

➢ பொதுச் சபை உறுப்பினர்கள் தவறாது இக் கூட்டத்தில் கலந்து கொண்டு கல்லூரி அன்னையின் வளர்ச்சிக்கு ஆக்கபூர்வமான ஒத்துழைப்பை வழங்கவும்.

செயலாளர்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்.

(94954)


## மிதிவெடி விழிப்புணர்வு

மிதிவெடியினால் சமீபத்தில் இரு சிறுவர்கள் பலியானதோடு சிலர் படுகாயமடைந்த சம்பவம் அண்மையில் யாழ்ப்பாணத்தில் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளன.

இதனால் மிதிவெடிகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்து முகமாக 'யுனிசெவ்' அமைப்பின் ஆதரவுடன் சர்வோதயம் நிறுவனத்தின் மிதிவெடி அபாயக் கல்வித் திட்டத்தின் ஓரங்கமாக 'மண்டை ஓடு' நாடக ஆற்றுகை இன்று பி.ப.4 மணிக்கு நாவற்குழி குடியேற்றத் திட்ட மஹிந்தபுரத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

(ரி)


## இதயம் நெகிழ்ந்த வாழ்த்துக்கள்

உயர்திரு

திசைவீரசிங்கம் ஜெயராசசிங்கம்

(சிரேஷ்ட முகாமையாளர், ஹற்றன் நஷனல் வங்கி, யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் திருநகரில் பதினாறு ஆண்டுகளாக ஹற்றன் நஷனல் வங்கியின் சிரேஷ்ட முகாமையாளராகத் தனது பதவியை அலங்கரித்து வடபிராந்திய முகாமையாளராகப் பதவி உயர்வு பெறுகின்ற திசைவீரசிங்கம் ஜெயராசசிங்கம் அவர்கள் தனது வாழ்நாளில் கூடிய நேரத்தை வங்கியிலேயே செலவழித்து மக்களுக்காக மகத்தான சேவையாற்றியுள்ளார்.

சேவைக்கும் அவரது தகுதிக்கும் கிடைத்த பரிசு பதவிஉயர்வு. இன்னும் பல பதவி உயர்வுகள் பெற்று மேலும் மக்களுக்குச் சேவையாற்ற வாழ்த்துகின்றேன். எல்லா நலன்களையும் இறைவன் அவருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் வழங்கப் பிரார்த்திக்கின்றேன்.

தங்கள் பதவி உயர்வினை வாழ்த்துபவர்கள்:

பாக்கியரட்ணம் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
163,165, பிரதான வீதி, சங்கானை. தொ.பே: 070212713

தரன் ரேடர்ஸ்
130, 132 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2664

Jet Steel
247B, Old Moor Street
Colombo-12, T.P: 0114734549





## ST. PATRICK'S COLLEGE, JAFFNA

**The 160 th Year**

**INTER HOUSE ATHLETIC MEET - 2010**

**Will be held on**

*Wednesday, 24th February 2010, at 2.00 p.m*
*at Bishop B. Deogupillai Stadium (SPC)*

Chief Guests;

**Brigadier (Dr)H.Lakshman David USP PSC**
Commandant,Joint Services Training Institute,Kotmale,
& President ,SPC Alumni Association,Colombo.

and

**Mrs.Subodhini David**

***We cordially invite the Old Boys and well wishers to the above meet.***

***-Rector,Staff and Students.***

(C/565070)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாதகல் புனித லூர்த்துமாதா ஆலயப் பெருந்திருவிழாவையொட்டி மாதகல் சென்.தோமஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய சாகச நிகழச்சிகளில் உழவு இயந்திரம், மினிபஸ் என்பவற்றை மார்பின் மீது ஏற்றி வீரர் ஒருவர் சாகசம் புரிவதையும் - சாகசம் செய்வதற்கு வீரர் ஒருவர் தயார் செய்யப்படுவதையும் - பார்வையாளர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்- நேசன்)

# கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வவுனியா பொலிஸ் அணி வென்றது

வலி.வடக்கு,பெப்.23

இலங்கை 'மஞ்சி பிஸ்கட்' நிறுவனத்தின் அனுசரணையுடன்இலங்கை கரப்பந்தாட்டச்சங்கம் வடமாகாண மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்திவரும் கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் ஆண்களுக்கான அரையிறுதி ஆட்டத்தில் வவு னியாமவட்ட பொலிஸ்அணிவெற்றிபெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத் தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் வவுனியா பொலிஸ் அணியும் மோதிக்கொண்டன.

ஐந்து சுற்றுக்கள் கொண்ட இந்தப் போட்டியில் வவுனியா பொலிஸ் அணி 03:01 செற் என்ற அடிப்படையில் காங்கேசன் துறை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தை வெற்றி பெற்றது.

முதல் சுற்றை வவுனியா பொலிஸ் அணி 25:11 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.

இரண்டாம் சுற்றை காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் 25:19 புள் ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.

மூன்றாம் நான்காம் சுற்றுக்களை வவுனியா பொலிஸ் அணி 25:17, 25:20 புள் ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது. (1-86)

# 15,17 வயதுப்பிரிவு அணிகளுக்கும் கூடைப்பந்தாட்டப்போட்டி நடைபெறும்

வலி.வடக்கு,பெப்.23

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை களுக்கு இடையே நடைபெறும் கூடைப் பந்தாட்டப் போட்டிகளில் முதற்தடவையாக 15,17 வயதுப் பிரிவினர்களுக்கான போட்டி களும் வலய மட்டத்தில் நடைபெறுவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதுவரை காலமும் 19 வயதுப் பிரிவி னருக்கு மட்டுமே இந்தப்போட்டி கோட்டம், வலய மட்டங்களில் நடைபெற்றுவந்தது. இந்த வருடம் முதல் 15,17 வயது ஆண்கள், பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டி களை நடத்த வலிகாமம் கல்வி வலய உடற் கல்விப் பிரிவு நட்வடிக்கைகளை முன் னெடுத்துள்ளது.

வலிகாமம் கல்வி வலயத்திற்கு உட் பட்ட கல்விக் கோட்டங்களுக்கு இடையே பரவலாக கூடைப்பந்தாட்டத்திலும் பாட சாலைகள் ஆர்வம் காட்டி விளையாடி வரு கின்றன. எனவே இந்த மாணவர்களுக்கு கூடிய வாய்ப்புக்களை வழங்கும் முகமா கவும், கூடைப்பந்தாட்டத்தை வளர்தெடுக் கும் முகமாகவும் இந்த நடவடிக்கையை வலிகாமம் கல்வி வலய உடற்கல்விப் பிரிவு மேற்கொண்டுள்ளமை குறிப் பிடத் தக்கதாகும். (04-86)

# பழைய மாணவர்களுக்கான ஊர் சுற்றுப் போட்டி முடிவு

யாழ்ப்பாணம், பெப்.23

எழுவைதீவு முருகவேள் வித்தியாலயத் தின் இல்ல மெய்வன்மைப் போட்டியை முன்னிட்டு பழைய மாணவர்களுக்கு இடையே இடம்பெற்ற ஊர்சுற்றுப்போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களின் பெயர் விவரங் கள் வெளியாகியுள்ளன.

ஜெந்திரன் (முதலாம் இடம்), செல் வராஜ் (இரண்டாம் இடம்), ஜே.யூலின் கஜான்(மூன்றாம் இடம்). (23)

* * * * *

எழுவைதீவு முருகவேள் வித்தி யால யத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டியை முன்னிட்டு எழுவைதீவு பிரதேசத்தில் உள்ள கடற்தொழிலாளர்களுக்கான கட்டு மரம் வலித் தல் போட்டி இன்று செய்வாய்க்கிழமை மு.ப 10 மணியளவில் புனித அந்தேனியார் ஆலயத் திற்கு முன்னால் இடம்பெறவுள்ளது. (04-23)

# காந்திஜி அணி சம்பியன்

ஊர்காவற்றுறை, பெப். 23

ஊர்காவற்றுறை பிரதேச செயலக விளையாட்டுப் போட்டிகள் கோலாகலமாக ஆரம்பித்துள்ளன.

இதில் அண்மையில் நடைபெற்ற எல்லே போட்டியின் இறுதிப் போட்டியில் தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக் கழக மும், மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட் டுக்கழகமும் மோதிக்கொண்டன.

இப்போட்டியில் தன்னை எதிர்த்து விளையாடிய மெலிஞ்சிமுனை இருத யராசா விளையாட்டுக் கழகத்தைத் தோற் கடித்து சம்பியன் கிண்ணத்தை தம்பாட்டி காந்திஜி அணி தனதாக்கிக் கொண்டது. (04-3-25)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# வீதியோட்டத்தில் வெற்றி பெற்றோர்

எழுவைதீவு முருகவேள் வித்தியாலயத் தின் இல்ல மெய்வன்மைப் போட்டியை முன்னிட்டு மாணவர்களுக்கு இடையே இடம் பெற்ற வீதிஓட்டப் போட்டியில் வெற்றியீட் டிய மாணவர்களின் பெயர் விவரங்கள் வெளியாகி யுள்ளது.

ஆண்கள் பிரிவு: ம.அமிர்தயசித் (முதலாம் இடம்), யானுசன் (இரண்டாம் இடம்), ச.சுலக் சன் (மூன்றாம்இடம்),

பெண்கள் பிரிவு: ஜெ. மரியகொறற்றி (முதலாம்இடம்), ம.ஐஸ்வரியா (இரண்டாம் இடம்), க.சேபிகா (மூன்றாம்இடம்). (04-23)

# வீதியோட்டப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்கள்

அச்சுவேலி மத்திய கல்லூரியின் வரு டாந்த இல்ல மெய்வல்லுநர் போட் டியை முன்னிட்டு கல்லூரி மாணவர்களுக்கு இடையே நடத்தப்பட்ட வீதியோட் டப்போட்டியில் வெற்றியீட்டியோர் விவ ரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

வெற்றி பெற்றோர் பெயர் விவரம் வருமாறு:

முதலாம் இடம்- இ.றொபேட்பிராங் கிளின், இரண்டாம் இடம்- ச.சயிந்தன், மூன்றாம் இடம்- ப.சஜீபன்.

100 மணவர்கள் கலந்து கொண்ட இந்த வீதியூோட்டப் போட்டியில் 88 மாணர் வுகள் குறித்த தூரத்தை ஓடிமுடித்துள் ளமை குறிப்பிடத்தக்கது. (04-11)

# கரம் சுற்றுப்போட்டியில் வெற்றி பெற்றவர்கள்

யாழ்ப்பாணம், பெப்.23

மதிவதனன்- ஜெயச்சித்திரா சகோத ரர்களின் 15 ஆவது ஆண்டு ஞாபகார்த் தமாக நடைபெற்ற கரம் சுற்றுப்போட் டியில் வெற்றி பெற்றவர்களின் பெயர் விவரங்கள் வெளியாகியுள்ளன.

பெண்கள்- (ஒற்றையர் பிரிவு): முத லாம்இடம்-எ. மேசி ஞானரூபி, இரண்டாம் இடம்- டி.சுகன்யா, மூன்றாம் இடம்- கே.கேசாஜினி.

பெண்கள் இரட்டையர் பிரிவு: முதலாம் இடம்-கே.கேசாயினி+ எ.மேரிஞான ரூபி, இரண்டாம் இடம்- டி.சுகன்யா+ என். சங்கவி, மூன்றாம்இடம்-எஸ்.கீர்த்திகா+ எஸ்.கீர்த்திகா

ஆண்கள் இரட்டையர் பிரிவு: முதலாம் இடம்: எஸ்.சற்குணமூர்த்தி+விமலகாந் தன், இரண்டாம் இடம்- எஸ்.செந்தூரன்+ எஸ். பிரதீப், மூன்றாம் இடம்-ரி.அனுராம்+ பி.ஜெயசாந்.

ஆண்கள் கலப்பு இரட்டையர் பிரிவு: முதலாம் இடம்-ஜே. மோகன்+ரி.சுகன்யா, இரண்டாம் இடம்- எஸ். சற்குண மூர்த்தி+ எஸ்.யசோத, மூன்றாம் இடம்-ஜனுசன்+ எ.மேரி ஞானரூபி.




யாழ். உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையேயான 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டப் பரிசளிப்பு வைபவம் கடந்த சனிக்கிழமை குருநகர் சென்றோக் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடக்கு-கிழக்கு மாகாண முன்னாள் விளையாட்டு அதிகாரி மரியதாசுக்கு வீரர்களை அறிமுகம் செய்து வைக்கப்படுவதை முதலாவது படத்திலும் - யாழ். உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் கிளியேட் அன்ரனிப்பிள்ளை உரையாற்றுவதனை இரண்டாவது படத்திலும்-

ஆட்டத்தின் சிறந்த வீரனாகத் தெரிவு செய்யப்பட்ட குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணி வீரன் திலிப்புக்கு பிரதம விருந்தினர் பரிசில் வழங்குவதை மூன்றாவது படத்திலும் முதலாவது இடத்தினைப் பெற்றுக்கொண்ட குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணித்தலைவர் கமிலஸ் இடம் பிரதம விருந்தினர் வெற்றிக் கிண்ணத்தையும் பந்தினையும் வழங்குவதனை நான்காவது படத்திலும், போட்டியைப் பார்ப்பதற்கு மைதானத்தில் கூடிய உதைபந்தாட்ட ரசிகர்களின் ஒரு பகுதியினரை இறுதிப் படத்திலும் காணலாம். (படங்கள்- தமிழினியன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை இல்ல மெய்வன்மைப் போட்டியில் எடுக்கப்பட்ட படங்கள் இவை.
வித்தியாலய அதிபர் திருமதி சி.சுந்தரபாரதி, சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட சங்கானை அ.மி.த.க.பாடசாலை அதிபர் செல்வி எஸ். சுபாபாமதி மற்றும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வலிகாமம் கல்வி வலய திட்டமிடல் பணிப்பாளர் ச.தமிழ்மாறன் ஆகியோர் உரையாற்றுவதை முதல் மூன்று படங்களிலும் வெற்றியாளர் ஒருவருக்கு வெற்றிக் கேடயத்தைப் பிரதம விருந்தினர் வழங்குவதை நான்காவது படத் திலும் இடைவேளையின்போது மாணவர்கள் நிகழ்த்திய இசையும் அசைவும் நிகழ்வினை இறுதிப் படத்திலும் காணலாம். *(படங்கள்: விற்ரோறி)*

## நினைவலைகள்

பிறப்பு: 14.01.1930
மறைவு: 23.09.2007



பிறப்பு: 07.02.1937
மறைவு: 05.03.2009

### அமரர்கள் கிருஸ்ணர், நல்லம்மா

திதி நவமி

வள்ளுவன் வரைந்திட்ட வாழ்க்கையின் கோட்டிலே
வளமாக வாழ்ந்து பரமனடி சார்ந்த உங்கள்
பாதார விந்தங்கட்கு இதய மலரை நாம் யாவரும்
அர்ச்சிக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

எம் தெய்வங்களின் நினைவுப் பிரார்த்தனை இன்று (23.02.2010) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

'கிருஸ்ணா மனை', தாவடி றோட்,
சுதுமலை தெற்கு, மானிப்பாய். (92141) குடும்பத்தினர்

## காணி தேவை

யாழ்.நகரிற்கும் கோண்டாவிலிற்கும் இடைப்பட்ட பகுதியில் பலாலி வீதியில் அல்லது பலாலி வீதியில் இருந்து 100m இற்குள் 1½ பரப் பிற்குக் குறையாத அளவுடைய காணி தேவை. தொடர்புகளுக்கு:- 0771042680 (92150)

## தவறிவிட்டது

WP US 0475 தொடரிலக்கத்தைக் கொண்ட வாகன இலக்கத் தகடு பலாலி வீதியில் உரும்பிராய்ச் சந்திக்கும் பரமேஸ்வராச் சந்திக்கும் இடையில் 21.02.2010 அன்று தவறி விழுந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் உரிமையாளரிடம் ஒப்படைத்து உதவுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். தொடர்புகளுக்கு: 0717256683

## 'மன்றா' நிறுவனம் நடத்தும் கருத்தரங்கு 27ஆம் திகதி

யாழ்ப்பாணம், பெப்.23

'மன்றா குளோபல்' எக்சூரிவ் சேர்ச் அன்ட் மன்றா எடியுகேஷன் பிறை வேற் லிமிற்ரெட் ஸ்தாபனம் நடத்தும் 'உங்களின் உண்மையான திறமைகள்' என்னும் தலைப்பிலான கருத்தரங்கு கொக்குவில் தொழிலுட்பக் கல்லூரியில் எதிர்வரும் 27 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு நடை பெறவுள்ளது.

இடம் மாறும் திறமையாளர்கள் மற்றும் மாணவர் நிலைப்படுத்தல் தொடர்பான இக்கருத்தரங்கில் யாழ். அரச அதிபர் கே.கணேஷ் கௌரவ விருந்தினராகக் கலந்து கொள்வார்.

யாழ். தொழிலுட்பக் கல்லூரி அதிபர் கலாநிதி என் யோகராஜன் தலைமையில் நடைபெறும் இந்த கருத்தரங்கில் ஷிகானி சிவகுமார் மன்றா குளோபல் எக்சூ ரிவ் சேர்ச் மற்றும் மன்றா எடியு கேஷன் தொடர்பாக விளக் கமளிப்பர். (50)

## மினி மரதன் ஓட்டம்; ஆலோசனைக் கூட்டம் இன்று

''நெஸ்டமோல்ட்'' நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட மெய்வன்மைச் சங்கம் நடத்தவுள்ள மினி மரதன் ஓட்டப்போட்டி நிகழ்வு தொடர்பான ஆலோசனை கூட்டம் இன்று மாலை 3 மணியளவில் ரில்கோ விருந்தினர். விடுதியில் இடம்பெறவுள்ளது.

இதில் இலங்கை மெய்வன்மைச் சங்க அதிகாரிகள், நெஸ்டமோல்ட் நிறுவனத்தின் அதிகாரிகள் கலந்துகொள்வார்கள்.

இக் கூட்டத்தில் வலய உடற்கல்விப் பணிப்பாளர், விளையாட்டு அலுவலர்கள், மெய்வன்மை தொழில்நுட்ப அலுவலர்கள், யாழ் மாவட்ட மெய்வன்மைச்சங்க பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொள்ளுமாறு யாழ். மெய்வன்மைச்சங்க செயலாளர் கேட்டுள்ளார். (04-23)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 21 ★ 11 ★ 1938



மறைவு 06 ★ 03 ★ 2009

### திருமதி அன்னபூரணம் பாலகிருஷ்ணபிள்ளை

திதி : தசமி

ஆண்டு ஒன்று சென்றாலும் அன்பான
வார்த்தைகளும் அமைதியான உங்கள்
பண்பும் அரவணைக்கும் நற்குணமும்
என்றும் நிலைத்து நிற்கும் எம் மனதில்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C/565068)

சாவகச்சேரி வீதி,
மந்திகை, புலோலி.

சகோதரர்கள், பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## ஓராண்டு நினைவஞ்சலியும் 58 ஆவது பிறந்த நாள் நினைவலைகளும்

தோற்றம்: 1952.02.25



மறைவு: 2009.03.05

### திருமதி பரராஜசிங்கம் மனோராணி

துடித்தன இதயம் உங்கள் நினைவால்
ஒருவருடம் உருண்டோடி விட்டதம்மா!
எத்தனை வருடங்கள் சென்றாலும்
ஆறாதம்மா உம் நினைவு
இறுதிவரை எம்மோடு இணைந்திருப்பீர்கள்
என்றிருந்தோம் அம்மா!
இடை நடுவில் தவிக்கவிட்டு சென்றது ஏனம்மா?
கதறுகின்றோம் நாம் இங்கே
பதறுகின்றோம் நீர் எங்கே
கதிகலங்கி நிற்கின்றோம் அம்மா
மறுபடியும் உம் தரிசனத்திற்காக
தங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

என்றும் உம் நினைவில்:
குடும்பத்தினர்

நுணாவில் சந்தி, சாவகச்சேரி. (சி-565063)

## பிற்போடப்பட்டுள்ளது

கோப்பாய், பெப்.23

யாழ்.கல்வி வலயத்தில் கடமையாற்றி ஓய்வுபெற்றுச் சென்ற ஆசிரிய ஆலோசகர்களுக்கு நாளை புதன்கிழமை நடைபெறவிருந்த பிரிவுபசார் விழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறும் என யாழ். கல்விவலய ஆசிரிய ஆலோச கர் கழகம் அறிவித்துள்ளது. (201-72)

## தவறிவிட்டது

வேளாதோப்புலேன், கட்டப்பிராய் என்னும் முகவரியில் வசிக்கும் செல்வராசா கணேசமூர்த்தி என்பவரது தே.அ.அட்டை (690233703V) கோடிகாமத்தில் ... கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் ... (சி/565069)


## சுவசெத Suwasetha சுவசெத லொத்தா

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 359
சீட்டிழுப்பு திகதி: 21.02.2010

வெற்றி எழுத்து: Y வெற்றி இலக்கங்கள்: 09 22 27 39 போனஸ் இலக்கம் 35

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றி பெற்ற தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து ஒன்றுடன் 4 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 13,498,678.50 | - |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 2,000,000.00 | 01 |
| 2 பரிசு | 3 இலக்கங்களுடன் போனஸ் இலக்கமும் பொருந்தினால் | ரூ. 50,000.00 | 03 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 1,000.00 | 91 |
| 4 பரிசு | 2 இலக்கங்களுடன் போனஸ் இலக்கமும் பொருந்தினால் | ரூ. 500.00 | 152 |
| 5 பரிசு | 2 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 40.00 | 4444 |
| 6 பரிசு | 1 இலக்கத்துடன் போனஸ் இலக்கமும் பொருந்தினால் | ரூ. 40.00 | 2983 |
| 7 பரிசு | 1 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20.00 | 56102 |

இந்த முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 3,736,120.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 13,498,678.50

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

சீட்டிழுப்புப்பணியின் முன்னோடி
தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி அவசர : 2470662, 2470663
தொலைநகல்: 2473360, 2433631 இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சீட்டிழுப்பில் இருபது இலட்சம் ரூபாய் முதற் பரிசையும் வேறு பல பரிசுகளையும் வெல்லுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவானது எங்ஙனம்?

**தற்போதைய அரசியல் புலத்திலே முக்கிய சக்தியாக உருவெடுத்திருக்கின்றது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. அந்தக் கட்டமைப்பின் உருவாக்கம் பற்றிய தமது நினைவுகளை இப்படி மீட்டுக் கூறுகின்றார் புலம்பெயர்ந்த ஊடகவியலாளர் நிராஜ் டேவிட். தனிப்பட்ட இணையம் ஒன்றில் பிரசுரமான இத்தொடர் இந்தச் சந்தர்ப்பத்தில் வாசகர்களின் தேடலுக்கு நல்ல தீனியாக அமையும் என்று கருதி இங்கு தொடராகப் பிரசுரிக்கப்படுகிறது. இதில் வரும் தகவல்கள், கருத்துகளுக்கு எழுத்தாளரே பொறுப்பு. (ஆ-ர்)**

*(நேற்றைய தொடர்ச்சி....)*


**ரெலோவின் நிபந்தனை**

சிவராம் தலைமையிலான ஊடகவியலாளர்கள் முதலில் ரெலோ அமைப்பைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்க. ரெலோ அமைப்புடனான சந்திப்பில் செல்வம் அடைக்கலநாதன், சிறிகாந்தா, பிரசன்னா, ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியின் சார்பாக சுரேஷ் பிரேமச்சந்திரனுடன் பேசப்பட்டது.

கூட்டமைப்பு உருவாக்கத்திற்கு கொள்கை அளவில் சம்மதித்த இந்த இரு கட்சிகளும், ஒரு முக்கிய முன் நிபந்தனையை விதித்தார்கள்.

ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சிகள் தங்கள் உறுப்பினர்களுக்கு விடுதலைப்புலிகள் தரப்பிலிருந்து பாதுகாப்பு உத்தரவாதம் தரப்பட வேண்டும் என்றும் கோரப்பட்டிந்தது. அந்தக் காலகட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தின் ஒட்டுக் குழுக்களாகச் செயற்பட்ட இந்த அமைப்புக்களின் உறுப்பினர்கள், துரோகிகள் என்று முத்திரை குத்தப்பட்டு விடுதலைப் புலிகளால் துரத்தித் துரத்தி வேட்டையாடப்பட்டு வந்தார்கள். எனவே, விடுதலைப் புலிகள் தரப்பில் இருந்து தமது உறுப்பினர்களுக்கு உரிய



நடேசன்

பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கப்படவேண்டும் என்று, இந்தக் கட்சிகள் கோரிக்கை விடுத்தார்கள்.

விடுதலைப் புலிகளுடன் பேசி, அந்த உத்தரவாதம் விடுதலைப் புலிகள் தரப்பில் இருந்து பெறப்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில், தமிழ் தேசியக் கூட்டமைப்பு உருவாக்க முயற்சியைக் குலைக்கும்படியான ஒரு சம்பவம் மட்ட க்களப்பில் நடைபெற்றது.

ரெலோ அமைப்பின் ஒரு முக்கியஸ்தரும், மட்டக்களப்பு ஆரையம்பதிப் பிரதேச சபைத் தலைவருமான ரொபர்ட் விடுதலைப் புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார். மட்டக்களப்பு நகரில், வைத்தியசாலை வீதியில் வைத்து ரெலோ ரொபர்ட் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அவரது மரணச் சடங்கு இடம்பெற்ற தினம் மாலை ஊடகவியலாளர்களை ரெலோவின் தலைமை அழைத்துப் பேச்சு நடத்தியது.

ரெலோவின் மட்டக்களப்பு அலுவலகத்தில் ஊடகவியலாளர்களைச் சந்தித்த சிறிகாந்தா, ''விடுதலைப் புலிகள் வழங்கிய உத்தரவாதத்தை மீறிவிட்டார்கள். எங்களை நீங்கள் சந்தித்து கூட்டமைப்பு உருவாக்கம் முயற்சி நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற போது ரொபர்ட் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறரே. இந்த நிலையில் எப்படி நாங்கள் ஆயுதங்களைக் கீழே போடும்படி எமது உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பது? யார் எங்களுக்குப் பாதுகாப்புத் தருவார்கள்?'' - என்று விசனம் தெரிவித்தார்.

**புலனாய்வுப் பிரிவுக்குத் தெரியாது**

ஊடகவியலாளர்கள் மறுநாள் கரிகாலனை சந்தித்தார்கள்.

ஊடகவியலாளர்களிடம் மன்னிப்பு கோரிய கரிகாலன், ''நீங்கள் எடுக்கின்ற முயற்சி புலிகளின் அரசியல் பிரிவினருக்கு மாத்திரமே தெரியும். இராணுவ மற்றும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு இன்னமும் தெரியாது. அதனால்தான் இது நடந்து விட்டது. இனிமேல் இதுபோன்று நடைபெறாது பார்த்துக்கொள்கிறோம்.'' - என்று கரிகாலன் தெரிவித்தார். இவ்வாறான சம்பவங்கள் கூட்டமைப்பு முயற்சிகளை முற்றாக பாதித்து விடும் என்பதையும் கரிகாலனுக்கு ஊடகவியலாளர்கள் தெரிவித்தார்கள்.

அதன் பின்னர் முதற்தடவையாக செல்வம் அடைக்கலநாதனையும் சுரேஷ் பிரேமச்சந்திரனையும் தனித்தனியாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்கப் பிரதிநிதிகள் அழைத்துச் சென்று கரிகாலனுடனான சந்திப்பை ஏற்படுத்தினார்கள்.

தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைக்கும் இந்த முயற்சி தொடர்பான தகவல்கள் ஊடகங்களில் வெளிவரக்கூடாது என்று ஏற்கனவே உறுதியான தீர்மானம் ஒன்றைக் கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்கம் எடுத்திருந்தது. ஊடகவியலாளர்களே இந்தப் பணியில் நேரடியாக ஈடுபட்டதன் காரணமாக, ஊடகங்களில் இந்தச் செய்திகள் கசியவில்லை. நீண்டகாலம க மேற்கொள்ளப்பட்டு வந்த இந்த நடவடிக்கைகள் தொடர்பாக எந்த ஒரு செய்தியும் ஊடகங்களில் வெளிவராத போதிலும், ஊடகவியலாளர்களையும் மீறி சுரேஷ் பிரேமசந்திரன், கரிகாலனை சந்தித்தது தொடர்பான செய்தி கொழும்பு தமிழ் ஊடகம் ஒன்றில் வெளிவந்து விட்டது. அந்த செய்தியை பின்னர் 'டெயிலி மிரர்', 'த சண்டே ரைம்ஸ்' உட்பட ஆங்கில, சிங்கள ஊடகங்களும் வெளியிட்டிருந்தன.

ஊடகவியலாளர்கள் கொழும்பு ஊடகங்கள் மத்தியில் தங்களுக்கு இருந்த தொடர்புகளைப் பாவித்து, இந்த சந்திப்புக்கள் தொடர்பான செய்திகள் தொடர்ந்து வெளிவராமல் தடுத்திருந்தார்கள்.

**புளொட்டின் நிலைப்பாடு**


புளொட் தலைவர் சித்தார்த்தனுடன் நான்கு தடவைகள் சந்திப்பு இடம்பெற்றது. ஒரு கட்டத்தில் சித்தார்த்தன் ஆயுதக் குழுவை கலைத்துவிட்டு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்புடன் இணைவதற்கு விருப்பம் கொண்டிருந்தாலும் அக்கட்சியைச் சேர்ந்தவர்கள் - முக்கியமாக வவுனியாவில் உள்ள சிலர் - அதற்கு சம்மதிக்காததால் புளொட் அமைப்பை கூட்டமைப்பில் சேர்க்கும் முயற்சி கைவிடப்பட்டது.

ஒரு சந்திப்பின் போது சித்தார்த்தன் தங்கள் அலுவலக வாசலில் சென்றிருந்த இளைஞனைக் காட்டி கூறினார், 'நான் ஆயுதப்பிரிவை கலைத்து விட்டு வந்து அரசியல் செய்யலாம். ஆனால் எம்மை நம்பி வந்த இந்தச் சிறுவர்களை எப்படி பராமரிப்பது? இவர்களது எதிர்காலம் என்ன?'' - என்று கூறி, கூட்டமைப்பில் தமது அமைப்பினை இணைத்துக்கொள்ளத் தயங்கினார்.

மட்டக்களப்பு மாவட்ட புளொட் அரசியல்பிரிவு பொறுப்பாளர் பாக்கியராசா தமிழ் கட்சிகளுடன் தங்களை இணைக்க வேண்டும் என ஆர்வம் காட்டிவந்தார். ஆனால் அவர்களின் இராணுவப்பிரிவு அதற்கு இடம்கொடுக்கவில்லை.

**முதலாவது கூட்டம்**

இதன் பின்னர் 2001 ஆம் ஆண்டு கொழும்பில் தமிழர் விடுதலைக்கூட்டணி, தமிழ் காங்கிரஸ், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட முதலாவது கூட்டம் நடைபெற்றது. சிவராம் தலைமையில்



சித்தார்த்தன்

ஊடகவியலாளர்கள், சில பேராசிரியர்கள் போன்றோர் கலந்துகொண்டார்கள். அந்தக் கூட்டத்தில்தான் ததே.கூ. பற்றிய இறுதி முடிவு எடுக்கப்படது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இணைக்கும் பணி நிறைவு பெற்ற பின்னர் கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் செயற்பாடுகளில் தலையிடுவதில்லை என்றும் ஊடகவியலாளர்கள் தீர்மானித்துக்கொண்டார்கள். இதை அந்த முதலாவது கூட்டத்தில் த.தே.கூட்டமைப்பிடம் ஊடகவியலாளர்கள் தெரிவித்துக் கொண்டார்கள்.

அதன் பின்னர் 2001ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் அந்த நான்கு கட்சிகளும் இணைந்து வெளித்தலையீடுகள் இன்றி வேட்பாளர்களைத் தெரிவு செய்து தேர்தலில் போட்டியிட்டன.

அந்தத் தேர்தலில் வடக்கு - கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி தமிழ் தேசிய நிலைப்பாட்டின் கீழ் போட்டியிட்டு 17 தமிழ் உறுப்பினர்கள் நடாளுமன்றத்திற்குத் தெரிவானார்கள்.2002ஆம் ஆண்டு சமாதான ஒப்பந்தத்தின் பின்னர், தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் செயற்பாடுகளையும் நடவடிக்கைகளையும் தங்களின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர ஆரம்பித்தார்கள்.. 2004ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் பல வேட்பாளர்களின் பெயர்களை விடுதலைப்புலிகளே முன்மொழிந்தனர் என்பதும் இங்கு நோக்கத்தக்கது.

**தேசியக் கடமை**

த.தே.கூட்டமைப்பு உருவாக்கத்தின் முன்னணியில் இருந்த பல முக்கியஸ்தர்கள் இன்று உயிருடன் இல்லை. தமிழ்



கரிகாலன்

தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்தில் ஏதோ ஒரு வகையில் பங்காற்றியிருந்த பல தமிழ் ஆர்வலர்களும் தற்பொழுது உயிருடன் இல்லை.

த.தே.கூட்டமைப்பு உருவாக்கத்தின் பிதாமகர் என்று கூறக் கூடிய ஊடகவியலாளர் சிவராம், ஊடகவியலாளர் நடேசன், பேராசிரியர் கலாநிதி தம்பையா போன்றவர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள்.

இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்கத்தின் தலைவரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான இரா.துரைரெத்தினம், கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்கத்தின் செயலாளர் சண்தவராஜா, விரிவுரையாளர் கெனடி, விரிவுரையாளர் மோகன், மருத்துவ கலாநிதி நீதிராசா, ஊடகவியலாளர் நிராஜ் டேவிட், ஊடகவியலாளர் வேதநாயகம் உட்பட பல ஊடகவியலாளர்கள், விரிவுரையாளர்கள் நாட்டைவிட்டு வெளியேறும்படி நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். இந்தக் கூட்டமைப்பு உருவாக்கத்தில் ஏதோ ஒரு வகையில் சம்பந்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், ரவிராஜ் போன்றவர்கள் படுகொலைசெய்யப்பட்டார்கள்.

மக்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு தமது தேசியக் கடமைகளை நிறைவேற்றினார்கள் என்ற ஒரே காரணத்திற்காக, சிறிலங்கா அரசினாலும், அதனுடைய கூலிப்படைகளினாலும் இவர்கள் துரத்தித் துரத்தி வேட்டையாடப்பட்டார்கள்:

**த.தே.கூட்டமைப்பு**

ஆக, த.தே.கூ. என்பது, மிகுந்த பிரயாசைகளினால், பலத்த இழப்புக்களுடன், தமிழ் மக்களின் நன்மைகருதி தமிழ் மக்களினால் உருவாக்கப்பட்ட ஓர் அமைப்பு.

சிங்களப் பேரினவாதம் அமைத்துக் கொண்டுள்ள ஒரு அரசியல் மேடையில் தமிழ் மக்களின் தேசியம் சார்ந்த குரல்கள் ஒலிக்கவேண்டும் என்பதற்காக, தமிழ் ஆர்வலர்களால் வகுக்கப்பட்ட ஓர் அரசியல் வியூகம்.

தமிழ் மக்கள் தமது அபிலாசைகளை அவ்வப்பொழுது உலகிற்கு வெளிப்படுத்திக்கொள்ள, தமக்குத்தாமே அவர்கள் அமைத்துக்கொண்டுள்ள ஒரு ஜனநாயகத் தளம்தான், இந்தத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு.இப்படிப்பட்ட இந்தத் த.தே.கூ. தமிழ் மக்களின் அபிலாசைகள உண்மையாகவே பிரதிநிதித்துவப்படுத்துகின்றதா?

த.தே.கூ உருவாக்கப்பட்டதன் நோக்கத்தின் பாதையில் அது பயணித்துக்கொண்டிருக்கின்றதா?

தனிநாட்டுக் கோரிக்கையை நாம் முன்வைக்கவில்லை என்று இந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு தற்பொழுது கூறுகின்றதே, பின்னர் இதனை எப்படி ஏற்றுக்கொள்வது?

-இப்படி பல கேள்விகள் புலம்பெயர்ந்த தமிழர் மத்தியில் கேட்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

இந்தக் கேள்விகளுக்கான பதிலைத் தொடர்ந்து வாய்ப்புக் கிடைக்கும்போது விரிவாக ஆராய்வோம். *

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, ஓகஸ்ட் 2010.
General Certificate of Education (Advance Level) Examination - August 2010.

**தமிழ்மொழி** | **பகுதி - I**

முதலாம் பகுதியில் உள்ள இரு வினாக்களுக்கும், இரண்டாம் பகுதியில் உள்ளவற்றுள் எவையேனும் நான்கு வினாக்களுக்குமாக எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடைதருக.

## பகுதி - I

01. பின்வரும் செய்யுட் பகுதிகளுள் எவையேனும் மூன்றைத் தெரிவுசெய்து
அ. அவற்றின் பொருளை இக்கால உரைநடையில் எழுதுக.
ஆ. தடித்த எழுத்தில் தரப்பட்டுள்ள பகுதிகளின் சிறப்பை விளக்குக.

1) அருந்துய ருழத்தலி னுண்மை சான்மெனப்
பெரும்பிறி தின்மையி னிலேனு மல்லேன்
கரைபெரு திழிதருங் கான்யாற் றிகுகரை
**வேர்கிளர் மராஅத் தந்தளிர் போல**
நடுங்க லானா நெஞ்சமொ டிடும்பை
யாங்கனந் தாங்குவென் மன்றே யோங்கு செலற்
கடும்பகட் டியானை நெடுமா னஞ்சி
ஈர நெஞ்ச மோடிச்சேண் விளங்கத்
**தேர்வி சிருக்கை போல**
மாரி யிரீஇ மான்றன்றால் மழையே

2) உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃ தாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து

பலகுடை நீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நிழ லவர்

இரவார் இரப்பார்க்கொன்று ஈவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்

**செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலத்து
இல்லாளின் ஊடி விடும்.**

3) பசைந்த சிந்தை நீ பரிவின் வையமென்
வசஞ்செய் தாலது முறைமை யோவசைக்
கசைந்த வெந்தையா ரருள வன்றுநா
னிசைந்த வாண்டெலாமின்றொ டேறுமோ

**வாய்மை யென்னும் தன்றி வையகந்
தூய்மை யென்று மொன்றுண்மை சொல்லுமோ**
தீமை தானதிற் றீர்த லன்றியே
யாய்மெய் யாகவே றறைய லாவதே

4) வள்ளலை யொருநாள் மறைக்கரும் பொருளை
மறைபடா திலங்குமொண் மதியைத்
தள்ளுதற் கரும்ம் மலத்தையுங் கடந்தோர்
**தவத்தினுள் விளங்கிய கனியைக்**
கள்ளவிழ் மரவ மலரத்தொடைப் புயரைக்
கருணையங் கடலினிற் பிறந்த
தெள்ளமு தனைய முகம்மது நபியைத்
தெரிசிக்கும் கண்களே கண்கள்.

02. "அ" பகுதியில் உள்ள கவிதையைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

அல்லது

"ஆ" பகுதியில் உள்ள உரைப்பகுதியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

அ. திருந்து மினிய மனச்சான்றோர்
சினம்போல் வெம்மை செய்தேநீர்
சுரந்து வருவ தென்னேநீ
சொல்வாய் கன்னி யாய்த்திருவே
சுரந்து வெம்மை தருவதெல்லாம்
தொட்டே யென்ன அணைவார்க்கு
மருந்தாய்ப் பாவம் பிணிதீர்க்கும்
வகையென றுணர்வீர் மாந்தர்களே!

சைவர் பவுத்தர் மகமதியார்
சார்ந்தே கிறிஸ்து சமயத்தோர்
மெய் தொட்டாட நீ விரும்பும்
விதமென் கன்னி யாய்த்திருவே
மெய் தொட்டாட யான்விரும்பும்
விதமிங் குணர்வீர் மேதினியில்
தெய்வ மேவர்க்கும் பொதுவென்னும்
திறத்தை விளக்கும் செயல்கண்டீர்!

அள்ளக் குறையா தினிதூறும்
வெந்நீர்ச் செல்வ மதையருவி
மெள்ளச் சுரந்து வருவதென்னே
விளம்பாய் கன்னி யாய்த்திருவே
மெள்ளச் சுரந்து வருவதெல்லாம்
விரும்பி யுலகோர் மனத்தளவே
கொள்ளச் சுரக்கும் கல்வியென
யானுஞ் சுரக்குங் குணங்கண்டீர்!

அன்னை தனக்காய் இராவணனார்
அந்தி யேட்டி செயவென்றே
உன்னை யமைத்த துண்மையதோ
உரைப்பாய் கன்னி யாய்த்திருவே
என்னை யமைத்தார் இராவணற்காய்
இறைவ னாண்மை யருட்சக்தி
என்னுந் திருமால் யான்சத்தி
வடிவம் இதனை உணர்வீரே!

சாதி பேதம் பாராதே
சமமா யெவரும் உனைத்தழுவ
ஏதுங் கலங்கா திருப்பதென்னே
இயம்பாய் கன்னி யாய்த்திருவே
ஏதுங் கலங்கா திருப்பதிங்கே
எல்லா உயிருஞ் சமமென்றே
ஓதும் படைப்பின் ஒருமைநிலை
உணர்த்து முண்மை நிலைகண்டீர்!

பல்லாயிரம்பே ருனைத் தோய்ந்தும்
பாரிற் பெரியோர் நிதமுமுனை
நல்லாயென்றே புகழ்வதென்னே
நவிலாய் கன்னி யாய்த்திருவே
நல்லாயென்றே புகழ்வ தெல்லாம்
நாடிப் பலருந் தோய்ந்தாலும்
புல்லா தியானுந் தன்னியெனப்
பொலிவுற் றிருக்கும் நிலைகண்டீர்!

உன்பாற் படிவோ ரெல்லாரும்
உடலும் உயிருந் தளிர்த்தொளிசேர்
பொன்போற் பொலிவ தென்னேநீ
புகல்வாய் கன்னி யாய்த்திருவே
பொன்போற் பொலிதல் பூமியின் கீழ்ப்
பொங்கும் தாதுப் பொருள்கள்பல
என்பாற் கலந்து சக்தியுடன்
யானும் வருவதெனக் கொள்வீர்!

1) இக்கவிதையின் மூலம் கவிஞர் புலப்படுத்த விரும்பும் கருத்து யாது?
2) கன்னியா வெம்மையான நீர் சுரந்துவருவதற்கு புலவர் கூறும் காரணங்கள் யாவை?
3) இக்கவிதையின் சிறப்பிற்கு புலவர் கையாண்ட உத்திகள் எவை?
4) இப்பாடலில் காணப்படும் அணிகளை விளக்குக.

ஆ. புலவன் "யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" எனக் கூறும் உளப்பாங்கு உடையவனாதலின், அவன் தான் பெற்ற அனுபவத்தை கவிதை உருவத்தில் எமக்கு வழங்குகிறான். அவ் அனுபவத்தை அது தாங்கி நிற்கின்றது. அதை நாம் படிப்பதனாலே அவன் பெற்ற அனுபவத்தை ஒத்தது ஒன்றை நாம் பெறுகின்றோம். கவிதையைப் படிப்பதனாலே புலவனுடைய அனுபவத்தை நாம் பெறுகின்றோம் என்பது பிழையாகும். புலவனுடைய அனுபவம் புலவனுக்கு உரியது; எம்முடைய அனுபவம் எமக்குரியது. ஒருவனுடைய அனுபவத்தைப் பிறன் ஒருவன் பெற்றுக்கொள்ள முடியாது; அது அவனுக்கே சொந்தமானது. புலவன் தன்னுடைய அனுபவத்தைக் கவிதை வாயிலாக வெளிப்படுத்துகிறான். அக்கவிதை எம்மிடத்தில் ஓர் அனுபவத்தை உதிக்கச்செய்வதற்கு ஓர் ஏதுவாகின்றது. அந்த அனுபவம் ஏறக்குறைய அப்புலவனுடைய அனுபவத்தை ஒத்திருக்கும் அன்றி அவனுடையதாகாது.

கற்பனைத் திறனும் உணர்ச்சி அனுபவங்களை ஆக்கிக்கொள்ளும் ஆற்றலும் புலவனுக்குத்தான் உண்டு, எமக்கில்லை என்பது சிலர் கருத்து. புலவனும் எம்மைப்போல் ஒரு மனிதன்தான். எமக்குள்ள இன்பதுன்பம் அவனுக்கும் உண்டு. ஓர் அழகான காட்சியைப் புலவன் மட்டும் கண்டு அனுபவிக்கிறான். நாம் அனுபவிப்பதில்லை என்று சொல்லமுடியாது. அதைக் கண்ட இடத்தில் எமக்கும் ஓர் உணர்ச்சி இன்பம் ஏற்படுகிறது. யாதாயினும் ஒரு பொருள் அல்லது நிகழ்ச்சி அல்லது காட்சி அல்லது எண்ணக்கருத்து ஒரு புலவனுடைய கற்புனையைத் தூண்டுகிறது. ஓர் உணர்ச்சி அனுபவத்தைக் கொடுக்கிறது. அது எம்முடைய கற்பனையைத் தூண்டமாட்டாது எனக் கூறுதல் பொருந்தாது. எமக்கும் கற்பனைத் திறன் உண்டு. ஆகவே அது எம்முடைய கற்பனையைத் தூண்டமுடியும்; ஆனால், புலவனுடைய ஆற்றல் எம்முடைய ஆற்றலிலும் பார்க்கச் சிறந்தது. அவன் தன்னுடைய கற்பனை சிறப்பாகத் தொழிற்படக்கூடிய நிலையில் தன்னை வைத்துக்கொள்கிறான். நாம் அந்த நிலையில் நம்மை வைத்துக்கொள்வதில்லை. அழகுடைய ஒன்றில் அவனுடைய உள்ளம் ஒருப்பட்டு அழுந்துகின்றது. நம்முடைய உள்ளம் அவ்வாறு அழுந்துவதில்லை. உணர்ச்சிவேகம் அவனுக்கு இருப்பதுபோல நமக்கு இருப்பதில்லை. இதுதான் எமக்கும் புலவனுக்கும் இடையேயுள்ள ஒரு முக்கியமான வித்தியாசம்.

1) புலவனுடைய அனுபவத்தையும் எமது அனுபவத்தையும் பற்றி கட்டுரை ஆசிரியர் எவ்வாறு விளக்குகின்றார்?
2) புலவனுக்கும் எமக்கும் இடையிலான முக்கியமான வித்தியாசம் என்ன என ஆசிரியர் கூறுகின்றார்?
3) புலவனுடைய ஆற்றல் எமது ஆற்றலிலும் பார்க்கச் சிறந்தது எனக் கூறுவதன் காரணம் யாது?
4) இப்பந்தியில் ஆசிரியரின் மொழிநடை பற்றிக் கருத்துரைக்குக.

## பகுதி - II

03. குடிமை எனும் அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறுவனவற்றை ஆதாரமாகக் கொண்டு,
அ. நல்ல குடியில் பிறந்தவர்களின் இயல்புகள்.
ஆ. நல்ல குடியில் பிறந்தவர்கள் அல்லாதவர்களின் இயல்புகள்.
இ. இவ்வதிகாரத்தில் கையாளப்பட்ட அணிச்சிறப்பு.
ஈ. நல்ல குடியென வள்ளுவர் கருதுவது.
மேல் குறிப்பிடப்பட்டவை பற்றிக் கருத்துரைக்குக.

04. கம்பராமாயணத்தில் 'திருவடி சூட்டுப் படலத்தை' ஆதாரமாகக் கொண்டு,
அ. கைகேயி மீது பரதனின் கோபம் வெளிப்படும் விதம்.
ஆ. தசரதன் மீது இராமன் கொண்ட பாசம்.
இ. பரதனைக் கண்ட இலக்குவனின் வீராவேசம்.
மேல்கூறியவற்றை விளக்குக.

05. இரட்சணிய யாத்திரிகத்தில் 'சிலுவைப்பாடு' பகுதியை ஆதாரமாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
அ. பாடலினூடாக வெளிப்படுத்தப்படும் இயேசுநாதரின் தெய்வீகத் தன்மை.
ஆ. எச்.ஏ.கிருஷ்ணபிள்ளையின் இலக்கிய ஆளுமை.
இ. இயேசுவின் சிலுவைப்பாடுகளுக்காக ஆசிரியர் கூறும் காரணங்கள்.

06. சுவாமி விபுலானந்தரின் இலக்கியச் சுவை எனும் கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
அ. இலக்கியங்கள் இவை இவைதாம் என எவற்றைக் குறிப்பிடுகின்றார்?
ஆ. செய்யுட்கள் எனக் குறிப்பிடப்படுபவை யாவை?
இ. இக்கட்டுரையின் மொழிநடையினைப் பரிசீலிக்குக.

07. அ. "நாகம்மாள்" என்ற நாவல் இலக்கியப் பண்புகளுக்கு ஏற்றவகையில் அமைந்துள்ளது. ஆராய்க.
ஆ. இந்நாவலினூடே ஒரு சமுதாயத்தின் வாழ்வியல் அம்சங்களை அறிந்துகொள்ள முடிகிறது. தெளிவுறுத்துக.
இ. இந்நாவல் வாசகர்களுக்குத் தரும் படிப்பினைகள் எவை?

08. அ. "பாற்கஞ்சி" எனும் சிறுகதையில் 'காமாட்சி' எனும் பாத்திரம் பெறுகின்ற முக்கியத்துவத்தினைப் பரிசீலிக்குக.
ஆ. பாற்கஞ்சி சிறுகதையின் மூலமாக வெளிப்படும் சமூகக் கருத்துக்கள் யாவை?
இ. இக்கதையின் முடிவு கதைக்கு எவ்வாறு வலுச்சேர்க்கின்றது? விளக்குக.

09. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றினை விளக்குக.
அ. 'நளி இரு முந்நீர் ஏணியாக' என்ற புறநானூற்றுப் பாடலில் அரசனின் நாட்டுச்
ஆ. 'இராமநாடகக் கீர்த்தனையில்' இராவணன் கொலு வீற்றிருக்கும் காட்சியின் சிறப்பு.
இ. 'காணி நிலம் வேண்டும்' எனும் பாடலில் பாரதியார் பராசக்தியிடம் வேண்டுபவை.
ஈ. 'நலனாய்தல்' என்பதற்கு பாட்டும் ஓசையும் என்ற கட்டுரையில் வி.செல்வநாயகம் தரும் விளக்கம்.
உ. சி.வி.வேலுப்பிள்ளையின் 'தேயிலைத் தோட்டத்திலே' எனும் கவிதையில் தொழிலாளர்களின் நிலை.

(நிறைவுற்றது)

ஆசிரியர்: M.பன்னீர்செல்வம் M.A Dip in Edu (தமிழ்பாட வளவாளர்)
பிரதி அதிபர் - நுவ/இராகலை த.ம.வித்தியாலயம்,
ஹல்கரனோயா.

2010 உயர்தர மாணவர்களுக்காக பல மாவட்ட ஆசிரியர்களால் விசேடமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு பெறுமதிமிக்க படைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, ஓகஸ்ட் 2010.
General Certificate of Education (Advance Level) Examination - August 2010.

## தமிழ்மொழி — பகுதி - II

* முதலாம் பகுதியிலுள்ள மூன்று வினாக்களுக்கும், இரண்டாம், மூன்றாம் பகுதிகளிலிருந்து ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு வினாவையேனும் தெரிந்தெடுத்து மூன்று வினாக்களுக்கும் எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக.

### பகுதி - I

01. பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிந்து 350-400 சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.
அ. பேராசிரியர் வி. செல்வநாயகத்தின் தமிழ்ப்பணிகள்.
ஆ. தமிழும் கலைகளும். இ. இலக்கியம் காட்டும் வாழ்வியல்.
ஈ. சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுத்தல்.
உ. சமூக மாற்றத்திற்கான இலக்கியம். ஊ. ''கற்றதனாலாய பயன்''

02. பின்வரும் 'அ' உரைப்பகுதியையும் 'ஆ' செய்யுளையும் படித்து, அவை ஒவ்வொன்றின் கீழும் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.
அ. அறிவியல் வசதிகளும் கண்டுபிடிப்புகளும் எதிர்காலத்தில் என்ன விளைவை ஏற்படுத்தும் என்று.இன்று தீர்மானிக்க முடியாது. மின்னலுக்கும் மின்சாரத்திற்கும் உள்ள தொடர்பினைக் கண்டுபிடித்த பெஞ்சமின் பிரங்கிளினிடம் இக்கண்டுபிடிப்பால் என்ன பயன் என்று ஒருவர் கேட்டார். ''இன்று பிறந்த ஒரு குழந்தையைச் சுட்டிக் காட்டி இக்குழந்தையால் என்ன பயன் என்று கேட்பதைப் போல் இருக்கின்றது இக்கேள்வி'' என்று அவர் பதில் கூறினார். குழந்தையை எதற்காக, எப்படி, எந்தச் சூழ்நிலையில் வளர்க்கிறோம் என்பதனைப் பொறுத்தே அக்குழந்தையின் பயன் அமையும். அறிவியல் உண்மைகள் யாவும் சமுதாயம் பிறப்பித்த குழந்தைகள். சமுதாயம் இக்குழந்தைகளைத் தன் விருப்பிற்கேற்ப வளர்த்துக்கொள்ளலாம்; தேவைக்கேற்ப பயன்படுத்திக் கொள்ளலாம். பிரச்சினைக்குத் தீர்வு காண அறிவியல் முற்படுகின்றது; நன்மை - தீமை, விருப்பு- வெறுப்பு என்ற மதிப்பீடுகளை எண்ணிப் பார்ப்பதில்லை. மேலும் எந்த அறிவியல் கண்டுபிடிப்பும் முற்றிலும் தீமையானதுமன்று; முற்றிலும் நன்மையானதுமன்று. கண்டுபிடிப்புகளை எடுத்துக் கையாளும் சமுதாயத்தைப் பொறுத்தே நன்மையும் தீமையும் விளைகின்றன.
1) இப்பகுதியில் ஆசிரியர் கூறியவற்றை உமது நடையில் 30 சொற்களுக்குள் சுருக்கி எழுதுக.
2) அறிவியல் கண்டுபிடிப்புகள் எவ்வாறு அமையும் என ஆசிரியர் கூறுகின்றார்?

ஆ. கரும்பாட்டிக் கட்டி சிறுகாலைக் கொண்டார்
துரும்பெந்து வேங்கா துயர் ஆண்டு உழவார்;
வருந்தி உடம்பின் பயன் கொண்டார் கூற்றம்
வருங்கால் பரிவ திலர்.
1) இச்செய்யுள் கூறும் கருத்தை உமது நடையில் 30 சொற்களுக்கு குறையாமல் விரித்து எழுதுக.
2) உடம்பின் பயன் எத்தகையது என புலவர் கூறுகின்றார்?
3) இச்செய்யுளில் இடம்பெற்றுள்ள அணியினை விளக்குக.

03. கீழ்வரும் பதினைந்து வினாக்களும் அ, ஆ, இ என மூன்று பகுதிகளாகத் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்தது இரண்டு வினாக்களையேனும் தெரிந்து எல்லாமாகப் பத்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.
அ. 1) ககரம் மூன்று வகையாக உச்சரிக்கப்படுவதற்கு ஒவ்வொரு உதாரணம் தருக.
2) பின்வரும் சொற்களில் உடன்நிலை, வேற்றுநிலை மெய்மயக்க சொற்களை வேறுபடுத்தி எழுதுக.
தண்ணீர், வெள்ளம், காற்று, தேர்தல், வண்டி, மனிதன்.
3) கவிஞர், புத்திசாலி, பணக்காரன், கலைஞர் போன்ற சொற்களில் பெயர்ப் பகுதிகளை எடுத்துக்காட்டுக.
4) பின்வரும் சொற்களில் எதிர்மறை இடைநிலைகள் எவை?
வராது, நடக்காது, இருக்கமாட்டான், தரமாட்டான்.
5) அடிதழீஇ, ஐப்பசி, மனைவி, தொழாஅ இவற்றிலுள்ள சார்பெழுத்துக்களை வகைகூறி எழுதுக.
ஆ. 1) இடி, கட்டு ஆகிய தன்வினைகளை விகுதிகள் சேர்த்து பிறவினைகளாக எழுதுக.
2) நான்காம் வேற்றுமைக்கான சொல்லுருபுகளை பயன்படுத்தி வாக்கியங்களாக எழுதிக்காட்டுக.
3) வை, விடு ஆகியவை முதல் வினையாகவும், துணைவினையாகவும் வரும் வகையில் வாக்கியம் அமைக்குக.
4) தேனே, மானே, நீயே, அறிந்தே இவற்றுள் ஏகாரம் தேற்றப்பொருளில் வந்துள்ள சொற்கள் எவை?
5) கூட்டுப்பெயர்கள், ஆக்கப்பெயர்கள் இவ்விரண்டையும் எழுதுக.
இ. 1) ''நன்றாய்க் களைத்துவிட்டேன்'' இது எவ்வகை வாக்கியம்?
2) சூரியன் உதிக்கும் முன் உழவன் வயலை உழுதான். இவ் வாக்கியத்தை செயற்பாட்டுவினை வாக்கியமாக மாற்றி எழுதுக.
3) பாரதிக்குப் பின் கவிதைகள் ஒவ்வொன்றும் சமூக கருத்துக்களை பாடுபொருளாகக் கொண்டு அமைந்துள்ளன. இவ்வாக்கியத்தை பிழை திருத்தி எழுதுக.
4) கண்ணன் நடந்தான், மாணவர் படித்தனர் இவற்றை எதிர்மறை வாக்கியங்களாக மாற்றுக.
5) அவன் கவிதைகள் எழுதுவான்.
அவன் கவிதைகளை பத்திரிகைக்கு அனுப்புவதில்லை. பொருத்தமான இடைநிலையை இட்டு இவ்வாக்கியங்களை இணைக்குக.

### பகுதி - II

04. அ. சங்ககால புறத்தினை இலக்கிய மரபு பற்றி விளக்குக.
ஆ. அம்மரபு சோழர்கால இலக்கியத்தில் எத்தகைய செல்வாக்குச் செலுத்தியது?

05. அ. ''சங்கமருவியகால்ம் இலக்கிய ரீதியாக செழிப்பான காலமாகும்'' ஆராய்க.
ஆ. பல்லவர் காலப் பக்திநெறி இலக்கியத்திற்கு சங்கமருவியகாலம் எத்தகைய பங்களிப்புச் செலுத்தியது?

06. அ. விசயநகர நாயக்கர் கால இலக்கிய போக்குப்பற்றி விளக்குக.
ஆ. அக்காலத்தில் தோற்றம் பெற்ற பொதுமக்கள் சார்பு இலக்கியங்களை விளக்கிக் கூறுக.

### பகுதி - II

07. அ. போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் கால இலக்கியப் பண்புகளை விளக்குக.
ஆ. ''இக்காலம் இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது.'' இக்கூற்றின் பொருத்தப்பாட்டை ஆராய்க.

08. அ. இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் இருபதாம் நூற்றாண்டு நாவல் இலக்கியப் பண்புகளை விளக்குக.
ஆ. 1960களுக்குப் பின் இலங்கைத் தமிழ் கவிதை வளர்ச்சியின் செல்நெறி பற்றி விமர்சிக்குக.

09. கீழ்வருவோருள் யாரேனும் இருவர் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பெறும் முக்கியத்துவத்தினை விளக்குக.
அ. ஆறுமுகநாவலர். ஆ. கவிஞர் இ.முருகையன்.
இ. அறிஞர் சித்திலெவ்வை. ஈ. க.தி.சம்பந்தன்.
உ. மங்களநாயகம் தம்பையா.

(நிறைவுற்றது)

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, ஓகஸ்ட் 2010.
General Certificate of Education (Advance Level) Examination - August 2010.

## புவியியல் (மானிடப் புவியியல்) — பகுதி - I

01. ''மக்கள்தான் ஒரு நாட்டினுடைய இயற்கை வளம். சனத்தொகை அதிகரிக்க அதிகரிக்க அந்நாடும் அதன் சமூக அமைப்பும் பல நன்மைகளைப் பெறுகின்றன.'' என்ற கருத்தை முன்வைத்து சனத்தொகை வளர்ச்சியை ஆதரித்த அறிஞர் யார்?
1) கார்ல் மார்க்ஸ். 2) மக்ஸ் வெபர். 3) மல்தூஸ் 4) கார்ல் ரிட்டர்.

02. புராதன எகிப்தியர்களும் அமெரிக்க செவ்விந்தியர்களும் ''பல்வலிக்கு மருந்தாகவும் பிரேதேங்களைக் கெடாது பதப்படுத்தவும்'' பயன்படுத்தி வந்த பொருள்,
1) மண்ணெண்ணெய். 2) பெற்றோல்.
3) உயிர் வாயு (Bio gas). 4) வெந்நீர்.

03. யுரேனியத் தனிமத்திலிருந்து அணுச்சக்தி (Nuclear Power) உற்பத்தி செய்யப்படுகின்றது. அதில் உலக யுரேனிய உற்பத்தியில் 1/3 பங்கைக் கொண்டு காணப்படும் நாடுகளின் தொகுதி எது?
1) கியூபா, இங்கிலாந்து, நியூசிலாந்து.
2) அமெரிக்கா, கனடா, தென் ஆபிரிக்கா.
3) அமெரிக்கா, இங்கிலாந்து, இந்தியா. 4) ஈரான், அமெரிக்கா, இஸ்ரேல்.

04. டொனற்ஸ், ரியூலா என்ற பிரபல்யமான நிலக்கரி (Coal) மையங்களைக் கொண்டு காணப்படும் நாடு,
1) இங்கிலாந்து. 2) வெனிசுவெலா.
3) பிறேசில். 4) சோவியத் ரஷ்யா.

05. உலோகங்களில் பெறுமதி வாய்ந்த தங்கத்தை உற்பத்தி செய்யும் நாடுகளுள் ஒன்று ''கோல்ட் கோஸ்ட்''(Gold Coast) ''தங்கக்கரை'' என்ற பெயரால் அழைக்கப்படுகிறது அந்நாடு,
1) பிஜி. 2) சிலி. 3) கானா. 4) சூடான்.

06. தென்னாசிய நாடுகளுள் (SAARC) கல்வியறிவு வீதம் கூடிய நாடு,
1) இலங்கை. 2) பூட்டான். 3) இந்தியா. 4) மாலைதீவு.

07. சமூக அபிவிருத்தி மட்டத்தைக் கணிப்பதற்கு உலக மனித அபிவிருத்திக் குறிகாட்டி (Human Development Index) பயன்படுத்தப்படுகிறது. அதில் வளர்ச்சியுற்ற நாடாக ஜப்பான் விளங்குகிறது. அதன் குறிகாட்டி அளவு அலகு யாது?
1) 0.981 2) 0.876 3) 0.891 4) 0.712

08. பின்வரும் முறைகளுள் எதைப் பயன்படுத்தி ரேடியோ அலைகளின் துணைகொண்டு கண்ணுக்கெட்டாத பொருட்களைக் கண்டுப்பிடிக்கின்றனர்?
1) புவி விஞ்ஞானமுறை (Geo Scientific Method)
2) செய்மதிகள் (Satellites) மூலம்.
3) ரேடார் (RADAR- Radio Detecting And Ranging)
4) X கதிர்கள்

09. பாரிய கொழும்புப் பொருளாதார ஆணைக்குழு என்ற அமைப்பு உருவாக்கப்பட்ட ஆண்டு,
1) 1968 2) 1958 3) 1948 4) 1978

10. உலகின் நீளமான பாதையான திரான்ஸ்க் கனடாவின் (Trans - Canada) நீளம் என்ன?
1) 7,000km 2) 7,580km 3) 8,000km 4) 8,812km

11. இலங்கையில் பிரபல்யமான ஒரு ஹோட்டல் தனது 200 வருடங்களைப் பூர்த்தி செய்ததுடன் அங்கு ஹொலிவூட் (Hollywood) திரைப்படம் ஒன்றும் எடுக்கப்பட்டது. அதன் பெயர் என்ன?
1) தாஜ் சமுத்ரா (TAJ SAMUDRA)
2) மௌன்ட் லவனியா (MOUNT LAVNIA)
3) ஹில்ட்டன் (HILLTON)
4) குளோபல் டவர் (GLOBAL TOWER)

12. A-9 என்ற வீதிக்குறியீடு கொழும்பு- யாழ்ப்பாணப் போக்குவரத்துப் பாதையைக் குறிப்பதுபோன்று A-20 என்ற இலக்கம் குறிக்கும் போக்குவரத்து பாதை எது?
1) பேராதனை - செங்கலடி. 2) அம்பாறை - மஹா ஓயா.
2) ஜாஎல - யக்கல 4) அநுராதபுரம் - ரம்பேவே

13. இலங்கையில் காரீயம் காணப்படும் இடங்கள்,
1) தலாவ, போகல 2) புல்மோட்டை, றாகம.
3) மன்னார், கொழும்பு. 4) சிலாபம், கண்டி.

14. உலகின் மிகப் புராதன கரூயின் பல்கலைக்கழகம் காணப்படும் நாடு எது?
1) ஈரான். 2) எகிப்து. 3) மொரோக்கோ. 4) இங்கிலாந்து.

15. கைத்தொழில்களைத் தீர்மானிக்கும் புவியியற் காரணிகளைக் (Geo Factors) காட்டும் தொகுதி,
1) தொழிலாளர் வசதி, நீர், வலுப்பொருள்.
2) மூலப்பொருள், வலுப்பொருள், நீர்.
3) மூலப்பொருள், மூலதனம், சந்தை.
4) போக்குவரத்து, மூலதனம், வலுப்பொருள்.

16. இந்தியாவில் பாபா அணுஆலை அமைந்துள்ள நகரம் எது?
1) கல்கத்தா. 2) பெங்களூர். 3) பம்பாய். 4) கேரளா.

17. இலங்கையில் காணப்படும் ஒதுக்குக்காடுகளின் (Reserved Forests) அடிப்படையில் மிகவும் அதிகளவான வீதத்தை எந்த மாகாணம் கொண்டு காணப்படுகிறது?
1) ஊவா மாகாணம். 2) வடமேல் மாகாணம்.
3) கிழக்கு மாகாணம். 4) மத்திய மாகாணம்.

18. அவுஸ்திரேலியாவில் வாழ்கின்ற ஆதிவாசிகள் என்ன பெயர்கொண்டு அழைக்கப்படுகின்றனர்?
1) புஸ்மன்கள். 2) பிக்மீஸ்கள்.
3) அபோறிஜினிஸ். 4) எஸ்கிமோவர்.

(அடுத்த வாரம் தொடரும்)

ஆசிரியர்: L.C.ஜன்ஜபீல் B.A(Hons), Sp.Geo
முன்னாள் விரிவுரையாளர்,
ஜாமியா நளிமியா கலாபீடம், பேருவளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BCS கண்காட்சியும் அதனால் யாழ்.மக்கள் பெறும் நன்மைகளும்

பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டதையடுத்து இலங்கையர் அனைவருக்கும் குறிப்பாக வடக்கு கிழக்கில் உள்ளவர்களுக்கு பல்வேறு விதமான கல்விசார் திறமைகளை தகுதிகளைப் பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் கிடைத்துள்ளன.

போரின் காரணமாக தடைபட்டிருந்த யாழ்ப்பாணத்து மாணவர்களின் மனங்களை உயர் கல்வியின்பால் திருப்ப வேண்டிய சூழ்நிலை தோன்றியிருப்பதாக கல்வியாளர்கள் கருதுகிறார்கள். இதனை மனதில் வைத்து BCS, இலங்கையின் தகவல் தொழில்நுட்ப ஒன்றியத்துடன் கைகோர்த்து தமது தொழில்சார்ந்த கல்வி தகுதிகளை அறிமுகப்படுத்துவதற்கு முன்வந்துள்ளது.

இது BSc (hon) பட்டத்துக்கு இணையானதாகும். தகவல் தொழில்நுட்பத்திற்கு BCS போன்ற பட்டங்களை வழங்கும் பட்டய நிறுவனங்கள் யாழ்ப்பாண மாவட்டத்துக்குள் வருவதானது நாட்டின் ஏனைய பகுதிகளுடன் இணைந்து முன்னேறுவதற்கான சந்தர்ப்பத்தைக் கொண்டு வருவதாக உள்ளது. இதனால் தகவல் தொழில்நுட்பத்துறையில் வடபகுதி இளைஞர்கள் இணைந்து முன்னேறுவதற்கு வாய்ப்புகள் ஏற்பட்டிருப்பதுடன் உலக தொழில்சார் நிலைமைகளுடன் போட்டியிட்டு வெற்றி பெறவும் வாய்ப்பளிப்பதாக அமைகின்றது. யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் Mini Infotel Exhibition கண்காட்சியில்BCS கலந்து கொள்வதானது அதன் தொடர்புகளை மேற்கொண்டும் ஸ்திரப்படுத்திக் கொள்ளவும் பலப்படுத்தி கொள்ளவும் உதவுவதாய் இருக்கும். BCSஇன் சர்வதேச தரங்களை வழங்குகின்ற தற்கால வழங்குநர்களுடன் இணைந்து செயல்படவும் இது உதவுவதாய் இருக்கும். தற்பொழுது CINEC CAMPUS, ESOFT மற்றும்IDM போன்றவை BCS வழங்குனர்களாக பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களாக யாழ்ப்பாணம், திருகோணமலை மற்றும் கிழக்கிலங்கையின் பல பாகங்களிலும் சேவையாற்றி வருகின்றன.

தகவல் தொழில் நுட்ப திறமையானது இலங்கையில் மட்டுமல்ல வேறு பல நாடுகளிலும் குறைந்தே காணப்படுவது ஒரு சவாலாக உருவெடுத்துள்ளது என்று BCS பிராந்திய முகாமையாளர் திருமதி நிரஞ்சலா வீரசிங்க அண்மையில் கூறியிருந்தார். அவர் மேலும் கூறியது:-

### தகவல் தொழில்நுட்பம் அறிந்த சமூகம்

இதைப் போன்ற கண்காட்சிகள் யாழ்ப்பாண மக்கள் மேற்கொண்டும் தொழில் நுட்பங்களைத் தேடிக் கொள்ளவும் கல்வி சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொள்ளவும் உதவுவதாய் இருக்கும். இது உள்ளூர் மற்றும் சர்வதேச சந்தை வாய்ப்புகளுக்கு வழியேற்படுத்திக் கொடுப்பதாகவும் இருக்கும் என்று கூறினார்.

விளம்பர வரணம்

எதிர்கால சவால்களையெல்லாம் எதிர்கொள்வதற்கு தகவல் தொழில்நுட்பம் அறிந்த சமூகம் ஒன்றை நாம் கட்டியெழுப்புவது அவசியமாகும். உயர் மட்ட தகவல் தொழில்நுட்ப கல்வி அமைப்பு ஒன்று இருந்தால் மட்டுமே தகவல் அறிவுள்ள சமூகம் ஒன்றை கட்டியெழுப்புவது சாத்தியமாகும் என்று திருமதி நிரஞ்சலா வீரசிங்க மேலும் குறிப்பிட்டார்.

கடந்த 15 ஆண்டுகளில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் BCS உயர் கல்வியை நாடி பெற்றிருக்கிறார்கள். தகவல் தொழில் நுட்பத்துறையில் மாணவர்கள் உயர் தரங்களை அடைவதற்கு இந்தத் தகுதியே வேகம் நிறைந்த வழித்தடமாகும்.

இந்தத் தராதரம் BCS 100 நாடுகளில் கிடைக்கின்றது. உலகம் முழுவதும் 70,000 உறுப்பினர்கள் பயில்கின்றார்கள். ஐக்கிய ராஜ்யத்துக்கு வெளியில் இலங்கையிலேயே அதிக அங்கத்தவர்கள் இருக்கிறார்கள். இங்கு ஏறத்தாழ 4500 பேர் பயில்கிறார்கள். வடக்கு கிழக்கில் மிக விரைவில் BCS பரீட்சைகளை நடத்துவதற்கான பேச்சுவார்த்தைகள் ஏற்கனவே கொழும்பில் பிரிட்டிஷ் கவுன்சிலுடன் நடைபெற்று வருகின்றன.

பெப்ரவரி 26ஆம் திகதியிலிருந்து 28 ஆம் திகதி வரை வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவிருக்கும் கண்காட்சியில் வடக்கு கிழக்கு மக்கள் பெருமளவில் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் கிடைக்கும் நன்மைகளை பெற்றுக் கொள்வதுடன் இலங்கையின் கல்வி பயணத்தில் மேலும் அடியை எடுத்து வைத்து முன்னேறலாம். BCSபிரதிநிதிகளை எமது www.bes.org.uk/exams இணைய முகவரியிலும் கண்காட்சி நிலையத்திலும் சந்திக்கலாம்.

# சகல சிறுவர் போராளிகளும் மே மாதமளவில் விடுதலை செய்யப்படுவர் என அரசு அறிவிப்பு

கொழும்பு, பெப்.23

எதிர்வரும் மே மாதமளவில் சகல சிறுவர் போராளிகளையும் விடுதலை செய்ய முடியும் - என்று அரசு அறிவித்துள்ளது.

எதிர்வரும் மே மாதம் 22 ஆம் திகதியுடன் குறித்த சிறுவர் போராளிகளுக்கு தற்போது அளிக்கப்பட்டு வரும் மறுவாழ்வுத் திட்டம் நிறைவடைகிறது எனவும், அதன் பின்னர் அவர்கள் குடும்பங்களுடன் இணைக்கப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### அரசு அறிவிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளினால் பலவந்தமாக சேர்க்கப்பட்ட பெரும் எண்ணிக்கையான சிறுவர் போராளிகளுக்கு அரசு தற்போது மறுவாழ்வு அளிக்கப்பட்டு வருகிறது எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

தொழிற்பயிற்சி மற்றும் பாடசாலைக் கல்வி என பல்வேறு துறைகளில் குறித்த சிறுவர் போராளிகளுக்குப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(அ-சி)

# விதை மடிந்தால் முளை கிளம்பும்

ஜெகன் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவன். அவனிடம் ஒரே ஒரு சட்டை மட்டுமே இருந்தது.அதையே நாள்தோறும் துவைத்து அணிந்து வருவான். ஒரு நாள் அந்தச் சட்டையும் கிழிந்து விட்டது. கிழிந்த சட்டையோடு பள்ளிக்கு வந்த ஜெகனை சக மாணவர்கள் கேலி செய்தார்கள்.இதைக் கண்ட ஆசிரியர் அவனைக் கண்டித்தார்.ஜெகனுடைய பரிதாப நிலையை கண்ட ஜெராட் அவன் மீது இரக்கம் கொண்டான். தான் சேர்த்து வைத்திருந்த பணத்துடன் தன் பெற்றோருடைய உதவியையும் பெற்று, ஜெகனுக்கு ஒரு புதிய சட்டை வாங்கிக் கொடுத்தான். இந்த மாணவனுடைய மனநிலை எவ்வாறு இருந்தது ஏன் அவன் இவ்வாறு சிந்தித்தான்? மற்றவர்களைப் போல அவனும் இந்த மாணவனைக் கேலி செய்யாமல் தடுத்தது எது?

உண்மையில் இச்சம்பவத்தைப் படிக்கும் போது இயேசு ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள் என்று கூறிய வார்த்தைகள் நினைவுக்கு வருகின்றன. இயேசு இவ்வாறுதான் செயற்பட்டார். ஏழை எளியவர்களுக்கு உதவி செய்தார். அவர்களுக்கு இரக்கம் காட்டினார். இயேசு எல்லா மனிதரையும் அன்பு செய்தார்.தமது உயிரையே கொடுக்கும் அளவுக்கு அன்பு செய்தார். நாமும் பிறரை அவர்களுடைய நிறைகளோடும், குறைகளோடும் ஏற்றுக் கொள்ள வேண்டும். பிறருடைய இன்பங்களிலும், துன்பங்களிலும் பங்கேற்க வேண்டும். பிறருக்கு எம்மையே தியாகம் செய்ய வேண்டும். எனவே அநீதிகளையும், அக்கிரமங்களையும் ஒழிக்க அவற்றை எதிர்த்துப் போராட வேண்டும்.

தவக்காலச் சிந்தனை



கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தால் ஒழிய பயன்தர முடியாது என இயேசு கூறுகின்றார். அதற்கமைய நாம் ஒவ்வொருவரும் பலன் கொடுக்கும் கருவிகளாக வாழ இயேசு காட்டிய பாதையில் பயணத்தைத் தொடருவோம்.

''உங்கள் பகைவனிடம் அன்பு செலுத்துங்கள். அவர்களுக்கு நன்மை செய்யுங்கள்..... மன்னியுங்கள் மன்னிப்புப் பெறுவீர்கள்''.

நாவாந்துறை — செல்வி துஷ்யந்தினி சிலுவைதாஸ்.


நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா ?

இதோ பாவியுங்கள்

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும் கறுப்பாகவும் அழகாகவும் வளரச்செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

**சித்தாரா பொன்னாங்காணித் தைலம்**

பொன்னாங்காணித் தைலம் வாங்கும்போது வர்ணமூடியுடன் சித்தாரா டிஸ்பென்ஸரி வைத்திய முத்திரைக் குறியீடு உள்ளதா என பொதி செய்யப்பட்ட பெட்டியைத் திறந்து சரிபார்த்து வாங்குங்கள்

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw
(Reg.No:- 6382) AR/PR/No.228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
சிவா நறுமணப்பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2567

(C/564561)


# இலவச கண் சிகிச்சை

யாழ்ப்பாணம், பெப்.23

கண்களில் பாதிப்புற்றிருக்கும் 500 நோயாளிகளுக்கு இலவசமாக நவீன தொழில் நுட்பத்துடன் கண்களுக்கு வில்லை பொருத்துவதற்கும் சத்திர சிகிச்சையினை மேற்கொள்வதற்குமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இலங்கை முஸ்லிம் வாலிபர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இம்மாத இறுதி வாரத்தில் கண் பரிசோதனை நடத்தப்பட்டு அடுத்த மாத முதல் வாரத்தில் தெரிவு செய்யப்படும் நோயாளிகளுக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று மாநகரசபை உறுப்பினர் எஸ்.சுபியான் தெரிவித்துள்ளார்.

(04-9)

# நெஞ்சை விட்டகலா ஓராண்டு நினைவில்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 26 ★ 08 ★ 1956 |  | 06 ★ 03 ★ 2009 |

**அமரர் கிருஷ்ணபிள்ளை வரதராசா (பாபு)**

**(உரிமையாளர் கிருஷ்ணா கபே )**

திதி: தசமி

ஓராண்டு ஆனதப்பா எமை விட்டு நீர் பிரிந்து
பசுவோடு கன்றுகளுமாய் கலங்கி நிற்கின்றோம்
என்று நீங்கள் வருவீர்கள்? எம் சிறப்புக்காண
ஒன்றுமே அறியாமல் உங்கள் நினைவால் வாடுகின்றோம்.

நெஞ்சை விட்டகலா நினைவுகளுடன்:
குடும்பத்தினர்.

இராச வீதி,
அச்சுவேலி.

(92154)

# 61 ஆம் நாள் நினைவஞ்சலி



**திருமதி விஜயகுமார் சர்வேஸ்வரி**

மலர்வு 27.02.1969
உதிர்வு 25.12.2009

கடந்த 25.12.2009 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்ப விளக்கின் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகள் இன்று (23.02.2010) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதோடு மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
இ.விஜயகுமார் (கணவர்).
சர்வோதய வீதி,
ஆவரங்கால் மேற்கு, புத்தூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் 20ஆவது ஆண்டு நிறைவுவிழா ஞாயிற்றுக்கிழமை ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்க விடுதியில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் உரையாற்றுவதை முதலாவது படத்திலும், வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் தலைவர் வைத்திய கலாநிதி ந.சிவராஜா தலைமையுரை நிகழ்த்துவதை இரண்டாவது படத்திலும், தையல் போட்டியில் முதலாவது இடத்தினைப்பெற்ற திருமதி எஸ்.சுந்தரேஸ்வரிக்கு பிரதம விருந்தினர் பரிசில் வழங்குவதை மூன்றாவது படத்திலும், வாழ்வகம் சிறுவர்கள் வழங்கிய சிரட்டை நடனத்தினை நான்காவது படத்திலும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரை இறுதிப் படத்திலும் காணலாம்.

(படங்கள்:- ரட்ணம்)

## வடக்கின் வசந்தம் திட்டத்தின்கீழ்

# யாழ்ப்பாணத்துக்கு ஒதுக்கப்பட்ட 100 கோடி ரூபாவில் 22 கட்டடங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன

## வடமாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் தகவல்

யாழ்ப்பாணம்,பெப்.23

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் ஜனாதிபதியின் ஆலோசகர் பசில் ராஜ பக்ஷவினால் ஒதுக்கித் தரப்பட்ட 100 கோடி ரூபா நிதியிலிருந்து இதுவரை 22 கட்டடவேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. அவற்றிலே இன்று திறந்து வைக்கப்பட்ட இரண்டு கட்டடங்களும் அடங்கும்.

தீவக வலயக் கல்வி அலுவலகத்தின் கணனி வளநிலையம், வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தின் இரண்டு மாடி வகுப்பறைக் கட்டடம் என்பவற்றைத் திறந்து வைக்கும் நிகழ்விலே உரையாற்றிய வடக்கு கல்வியமைச்சு செயலாளர் இளங்கோவன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் வடக்கு ஆளுநரும் எமது அபிவிருத்திப் பணிகளுக்குத் தமது பூரண ஒத்துழைப்பினை வழங்கி வருகின்றனர்.

நானும் தீவகத்தைச் சேர்ந்தவன் என்பதுடன் எனது முதல் நியமனம் வேலணை பிரதேச செயலகத்தில் ஆரம்பித்ததன் காரணமாக இப்பிரதேசத்திலே பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் ஏனைய அரச உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் இடர்பாடுகளை நன்கறிவேன். அவர்களின் அர்ப்பணிப்பான சேவைக்குரிய மதிப்பு வழங்கப்படும் என்று மேலும் கூறினார் இளங்கோவன். இந்த நிகழ்விலே ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி. ஏ.சந்திரசிறியினால் வலய கணணி வள நிலையம், வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தின் இரண்டு மாடி வகுப்பறைக் கட்டடம் என்பன திறந்து வைக்கப்பட்டன. வேலணை மத்திய கல்லூரிக்கு மின்பிறப்பாக்கி ஒன்றும் வழங்கப்பட்டது. பின்னர் ஆளுநர் மற்றும் அதிகாரிகள் குழுவினர் வேலணை மத்திய கல்லூரி, வேலணை சரஸ்வதி வித்தியாலயம் ஆகியவற்றின் கட்டட வளங்களைப் பார்வையிட்டனர். மேலும் தீவகப் பாடசாலைகளிலிருந்து இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு 300 சைக்கிள் வண்டிகளை வழங்கவும், வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தின் கட்டட வேலைகளுக்கு 3 லட்சம் ரூபாவை வழங்கவும் ஆளுநர் உறுதியளித்தார்.

இந்நிகழ்விற்கு தீவக வலய கல்விப் பணிப்பாளர் ஜி.ப.இராதாகிருஷ்ணன் தலைமை தாங்கினார். (ரி-267)

## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம்,பெப்.23

யாழ்.மத்திய கல்லூரியின் ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை கல்லூரி அதிபர் எல்.ஓங்காரமூர்த்தி தலைமையில் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதமவிருந்தினராக 'நவீல்ட்' பாடசாலை அதிபர் மகேந்திரன் கலந்து கொள்ளவுள்ளார். (04-23)

* * *

தெல்லிப்பளை தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளியின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் பாடசாலை அதிபர் க.காராளசிங்கம் அவர்களின் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சங்கானை பிரதேச செயலக அபிவிருத்தி உதவியாளர் கா.சசிகரன் பிரதமவிருந்தினராகவும், யாழ்ப்பாணம் மக்கள் வங்கி பதவிநிலை உதவியாளர் வி.சிவபாலன் சிறப்பு விருந்தினராகவும், தெல்லிப்பழை -மல்லாகம் லயன்ஸ் கழகத் தலைவர் ப.கமலநாதன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர். (201-ரி)

* * *

நெடுந்தீவு ,பெப் 23

நெடுந்தீவு மங்கயற்கரசி வித்தியாலய வருடாந்த மெய்வன்மைப்போட்டி நாளை புதன் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மேற்படி வித்தியாலய மைதனத்தில் நடைபெறும்.

வித்தியாலய அதிபர் கோ.பாத்மநாதன் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக ஓய்வுபெற்ற அதிபர் சு.நடராசலிங்கமும்,கௌரவ விருந்தினர்களாக நெடுந்தீவு கோட்டக்கல்விப் பணிப்பாளர் க.அரசரத்தினம்,தென்னிந்திய திருச்சபைப் போதகர் ஆர்.யோன்செல்வம் ஆகியோரும் கலந்து கொள்வார்கள்.போட்டிகளில் வெற்றிபெற்றவருக்கான பரிசில்களை திருமதி சற்குணராணி நடராசலிங்கம் வழங்குவார். (ரி-111)

# மேசன், தச்சு தொழில் தகைமை சான்றிதழ் தேர்வுக்கு குறைவான பயிலுநர்களே வருகை

## இதுபற்றி பலரும் அறியாதிருப்பதே காரணம்

யாழ்ப்பாணம், பெப்.23

தேச நிர்மாணத்துறை பொறியியல் சேவைகள் அமைச்சினால் மேசன், தச்சு தொழிலாளர்களுக்கான தேசிய தொழில் தகைமைச் சான்றிதழ் வழங்குவதற்கான செயன்முறை தேர்வு தற்போது யாழ்ப்பாணத்தில் பண்ணை அரசினர் வைத்திய சாலையில் நடைபெற்று வருகின்றது.

இதில் கலந்துகொள்ளும் தொழிலாளர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக உள்ளதாக இதற்குப் பொறுப்பாக உள்ள அதிகாரிகள் கவலை தெரிவிக்கின்றனர். இவ்வாறான திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருவது பெரும்பாலான தொழிலாளர்களுக்குத் தெரியாமல் இருப்பதே அவர்கள் இப்பயிற்சியில் அதிக அக்கறை காட்டாமைக்குக் காரணம் என்று பயிற்சிப் பொறுப்பாளர்கள் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், சில கிராமசேவையாளர்கள் பயிலுநர்களுக்கான நற்சான்றிதழ்களை முறையாக வழங்காமையும் அவர்கள் அதிக எண்ணிக்கையில் பயிற்சியில் கலந்துகொள்ளாமைக்கு இன்னொரு காரணம் என்று தெரிவித்தனர். (ப-எம்)




# தென்பகுதிச் சுற்றுலாப் பயணிகளால் நிரம்பி வழியும் குறிகாட்டுவான் துறைமுகம்

யாழ்ப்பாணம், பெப்.23

குறிகாட்டுவான் துறைமுகம் தினமும் சுற்றுலாப் பயணிகளினால் நிரம்பி வழிகின்றது.

தென்பகுதியில் இருந்து யாழ். குடாநாட்டுக்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளில் பெரும்பாலானோர் நயினாதீவைப் பார்வையிடச் செல்கின்றனர்.

குறிகாட்டுவான் துறையில் இருந்து படகுகள் மூலம் இந்தச் சுற்றுலாப் பயணிகள் செல்வதால் துறைமுகத்தில் எந்த நேரமும் சனக்கூட்டம் நிரம்பி வழிகின்றது.

இந்தச் சன நெரிசலை கட்டுப்படுத்தும் முகமாக மேலதிக படகுகள் சேவையில் ஈடுபடுத்தப்படுவதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அதேவேளை வாரஇறுதி நாள்களிலும் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துக் காணப்படுகின்றன. (50-224)

# கைதடி முதியோர் இல்லத்தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

யாழ்ப்பாணம், பெப்.23

கைதடி அரச முதியோர் இல்லத்தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக இல்லத்தின் அத்தியட்சகர் என்.இராஜலிங்கம் தெரிவித்தார்.

வடக்கு சமூக சேவைகள் திணைக்களத்தின் அனுசரணையுடன் இந்த டெங்கு ஒழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இல்லத்தின் வளாகத்தில் இருந்த பற்றைகள் மற்றும் செடிகள், புற்கள் என்பன சிரமதானம் மூலம் வெட்டி அகற்றப்பட்டன.

வளாகப் பகுதியில் நுளம்பைக் கட்டுப்படுத்துவதற்காக கிருமிநாசினி தெளிக்கப்பட்டது. அத்துடன் இல்லத்தில் தங்கியிருக்கும் முதியோர்கள் மத்தியில், டெங்கு தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளும் நடத்தப்பட்டன. (50-224)

# பழுதடைந்த சமுத்திராதேவியைத் திருத்த தொழில்நுட்பவியலாளர் குழு யாழ்.வந்தது

யாழ்ப்பாணம், பெப்.23

'சமுத்திராதேவி' படகைத் திருத்துவதற்கு கொழும்பில் இருந்து தொழில்நுட்பவியலாளர் குழு ஒன்று கடந்த 20ஆம் திகதி யாழ்ப்பாணம் வந்தது.

இந்தக் குழுவினர் படகைத் திருத்தும் பணியில் தற்போது ஈடுபட்டுள்ளனர்.

நெடுந்தீவுக்கும் குறிகாட்டுவான் துறைக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் 'சமுர்த்திராதேவி' படகு அண்மையில் பழுதடைந்தது.

இந்தப் படகு பழுதடைந்ததால் நெடுந்தீவுக்கான பொருள்களைக் கடல் மார்க்கமாகக் கொண்டு செல்லும் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக நெடுந்தீவுப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது 'சமுத்திராதேவியைத்' திருத்துவதற்குக் கொழும்பிலிருந்து வந்த தொழில்நுட்பவியலாளர் குழு திருத்த வேலைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் விரைவில் மீளவும் குறித்த படகைச் சேவையில் ஈடுபடுத்தமுடியும் எனவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (04-224)

# நகரில் வெடித்த லொறி ரயர்கள்; பதறியடித்துக்கொண்டு மக்கள் ஓட்டம்!

யாழ்ப்பாணம், பெப்.23

யாழ்.முற்றவெளிப் பகுதியில் பாரவூர்தி ஒன்றின் இரண்டு சில்லுகளும் மாறிமாறி பாரிய சத்தத்துடன் வெடித்தன. இதனால் எழுந்த பாரிய சத்தத்தைக் கேட்டு வீதி



யால் சென்ற பொதுமக்கள் 'குண்டுச் சத்தமோ' என்று பீதியடைந்து நாலா பக்கமும் சிதறி ஓடினார்கள். இச்சம்பவம் சில நாள்களுக்கு முன்னர் யாழ்.நகரில் இடம்பெற்றது. ரயர் வெடித்த சத்தம் கேட்டுப் பதறி ஓடிய மக்கள் 'லொறி ரயர்தான் வெடித்தது' என்பதை அறிந்த பின்னரே வழமைக்கு திரும்பினர்.

முன்னர் குண்டுச் சத்தங்களுக்கே பழகப்பட்ட குடாநாட்டு மக்கள் இப்போது வாகன ரயர்கள் வெடித்தாலே அவற்றுக்கு அஞ்சிப் பீதியடைகின்றனரே என்றும் சிலர் பேசிக்கொண்டனர்.

எனினும் சிலநாள்களுக்கு முன்னர் கொழும்புத்துறைப் பகுதியில் இடம்பெற்ற மர்மப்பொருள் வெடிப்பினால் இரு மாணவர்கள் பலியான சம்பவத்திற்குப் பின்னரே இவ்வாறு சாதாரண ரயர் வெடித்த சத்தத்துக்கும் மக்கள் பதறியதாகக் கூறப்பட்டது. (04-224)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

## தருபவர்: வித்யா

### மேடம்



பல நாள்களாக தள்ளிவைத்த பயணம் ஒன்றை மேற்கொள்ளலாம். எந்த வேலையைச் செய்தாலும் அதை ஒன்றுக்கு இரண்டு முறை சரி பார்த்துக் கொள்வது நன்மை தரும். பெண்கள் வழியில் பொருள் வரவுகளைப் பெறலாம். அன்றாடப் பணிகளில் தடை, தாமதங்கள் ஏற்படலாம். சிலரிடம் கேலி பேசி வெறுப்பேற்றலாம்

### இடபம்



சகிப்புத் தன்மை,பொறுமையுடன் செயல்பட வேண்டிய நாள். மாமன், மைத்துனர்களை நம்பிப் பொறுப்பான பணிகளை ஒப்படைக்க வேண்டாம். வருமானத்தைப் பெருக்கும் வழிகளில் நாட்டம் செல்லும். எதிர்பாராத சந்திப்புகள் நிகழும். சில வேலைகளை தாமதமாகத் தொடங்கினாலும், சரியான நேரத்திற்கு முடிப்பீர்கள்.

### மிதுனம்



உங்களுக்கோ, குடும்ப உறுப்பினர்களுக்கோ உடல் நலக்குறைவுகள் ஏற்படலாம். நண்பர்களுடன் சில பிரச்சினைகளுக்காக வாக்குவாதம் செய்யலாம். கடுமையாகப் பேசுவதன் மூலம் சிலரின் மனஸ்தாபத்திற்கு ஆளாகலாம். குறுக்கு வழி சிந்தனைகளைத் தவிர்ப்பது நல்லது. வெளியூர்களில் இருக்கும் ஒருவர் உங்களை தொடர்பு கொண்டு பேசலாம்.

### கடகம்



தன்னம்பிக்கை அதிகரிக்கும். திட்டமிட்ட சில விடயங்கள் நடைபெறாமல் போனாலும், திட்டமிடாத காரியங்களில் வெற்றி காண்பீர்கள். வாகனங்கள் வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. பெற்றோர்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவது நல்லது. வீடு மாற்றம் பற்றிய சிந்தனைகள் அதிகரிக்கும்.

### சிங்கம்



கடன் மிகுதிகள், கட்டண மிகுதிகளைச் செலுத்துவீர்கள். உறவினர்களுக்கு மற்றவர்களை நம்பி வாக்குறுதிகளைக் கொடுக்க வேண்டாம். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். அரசியல் தொடர்புடையவர்கள் அலைச்சல்களுக்கு ஆட்படலாம். எதிர்பார்த்த பணவரவுகள் வரலாம். பேச்சால் சாதிக்கும் நாள்

### கன்னி



செலவுகளைக் குறைத்து சேமிப்பை அதிகரிக்க வேண்டிய நாள். இரண்டு நாள்களாக சந்திக்க முடியாத ஒருவரை இன்று சந்திப்பீர்கள். மற்றவர்கள் உங்களைப் பார்த்து பொறாமைப்படும் அல்லது பரிதாபப்படும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம். பெரிய மனிதர்களின் ஆசிகளைப் பெறுவீர்கள். சோர்வு, சோம்பல் அதிகரிக்கும்.

### துலாம்



வீண் பேச்சுக்களை, விவாதங்களைத் தவிர்க்க வேண்டிய நாள். எங்காவது வெளியில் புறப்படும் நேரத்தில் சில பொருள்கள் கிடைக்காமல் எரிச்சல் அடையலாம். வாடகை வீட்டில் குடியிருப்போர் பிரச்சினைகளுக்கு ஆள்படலாம். பெரிய அளவில் ஆதாயத்தை எதிர்பார்த்த விடயம் ஒன்றில் சிறிய அளவில் பலன் கிடைக்கும்.

### விருச்சிகம்



கடின உழைப்புக்குப் பலன் கிட்டும் நாள். மனைவி, குழந்தைகளின் விருப்பங்களை நிறைவேற்ற தாராளமாகச் செலவு செய்வீர்கள். குடும்பப் பெரியவர்கள் உங்களுக்கு நல்ல யோசனை சொல்லலாம். நீண்ட நாள்களாகப் பிரிந்திருந்த குடும்ப உறுப்பினர்கள் ஒன்று சேரலாம். எதிலும் முன்னெச்சரிக்கையுடன் செயல்படுவது நல்லது.

### தனுசு



எடுத்த காரியங்களில் எதிர்பாராத வெற்றி கிட்டும். தந்தை தொடர்பான வழியில் அனுகூலமான உதவி கிடைக்கும். தேக ஆரோக்கியம் தெம்பு உற்சாகம் தரும். கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். மலைபோல் நம்பிய நண்பர் ஒருவர் உங்களை கடைசி நேரத்தில் கைவிடலாம். உதிரி வருமானம் கிட்டும்.

### மகரம்



வேண்டாத நண்பர்களால் சிரமங்களைச் சந்திக்கலாம். உறவினர்கள் சிலர் உங்களை மரியாதை குறைவாக நடத்தலாம். போட்டி எதிர்ப்புகளால் நினைத்ததைச் சாதிக்க முடியாமல் போகலாம். பெண்கள் தெய்வ வழிபாடுகளில் அக்கறை காட்டுவர். சிலருடன் கூட்டாகச் சேர்ந்து மேற்கொண்ட முயற்சிகளில் வெற்றி கிட்டும்

### கும்பம்



மாற்று மத நண்பர்கள் வழியில் மனதிற்கு இனிய உதவிகள் கிடைக்கலாம். சக ஊழியர் ஒருவரைப் பாராட்டுவது போல மறைமுகமாக விமர்சனம் செய்வீர்கள். சில காரியங்களுக்கு எதிர்பார்த்ததை விட அதிகமாகச் செலவாகலாம். நினைத்த வேகத்திற்கு சில வேலைகள் நடக்காமல் போவதால் மனம் வருத்தம் அடையலாம்.

### மீனம்



பல மணி நேரமாகலாம் என நினைத்த வேலை ஒன்று சில நிமிடங்களில் முடிந்து விடலாம். பொழுது போக்கு உல்லாச விடயங்களில் நாட்டம் செல்லும். அரசியல்வாதிகளுக்கு செல்வாக்குக் கூடும். தொழில் புரிவோர் எதிர்பாராத வருமானம் பெறலாம். நீங்கள் கைவிட்டுப் போனதாக நினைத்த பொருள் ஒன்று மீண்டும் கைக்குக் கிடைக்கலாம்.


கோண்டாவில் பழைய காளிகோயில் என விளங்கும்
ஸ்ரீசிவமஹா காளிஅம்பாள் தேவஸ்தான
திருமஞ்சத் திருவிழாவையொட்டிய

## காளி அம்பாள் பாமாலை

திருமஞ்சத்தில் ஆடிவரும் சிவமஹா காளியே போற்றி!
வருபஞ்சங்கள் போக்கிடுவாய் பத்திரகாளியே போற்றி!
கோண்டாவில் பதியுறையும் கோமகளே போற்றி!
குறைதீர்த்து நிறைவாக்கும் குணவதியே போற்றி!
மங்கலங்கள் தந்திடுவாய் மனோன்மணியே போற்றி!
மாநிலத்தார் உய்ந்திடவே மனமிரங்குவாய் போற்றி!
வேண்டுவார்க்கு வேண்டும் வரம் ஈயும் ஈஸ்வரியே போற்றி!
வெற்றிக்கு நாயகியே வெக்காளி அம்மையே போற்றி!
பால் நினைந்தூட்டும் தாயின் பரிவுடை பைரவியே போற்றி!
பக்தர்களைக் காத்திடும் பைங்கிளியே கௌரீஸ்வரியே போற்றி!
கூக்குரல்கள் கேட்டுச் சீக்கிரமாய் வந்தே
கொள்ளை அருளை அள்ளித்தரும் அபிராமியே போற்றி!

பட்டுப் பீதாம்பரம் சலசலக்க வருவாய்
பார்வையிலே கனிவும் கருணையும் தருவாய்
மின்னலிடை கெஞ்ச பின்னற்சடை கொஞ்ச
அன்னவாஹினியே வந்தருள் செய்வாய்
மின்னு நவரத்தினங்கள் திருமேனியில் ஜொலி ஜொலிக்க
கிண்கிணி கிணுகிணுக்க சலங்கைகள் கலகலக்க
குண்டலங்கள் செவிகளில் ஆர்ப்ப ஆர்ப்ப
கோடானுகோடி பக்தர் இறைஞ்ச
கண்ணுக்கு மைதீட்டிக் கையிலே வளை பூட்டிக்
காலிலே கொலுசேற்றிக் குந்தவியே வந்திடுவாய்
கண்ணுறு அழகெல்லாம் காட்சியில் தெளித்தே
எண்ணுவார்க்கே இன்பம் தரத் தரிசனம் தந்திடுவாய்
பாலிலே குளித்திடுவாய் பன்னீரில் நனைந்திடுவாய்
பூவிலே மணத்திடுவாய் தேனிலே இனித்திடுவாய்
பழத்திலே சுவைத்திடுவாய் பசுநெய்யிலே உருகிடுவாய்
பக்தர்கள் நெகிழ்ந்துன்னைப் பரவித் துதித்திடுவார்
கற்பூரம் ஏற்றிடுவார் கண்ணீரால் கழுவிடுவார்
நற்பூமாலை சூடிடுவார் பாமாலை பாடிடுவார்
அங்கம் உருண்டிடுவார் அடிஅடித்திடுவார்
பங்கமில்லா வாழ்வுதனைப் பாங்காய் வேண்டிடுவார்
இரவுபகல் பாராமல் உனக்கே உழைத்திடுவார்
இங்கிதமாய் தொண்டு பல பிறர் அறியாமலே செய்திடுவார்
அம்பிகையே உன் கடைக்கண்ணின் கனிவும் கருணையும்
அன்புடனே திருப்பிடுவாய் அவர் பக்கம் அம்மா!

கண்கள் உனைக்காண வேண்டும்
கால்கள் உன் திருவடியை நாடவேண்டும்
பண்ணமைத்து நாஉனைப் பாட வேண்டும்
பாரெங்கும் உன் புகழைக் கேட்க வேண்டும்
நெஞ்சார உன்னைத்துதிக்க வேண்டும்
நினைவே நீயாக ஆக வேண்டும்
ஊரெல்லாம் பக்தர் கூட்டம் பெருக வேண்டும்
ஒற்றுமையாய் அமைதியாய் எல்லோரும் வாழவேண்டும்
உன்பணியில் அடியவர்கள் இணைய வேண்டும்
ஓதும் உன் திருநாமம் ஓங்க வேண்டும்
நோயற்ற வாழ்வும் நொடித்திடா வளமும்
நீடித்த ஆயுளும் நிலையாகத் தந்திடுவாய் தேவி!

தாயே உன் சந்நிதிக்கு எனை அழைத்த அலைமகளும் நீயே!
தரணியில் யான் அவதரித்து வாழ அருளிய மலைமகளும் நீயே!
இங்கே எனைப் பாடவைத்த கலைமகளும் நீயே! - அதனால்
எங்கும் என்றும் எந்தன் வாழ்வும் உன்னதே ஆகும்
உனை நினைக்காத நாளில்லை எந்தன் மனம்
உன் நினைவோடு வாழ்ந்தாலே எதுவும் சுகம்!

(92143)

முக்கிய குறிப்பு: 27.02.2010 சனிக்கிழமையன்று முற்பகல் 10 மணிக்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சித்திரத் தேர்த்திருவிழா இடம்பெறும்.
உபயகாரர்: [illegible]


## புண்ணிய நாச்சியம்மையார் தினப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களின் விபரம்

யாழ்ப்பாணம், பெப்.23

புண்ணிய நாச்சியம்மையார் தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட பண்ணிசை,திருக்குறள் மனனப் போட்டிகளில் வெற்றியீட்டியோரின் விபரங்கள் வருமாறு:-

**பண்ணிசைப் போட்டி**

**கீழ்ப்பிரிவு**

முதலாம் இடம் - ஆதித்தியா அருணகிரிநாதன் (விஸ்வலிங்க மகாகணபதி அறநெறிப்பாடசாலை), 2ஆம் இடம்- லதாங்கி இராமகிருஷ்ணன் (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை), 3ஆம் இடம்- சங்கவி பரஞ் சோதி (யாழ்ப்பாணக் கல்லூரி ),

**ஆறுதல் பரிசில்கள்**

பானுஜா குமரகுருகரன் (யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை), சோவென்ஜா தெய்வேந்திரன் (மகாஜனக் கல்லூரி).

**மத்திய பிரிவு**

முதலாம் இடம்- சகிஷ்ணா ரவிச்சந்திரன் (வேம்படி மகளிர் உயர் தரப்பாடசாலை) 2ஆம் இடம்- கோபிகா தர்மராசா ( வட்டு. மத்திய கல்லூரி), 3ஆம் இடம்- நவரத்தினராசா கபில்ராஜ் (சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி).

**ஆறுதல் பரிசில்கள்**

வைஷ்ணவி செல்வரட்ணம் ( சத்திய சாயி பாசாலை பாடசாலை), சத்தியசீலன் கோகுலன் (யாழ். இந்துக் கல்லூரி).

**மேற்பிரிவு**

முதலாம் இடம்- சிவபாலன் சிவசங்கர் (யாழ். இந்துக் கல்லூரி), 2ஆம் இடம்- தர்சிகா மார்க்கண்டு (வட்டு.இந்துக்கல்லூரி), 3ஆம் இடம்- சர்மினி விக்னராஜா (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி).

**திருக்குறள் மனனப் போட்டி**

**கீழ்ப்பிரிவு**

முதலாம் இடம்-தபோதினி வாசவன் (கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), 2ஆம் இடம்- சங்கவி தயானந்தன் (கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயம்), 3ஆம் இடம்- ரூபவதனா துரைராசா(யாழ்ப்பாணக் கல்லூரி).

**ஆறுதல் பரிசில்கள்**

சிவகோனேசன் மனாமிர்தன் (யாழ். இந்து ஆரம் பப் பாடசாலை), சிவநீதன் துவாரகன் (வட்டு. இந்துக் கல்லூரி ).

**மத்திய பிரிவு**

முதலாம் இடம்- விஜயகுமார் வத்சாங்கித சர்மா (யாழ். இந்துக் கல்லூரி), 2ஆம் இடம்- மீனேஸ்வரன் விதுருசன் (வட்டு. திருநா வுக்கரசு ம.வி), 3ஆம் இடம்- சுபா வாமதேவன் (ஸ்கந்தவரோதயக் கல்லூரி).

**ஆறுதல் பரிசில்கள்**

கீர்த்தனா திருச்செல்வம் (வட்டு .மத்திய கல்லூரி) சுபிக்ஷனா அன்ரனியூட் (பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க பாடசாலை).

**மேற்பிரிவு**

முதலாம் இடம்- யஸ்மிதி கதிர்காமநாதன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), 2ஆம் இடம்- கஜவாணி கனகரட்ணம் (யாழ். இந்து மகளிர் கல்லூரி), 3ஆம் இடம்- அபூர்வசிங்கம் தர்சிகரூபன் (இணுவில் மத்திய கல்லூரி ).

**ஆறுதல் பரிசில்கள்**

தாட்சாயனி மனோகரன் (யாழ்ப்பாணக் கல்லூரி), சங்கவி மகாராஜன் (வட்டு. மத்திய கல்லூரி). (04-201)

## சுற்றுச்சூழலியல்சார் கருத்தரங்குகள்

யாழ்ப்பாணம், பெப்.23

''ஜசாக்'' நிறுவனத்தின் ஏற்பாட்டில் சாவகச்சேரி, யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை ஆகிய பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளில் கால நிலை மாற்றத்தினால் ஏற்படும் பாதகமான விளைவுகளை எதிர்கொள்வது எவ்வாறு என்பது தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன.

''ஜசாக்'' நிறுவனத்தின் இணைப்பாளர் என்.சுகிர்தராஜ் தலைமையில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

இதேவேளை-காக்கை தீவுப்பகுதியில் ஜே/133 கிராமசேவையாளர் பிரிவில் சுற்றுச் [illegible] பொலித்தீன் பிளாஸ்டிக் ஆகிய பொருள்களின் பாவனையால் [illegible] தொடர்பாகவும் கருத்தரங்குகளும் நடத்தப்பட்டுள்ளன. (04-9)


## Management Development and Training Institute, Northern Province

**APPLICATION FOR CERTIFICATE COURSES-2010**
**TO BE CONDUCTED BY THE UNIVERSITY OF JAFFNA.**

Applications from interested officers working in departments attached to Northern Provincial Council, Central Government, Board & Corporations, Banks and NGOs are invited to the 04 months Certificate Courses (**Certificate in Community Development and Management, Certificate in Planning and Project Management Certificate in English Language Skills Development**) to be conducted during week ends.

Selection for course depends on a written examination to be conducted on 06/03/2010 and an interview

Age limit :Below 50 years on the date of closing application

Closing date for applications is on 01/03/2010

Duly completed application should reach the Director, MDTI, NPC, Kanniya Road, Varotheyanagar, Trincomalee.

For further details and specimen application form, please

★ visit website: www.np.gov.lk

OR

★ contact Regional Commissioner,
48, forest office Lane,
Chundikuli, Jaffna - T.P NO: 0212222643

OR

★ contact Director,
MDTI, NP, Trincomalee -TP NO:0263265880

**Director,**
**MDTI, NP**

20.02.2010


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

1.12.1988

★மொனராகலை சீனித்தொழிற்சாலையில் பணி புரிந்த 3 இந்தியப் பிரஜைகளான அதிகாரிகள் கொல்லப்பட்டதையடுத்து வெளிநாட்டு நிறுவனங்களில் பணிபுரியும் இந்தியப் பிரஜைகளை தாயகம் திரும்புமாறு இந்தியத் தூதரகம் ஆலோசனை.

★ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலை உள்ளூர் கண்காணிப்புக் குழுவுடன் இணைந்து கண்காணிக்க சர்வதேச கண்காணிப்புக் குழுவொன்றினை அழைக்க அரசு முடிவு.

02.12.1988

★வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநராக இலங்கை இராணுவத்தின் முன்னாள் தளபதியான நளின் செனவிரத்ன நியமனம்

★ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் ஒஸி அபேகுணசேகரவை படுகொலை செய்ய மேற்கொள்ளப்பட்ட முயற்சி தோல்வி

★ஜனாதிபதித் தேர்தல் ஏற்பாடுகளில் பெரும் முறைகேடுகள் இடம்பெற்று வருவதாக சுதந்திரக் கட்சி குற்றச்சாட்டு.

03.12.1988

★இலங்கை இந்திய ஒப்பந்தம் ஒருதலைப்பட்சமாக இலங்கைத் தரப்பால் ரத்துச்செய்யப்பட்டால் விளைவுகள் பாரதூரமாக இருக்குமென பிரதமர் பிரேமதாசவுக்கும் சுதந்திரக் கட்சித் தலைவி சிறிமாவோவுக்கும் தாம் தெரிவித்துள்ளதாக இந்தியத் தூதுவர் டிக்ஸிற் செய்தியாளர்களிடம் தெரிவிப்பு.

★வடக்கு-கிழக்கு மாகாணசபையின் முதலாவது கூட்டம் டிசெம்பர் 05 ஆம் திகதி திருகோணமலை நகரசபை மண்டபத்தில் இடம்பெறுமென வடக்கு - கிழக்கு மாகாணசபை ஆளுநர் அறிவிப்பு.

04.12.1988

★நாடாளுமன்றம் எதிர்வரும் 20ஆம் திகதி கலைக்கப்பட்டு பெப்ரவரி மாதம் 15ஆம் திகதியன்று பொதுத் தேர்தல் நடத்தப்படுமென ஜனாதிபதி ஜே.ஆர். அறிவிப்பு.

★வடக்கு-கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் ஜனாதிபதி ஜே.ஆரைச் சந்தித்து பேச்சு.

05.12.1988

★தமிழ் மொழியை உத்தியோக மொழியாக்கும் சட்டம் இருவார காலத்துள் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்படும் என இந்தியத் தூதுவர் டிக்ஸிற் தெரிவிப்பு.

★நாடாளுமன்றம் 20ஆம் திகதியன்று கலைக்கப்படுமென ஜனாதிபதி அறிவித்துள்ள போதிலும் ஜனாதிபதித் தேர்தல் சுமூகமாக நடைபெறுவதைப் பொறுத்தே குறிப்பட்ட நாளில் நாடாளுமன்றம் கலைக்கப்படுமென கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தகவல்.

06.12.1988

★வடக்கு - கிழக்கு மாகாணசபைக்கான பதவிப்பிரமாண வைபவத்தில் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் பங்குபற்றாது புறக்கணிப்பு.

★தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட தலைவர்கள் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாட்டின் தற்போதைய நிலை என்பன குறித்து ஜனாதிபதி ஜே.ஆர். மற்றும் பிரதமர் பிரேமதாச ஆகியோரைத் தனித்தனியாகச் சந்தித்துப் பேச்சு.

07.12.1988

★ ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்புக் குழுவில் பணியாற்ற பிரதிநிதிகளை அனுப்பி வைக்குமாறு சார்க் அமைப்பு நாடுகளிடம் ஜனாதிபதி ஜே.ஆர். வேண்டுகோள்.

★ யாழ்ப்பாணத்தில் டிசெம்பர் 12ஆம் திகதி இடம்பெறவுள்ள ஐ.தே.கட்சியின் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பிரதமர் பிரேமதாச கலந்து கொள்வார் என அறிவிப்பு.

★ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதமர் பிரேமதாச, சிறிமாவோ, மற்றும ஒஸி அபேகுணசேகர ஆகிய மூன்று வேட்பாளர்களும் தமிழர் விடுதலைக் கூட்டணியினருடன் பேச விருப்பம் தெரிவித்துள்ளதாக கூட்டணியின் செயலதிபர் அமிர்தலிங்கம் தெரிவிப்பு.

08.12.1988

★அங்கொடை மனநோயாளர் ஆஸ்பத்திரியிலிருந்து 500 மனநோயாளர்கள் தப்பி வெளியேறிச் சென்று விட்டனர். கொழும்பில் பொதுமக்கள் மத்தியில் இதனால் ஏற்பட்ட பீதி காரணமாக மனநோயாளர்களைத் தேடிக் கண்டுபிடிக்க படையினரின் தேடுதல் வேட்டை ஆரம்பம்.

★தென்பகுதித் தீவிரவாதிகளின் எச்சரிக்கை காரணமாக கொழும்பில் அரச அலுவலகங்கள் உட்பட துறைமுக, ரயில்வே, ஆஸ்பத்திரி சேவைகள் செயலிழப்பு.

09.12.1988

★தென்பகுதித் தீவிரவாத நடவடிக்கைகள் காரணமாக நாடளாவிய ரீதியில் உணவு விநியோக நடவடிக்கைகள் பாதிப்பு.

★தமிழ் மொழியை அரச கரும மொழியாக்கும் உத்தேச நகல் சட்டமூலம் இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமெனத் தெரிவிப்பு.

★ஜனாதிபதித் தேர்தலில் தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆதரவை சுதந்திரக்கட்சி வேட்பாளருக்குப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா, தமிழ்க் காங்கிரஸ் கட்சிச் செயலாளர் குமார் பொன்னம்பலம் ஆகியோர் அடங்கிய தூதுக்குழு வடபகுதிக்கு விஜயம்.

10.12.1988

★சிங்களத்துடன் தமிழையும் அரச கரும மொழியாக்கும் அரசமைப்புச் சட்டத் திருத்தம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

★வடக்கு-கிழக்கு மாகாண முதலமைச்சராக வரதராஜப் பெருமாள் ஜனாதிபதி ஜே.ஆர். முன்னிலையில் தமிழில் சத்தியப் பிரமாணம் செய்து பதவியேற்பு.

★நாட்டின் ஜனாதிபதியாக ஜே.ஆரின் இடத்திற்கு பிரேமதாசாவைத் தெரிவு செய்வது தலைவலி தீர தலையணையை மாற்றிய கதையாகவே முடியுமென எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டார நாயக்க கிண்டல்.

11.12.1988

★அண்மையில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட ஆயுதப் படையினரின் தவறுகளுக்குத் தண்டனை தவிர்ப்புச் சட்டத்தை ரத்து செய்யுமாறு சுதந்திரக் கட்சித் தலைவி சிறிமாவோ தலைமையிலான ஐந்து கட்சிகளின் கூட்டணி அரசிடம் கோரிக்கை.

★தெற்கில் வன்செயல்கள் அதிகரிப்பு; ஒரே நாளில் 27 பேர் வன்செயல்களினால் உயிரிழப்பு.

12.12.1988

★ஜனாதிபதித் தேர்தலின் போது வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்பு ஒழுங்குகளை இந்திய அமைதிப்படையே மேற்கொள்ளுமெனத் தெரியவந்துள்ளதாக "சண்டே ரைம்ஸ்" பத்திரிகை தெரிவிப்பு.

★இலங்கை நாடாளுமன்றத்தின் முதலாவது பெண் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற பெருமைக்குரிய திருமதி டெய்ஸி மரியா புளோரன்ஸ் சேனநாயக்கா மரணம்.

★தாம் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் இலங்கை இந்திய ஒப்பந்தத்தை ரத்துச் செய்யமாட்டேன் என ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் சிறிமாவோ.

13.12.1988

★ஈரோஸ் அமைப்பால் ஈழவர் ஜனநாயக முன்னணி என்ற பெயரில் புதிதாக அரசியல் கட்சியொன்று ஆரம்பிப்பு.

★ வடக்கு-கிழக்குப் பகுதிகளில் மக்கள் தெரிவுசெய்த மாகாண சபையைத் தாம் ஏற்றுக் கொள்வதாக யாழ்ப்பாணத்தில் வைத்து பிரதமர் பிரேமதாச தெரிவிப்பு.

★ நமது பிரச்சினைகளை நமது சொந்த முயற்சிகள் மூலமே தீர்த்துக் கொள்ள வேண்டும். அதற்கு இந்தியாவையோ, வேறெவரையோ நம்பிப் பயனில்லை என கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் தொண்டமான் யாழ்ப்பாணத்தில் வைத்துத் தெரிவிப்பு.

14.12.1988

★வெலிக்கடைச் சிறைச்சாலையில் இடம்பெற்ற பெரும் குண்டு வெடிப்பையடுத்து சிறையின் சுவரில் ஏற்பட்ட துவாரத்தினூடாக 30 ஜே.வி.பி. சந்தேக நபர்கள் சிறையிலிருந்து தப்பி ஓட்டம்.

★ஜே.வி.பியினரின் தீவிரவாத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த கூர்க்கா படையினரை அனுப்பி உதவுமாறு பிரிட்டனுக்கு ஜனாதிபதி ஜே.ஆர். விடுத்த கோரிக்கையை ஏற்க பிரிட்டிஷ் அரசு மறுப்புத் தெரிவிப்பு.

15.12.1988

★எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழ்ப் பகுதிகளில் சகல தொகுதிகளிலும் போட்டியிடப் போவதாக ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கம் தெரிவிப்பு.

★இலங்கை இந்திய ஒப்பந்தம் முடிந்த ஒரு விடயம். அது பற்றி பேச்சு நடத்தி யாரும் அதனை மாற்றி அமைக்க முடியாது என ஜனாதிபதி ஜே.ஆர். பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் தெரிவிப்பு.

★ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்கலாமா என அரசு சிந்தித்து வருவதாக கொழும்பில் அரசு வட்டாரங்களில் ஊகம் தெரிவிப்பு.

# அந்தோனியாரின் திருப்பண்டம் இலங்கைக்கு எடுத்து வரப்படுகிறது

## மானிப்பாயிலும் அது காட்சிக்கு வைக்கப்படும்

கொழும்பு,பெப்.23

கத்தோலிக்க மதத்தினரால் மிகப் புனிதமாகக் கருதப்படும் புனித அந்தோனியாரின் திருப்பண்டம் இலங்கைக்கு கொண்டுவரப்படவிருக்கின்றது. புனித அந்தோனியாரின் திருப்பண்டம் தற்போது இத்தாலியில் படுவாவில் இருக்கின்றது. இது அடுத்தமாதம் முற்பகுதியில் இலங்கைக்குக் கொண்டுவரப்படும் என்று பேராயர் மல்கோம் ரஞ்சித் அறிவித்துள்ளார்.

அந்தோனியாரின் திருப்பண்டம் மானிப்பாய் அந்தோனியார் ஆலயத்துக்கும் எடுத்து வரப்படவுள்ளது. கொச்சிக்கடையில் உள்ள புனித அந்தோனியார் ஆலயத்தின் 175ஆவது ஆண்டு திருவிழா சமயத்தில் புனித அந்தோனியாரின் திருப்பண்டம் கொழும்புக்கு வரவிருப்பது விசேடமான ஒரு சம்பவமாகக் கருதப்படுகின்றது. அந்தோனியாரின் திருப்பண்டம் கொச்சிக்கடையில் மார்ச் 7ஆம் திகதி முதல் 10ஆம் திகதிவரை காட்சிப்படுத்தப்படும்.

கத்தோலிக்க பேராயர்களின் கோரிக்கையின் பேரில் புனித அந்தோனியாரின் திருப்பண்டம் நாடு முழுவதிலுமுள்ள முக்கிய தேவாலயங்களுக்கு எடுத்துச் செல்லப்படவிருக்கின்றது. மார்ச் 10ஆம் திகதி முதல் 23ஆம் திகதிவரை இந்தப்பவனி இடம்பெறும். காலி பேராலயம், அவிசாவலை ஆயர் இல்லம், பண்டாரவளை அந்தோனியார் ஆலயம், மட்டக்களப்பு பேராலயம், அனுராதபுரம் மதவாச்சி தேவாலயம், மானிப்பாய் அந்தோனியார் தேவாலயம், தள்ளாடி மன்னர் போன்ற இடங்களுக்கும் கண்டி போன்ற இடங்களுக்கும் திருப்பண்டம் எடுத்துச் செல்லப்படவிருக்கிறது. (ப)

# ஊடகவியலாளர் பிரகீத் குறித்து மூன்று வாரங்களாகியும் தகவல் இல்லை

கொழும்பு,பெப்.23

ஜனாதிபதி தேர்தலுக்கு இரண்டு தினங்களுக்கு முன்னர் காணாமல் போன ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட தொடர்பில் இதுவரை எவ்வித தகவல்களும் இல்லையென அவரது மனைவி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலின்போது எதிரணிகளின் பொதுவேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு ஆதரவாக செய்தி இணையத்தளமொன்றில் கருத்துக்களை எழுதி வந்த நிலையில் பிரகீத் காணாமல் போயிருந்தார்.

இந்த நிலையில் அவர் காணாமல் போய் ஒரு மாதம் கடந்துள்ள போதிலும் பொலிஸாரின் விசாரணையில் எவ்வித முன்னேற்றமும் இல்லையெனவும் அதிகாரிகளிடம் அவரை கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்வதாகவும் ஊடகவியலாளர் பிரகீத்தின் மனைவி சந்தியா எக்னலிகொட கூறியுள்ளார்.

தமது கணவரைக் கண்டுபிடிக்கும் பணியில் நீதிமன்றம் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என சில தினங்களுக்கு முன்னர் அவர் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார். (அ-6)

# புகலிடம் கோரி வழக்குத் தொடர்ந்த இலங்கையர் ஆஸியிலிருந்து நாடு கடத்தப்பட்டார்

கொழும்பு, பெப். 23

ஆஸ்திரேலியாவில் புகலிடம் கோரி வழக்குத் தொடர்ந்த இலங்கையர் ஒருவர் நாடு கடத்தப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மெரில் பெர்னாண்டோ என்ற நபரே இவ்வாறு இலங்கைக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

2008ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் திகதி மீன்பிடிப் படகு மூலம் குறித்த நபரும் ஏனைய சிலரும் ஆஸ்திரேலியாவிற்குள் சட்டவிரோதமான முறையில் பிரவேசித்தனர்.

இவ்வாறு சட்டவிரோதமான முறையில் பிரவேசித்த ஏனைய அனைவரும் ஏற்கனவே நாட்டுக்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

குடியுரிமை வழங்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை அந்நாட்டு குடிவரவு - குடியகல்வுத் திணைக்களம் நிராகரித்துள்ளது. (சி)

# அரசுக்கு எதிரான இணையத் தளங்களை முடக்கும் திட்டம் தற்காலிகமாக நிறுத்தம்

கொழும்பு, பெப்.23

அரச எதிர்ப்பு இணையத்தளங்களை சீனாவின் தொழில்நுட்ப உதவியுடன் முடக்கும் திட்டத்தை இடைநிறுத்துமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார் எனத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கைத் தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினர் அரச எதிர்ப்பு இணையங்களை மக்கள் பார்வையிடுகின்றமையைத் தடுப்பதற்குத் திட்டமிட்டிருந்தனர்.

அரசைக் கடுமையாக விமர்சிக்கும் இணையத்தளங்களுக்கு எதிராகத் தொலைத் தொடர்பு ஆணைக்குழு நடவடிக்கைகளை எடுக்கவிருந்தது எனக் குறிப்பிட்டுள்ள அதன் மூத்த அதிகாரியொருவர், இந்த நடவடிக்கை மூலம் முற்கூட்டியே அனுமதிப் பத்திரங்களைப் பெறுமாறு கட்டாயப்படுத்துவது, கடும் கட்டுப்பாடுகளை, அதிகளவு கட்டணம் விதிப்பது போன்ற பல விடயங்களை வழிநடத்த ஆணைக்குழு திட்டமிட்டிருந்தது.

எனினும் அரசின் உயர்மட்டத்திலிருந்து விடுக்கப்பட்ட உத்தரவையடுத்து இந்தத் திட்டத்தைச் செயற்படுத்துவது தற்போதைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு பல இணையத்தளங்களைப் பயன்படுத்துவதைத் தடை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (சி)

# சனசமூக நிலைய ஒன்றியம் உதயம்

கைதடி,பெப்.23

கைதடியில் இருக்கின்ற சனசமூக நிலையங்களை ஒன்றிணைத்து 'கைதடி சனசமூக நிலையங்களின் ஒன்றியம்' என்னும் பெயரிலான அமைப்பு ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை கைதடியில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.


சாவகச்சேரி பிரதேச சபையின் செயலாளர் எஸ்.சிவராஜலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கைதடியைச் சேர்ந்த 13 சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

தலைவராக இ.கந்தசாமியும் செயலாளராக வே.பேரம்பலமும், பொருளாளராக சுரேஸ்குமாரும் மற்றும் பதினொரு பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்நிகழ்வில் பிரதேச சபைச் செயலாளருடன் கைதடி உப பணிமனைப் பொறுப்பதிகாரி க.பத்மநாதன், சனசமூக நிலைய உத்தியோகத்தர் திருமதி செ.ஜெகதீஸ்வரன், தொழில்நுட்ப உத்தியோகத்தர் எஸ்.பரமேஸ்வரனும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (50-288)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் மங்கையர்க்கரசி மகா வித்தியாலயம்



தர்சா சந்திரகுமாரன்

நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம் யாழ்ப்பாணம் நல்லூர் பிரதேத்தில் 1-6 -1903 காலப்பகுதியில் ஸ்ரீ கார்த்திகேயக்குருக்களின் மூதாதையரால் நிறுவப்பட்டது.இவரே ஸ்தாபகரா கவும்,முகாமையாளராகவும் கடைமையாற்றியுள்ளார். இப் பாடசாலைக்கு நல்லூர் இந்துத் தமிழ் பெண்கள் பாடசாலை என்று இன்னொரு பெயரும் உண்டு. ஆரம்பகாலத்தில் பெண்கள் கல்விகற்பதற்கு உரிமை வழங்கப்படவில்லை. அடுப்படியே கதியென்றிருந்த பெண்களுக்கு கல்வியின் முக்கியத் துவத்தினை வலியுத்திய சேர் பொன்.இராமநாதன் ,சேர் பொன்.அருணாச்சலம் போன்றோரின் நெருங்கிய தொடர்புகொண்ட தம்பையாக்குருக்கள் பரம்பரையான

ஸ்ரீ கார்த்திகேயக் குருக்களினால் பிராமணப்பெண்களுக்காக இப்பாடசாலை ஸ்தாபிக்கப்பட்டது. எனவே ஆரம்பத்தில் இப்பாடசாலை பிராமணப்பள்ளி என்ற பெயருடன் அழைக்கப்பட்டது.பின்பு மணியக்கார முத்துகுமாரு மற்றும் எம்.வாமிநாதன் ஆகியோர் முகாமையாளர்களாகக் கடைமையாற்றினார்கள்.அவர்களின் பின் இப்பாடசாலை அதிபர் வரிசை நீண்டு சென்றது.அவை பின்வருமாறு

திரு.ராமலிங்கம்-1927-1930, திருமதி பொன்னம்மா வேதநாயகம்-1930-1933, திருமதி இராசம்மா கனகசபை-1933-1964, திருமதி பூ.சண்முகநாதன்-1964-1965, திருமதி மு.பாக்கியம்-1965-1974, திருமதி சி.சுப்பிரமணியம்-1974-1980, திருமதி இ.ஜெயகாந்தகுரு-1980-1991, திருமதி எஸ்.காங்கேயன் 1991-1994, திருமதி க.குணராசா 1994-2005, திரு.பாலகுமார் 2005-2008

திரு.மஷேசன் கஜேந்திரன் 2008 லிருந்து இன்றுவரை அதிபர் பதவிவகிக்கின்றார். ஆரம்பத்தில் அதாவது 1907 ஆம் ஆண்டின் பின்பு நல்லூர் மேற்கு வீதி மட உரிமைக்காரர் மணியகார முத்துக்குமாரு பாடசாலையைப் பொறுப்பேற்று சிறிய கட்டடத்தை நிறுவினார்.பின்பு 1927 ஆம்ஆண்டு தொடக்கம் இன்றுவரை அதிபர்கள் தலைமையில் இப்பாடசாலை நடத்தப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. ஆரம்பகாலத்தில் பெரிய அறிஞர்களை இப்பாடசாலை உருவாக்கியுள்ளது. தற்காலத்திலும் அதாவது 2000ஆம் ஆண்டுக்குப்பின் இப்பாடசாலை மிகவும்முக்னேற்றம்அடைந்துள்ளது. 2003 ஆண்டில் 29 வீதமாக க.பொ.த சித்திவீதம் இப் பாடசாலையில் காணப் பட்டபோதும் 2008ஆம் ஆண்டில் 50 வீதத்தை அடைந்துள்ளது. புலமைப்பரிசில் பரீட்சையிலும் 8 வருடங் களுக்குப் பின்னர் 2009 ஆம் ஆண்டில் 21 மாணவர்கள் பரீட்சைக்குத்தோற்றி இரண்டு மாணவர்கள் திறமைச்சித்தியடைந்து யாழ்.இந்துக்கல்லூரியில் இணைந்துள்ளார்கள். 100 புள்ளிகளுக்கு மேல் பெற்று 5 மாணவர்கள் வெட்டுப்புள்ளியை அண்மித்துள்ளனர். மேலும் 80 வீதமானோர் 80 புள்ளிகளுக்குமேல் பெற்றுள்ளனர். 8 வருடங்களின் பின் னருக்கான வெற்றிக்கு அயராது உழைத்த இப்பாடசாலை ஆசிரியை திருமதி லலிதா சற்குணராஜா என்பவர் பாராட்டத்தக்கவர். மேலும் இதன் விளைவாக தரம் ஒன்றிற்கான அனுமதியம் முன்னைய காலங்களைவிட அதிகரித்துள்ளது. இப்பாடசாலையில் தற்போது ஆண், பெண், இருபாலாரும் அடங்கலாக 270 மாணவர்கள் வரை கல்வி கற்கின்றனர். கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களாக 26 பேர் பணியாற்றுகின்றனர். இவர்களில் அதிபர் தரத்தில் மூவர், முதுகலைமாணி மூவர் அடங்குவர். இப்பாடசாலையில் 1 தொடக்கம் தரம் 11 வரையிலான வகுப்புக்கள் காணப்படுகின்றது. இதன் வளர்ச்சிக்குத் தனியார் வங்கியொன்றும் அரச சார்பற்ற நிறுவனங்களும் புதிய உயர்கலைக் கல்லூரி போன்றனவும் தங்களது பங்களிப்பை நல்கியுள்ளன. கடந்தகால மாணவர்களும் பாடசாலைக் கென தங்களது உதவியை வழங்கியுள்ளனர்.

வளரும்...




# இன்றும் நிலைத்திடும் நல்லூர் இராசதானியின் எச்சங்களை இனியாவது பாதுகாப்போம்



ஆ. பிரியந்தினி

தனித்துவமான பாரம்பரிய வரலாற்று மரபொன்று பண்டைய காலம் தொட்டு யாழ்ப்பாணத்தில் நிலவி வந்தாலும்; அதன் பெருமை, தன்னிகரற்ற தன்மை என்பன "சுதந்திரத் தமிழரசின்" தோற்றத்தோடு மேலும் சிறப்படைந்தமை என்பது வரலாற்றில் கண்கூடு. இது தொடர்பான வரலாற்றை இக் காலம் தோன்றிய இலக்கியங்கள் மற்றும் பிற வரலாற்று மூலங்களில் இருந்து நாம் அறிந்து கொள்ளலாம். அந்தவகையில் வரலாற்று மூலங்கள் யாழ்ப்பாண அரசின் தலைநகர் சிங்கையெனவும்1, யாப்பாபட்டுன எனவும்2,நல்லூர் எனவும் 3 வேறுபட்ட தகவல்களைத் தந்துதவுகின்றன. ஆனாலும் தற்போது நல்லூரைத் தவிர வேறு ஒரு இராசதானிக்குரிய கட்டட இடிபாடுகள் இதுவரையும் கண்டுபிடிக்கப்படவில்லை. போத்துக்கேயர் கூட நல்லூர் நகரை மட்டுமே கண்டதாகத் தெரிகின்றது. இதனால் 13ஆ ம் நூற்றாண்டில் இருந்து 17ஆம் நூற்றாண்டு வரை யாழ்ப்பாண இரசதானியின் தலைநகராக நல்லூரே விளங்கியதெனாலாம்.

இவ் வரலாற்றுப் பெருமை வாய்ந்த நல்லூர் இராசதானியின் நினைவுகள், நினைவுச் சின்னங்கள் இன்று மறக்கப்பட்டுள்ளன; மறைக்கப்பட்டுள்ளன. இலங்கையின் புராதன தலைநகரங்களான அனுராதபுரம், பொலநெறுவை என்பன கைவிடப்பட்டு ஆயிரம் ஆண்டுகளை அண்மித்த போதிலும் கூட அவற்றின் நினைவுச் சின்னங்கள் இன்றும்பாதுகாக்கப்பட்டு வருகின்றன. ஆனால் இற்றைக்கு 350 ஆண்டுகளாகக் கைவிடப்பட்ட பட்ட இராசதானியான நல்லூரின் ஒரு கட்டடத்தொகுதி கூட முழுமையாகப் பேணப்படாமை வருத்தத்திற்கு உரிய விடயமாகும். இதற்குப் போத்துக்கேயரும் பின்வந்த ஒல்லாந்தரும் கடைப்பிடித்த "கலையழிவுக் கொள்கை" ஒரு காரணமாக இருப்பினும், அரச மட்டத் தினர் இலங்கையின் ஏனைய இராசதானிகளைப் பாதுகாக்க எடுக் கப்பட்ட முயற்சிகள் தொடர்பில் ஆராய்ந்தால் அது நல்லூர் இராசதானி தொடர்பில் ஒரு பாரபட்சத் தன்மையை வெளிக்காட்டி நிற்கின்றது. இதனைப் பாது காக்கும் முயற்சியில் நிறுவன ரீதியான அமைப்புக்களோ தனிப்பட்ட வர்களோ அக்கறை செலுத்தியதாகத் தெரியவில்லை. கொழும்பு நூதனசாலை பொறுப்பாளராக இருந்த எஸ்.சண்முக நாதன் தலைமையில் சங்கிலித் தோப்பில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டாலும் அவை ஆரம்பமுயற்சிகளாக மட்டுமே அமைந்தன. மேலும் 1984 ஆம் ஆண்டு மாவட்ட சபையின் குறைந்த அளவு நிதியுடன் ஆய்வு மேற்கொள்ளும் குழு அமைக்கப்பட்டாலும் அது பேச்சுவார்த்தையுடன் முடிவடைந்து விட்டது.

தற்போது நல்லூர் இராசதானி இருந்திருக்கும் இடங்கள் நெருக்கமான குடிமனகளும், அரச நிறுவனங்களும், தொழிற்சாலைகளும் அமைக்கப்பட்டுள்ளதால் பெறுமதிமிக்க தமிழரின் கலைச்சின்னங்கள் இவற்றின் கீழே மண்ணோடு மண்ணாய் மறைந்துள்ளன. அந்த வகையில் நல்லூர் ப்பிராந்தியத்தில் யாழ்ப்பாண மன்னர் காலக்கட்டங்கள் எவையும் முழுமையாக இல்லாவிட்டாலும், அங்குள்ள மந்திரிமனை, சங்கிலியன் தோப்பு, யமுனா ஏரி, பண்டாரக் குளம் போன்றனவும் இவ் இடங்களில் அழிந்த நிலையில் உள்ள கட்டச்சிதைவுகளும் நல்லூர் இராசதானியை நினைவுபடுத்துபவையாக உள்ளன. அந்த வகையில் இவ்வாறான எச்சங்களும் எம்மை விட்டுச் சென்று எமது பாரம்பரியத்தைச் சூனியமாக்கிவிடாமல் மக்களிடம் விளிப்பினை ஏற்படுத்துவது அனைத்து ஊடகங்களினதும் தலையாய கடமையாகும்.

*(அடுத்தவாரம் சங்கிலியனின் மந்திரிமனை....)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மக்கள் வங்கியின் யாழ். பல்கலைக்கழக கிளை மற்றும் யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளை ஆகியனவற்றின் மத்தியமயப்படுத்தப்பட்ட தரம் உயர்த்திய கணனி வங்கிச்சேவையாக ஆரம்பிக்கும் நிகழ்வுகள் நேற்று இடம்பெற்றன. அதன் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இதில் விருந்தினர்களாகக் கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன், மக்கள் வங்கியின் சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் என். வசந்தகுமார், வட பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் ரி.கே.ஆனந்தராஜா, யாழ் பிராந்திய முகாமையாளர் எஸ். பத்மநாதன், கிளை முகாமையாளர் எஸ்.நகேஸ்வரன் யாழ். உதவிப் பிராந்திய முகாமையாளர் எஸ். ஹென்றி ஆகியோர் மலர்மாலை அணிவித்து அழைத்து வரப்படுவதை முதல் படத்திலும் பேராசிரியர். என்.சண்முகலிங்கன் வர்த்தகப் பிரமுகர் எஸ். சிறிஸ்கந்தராஜாவிடமிருந்து முதல் பணவைப்பினைப் பெற்றுச் சேவையினை ஆரம்பித்து வைப்பதை இரண்டாவது படத்திலும்

கிளையின் ஸ்தாபகரும் முகாமையாளருமான அமரர் ஆழ்வாப்பிள்ளை சிற்சபேசனின் உருவப்படத்திற்கு முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்துவ்தை மூன்றாவது படத்திலும் காணலாம்.

யாழ்.ஸ்ரான்லி வீதிக்கிளையில் இடம்பெற்ற நிகழ்வில் சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் என். வசந்தகுமார் உரை நிகழ்த்துவதனையும், தொழிலதிபர் ஈ. எஸ். பி.நாகரத்தினம் பணவைப்பினை மேற்கொள்ள அதனை சிரேஷ்ட பிரதிப் பொதுமுகாமையாளர் என். வசந்தகுமார் பெற்றுச் சேவையினை ஆரம்பித்து வைப்பதனையும், நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் இரண்டாவது வரிசையில் உள்ள படங்களில் காணலாம்.

(படங்கள்: ரட்ணம்)

# யாழ்ப்பாணத்திலிருந்து பூநகரி சென்ற இ.போ.ச. பஸ்

# குஞ்சுப்பரந்தனில் விபத்துக்குள்ளானதில் 12 பேர் காயம்

## காயமடைந்தோர் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதி

யாழ்ப்பாணம்,பெப்.23

யாழ்ப்பாணத்திலிருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு பூநகரி நோக்கிப் பயணித்த வட பிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்று நேற்றுக்காலை கிளி நொச்சி குஞ்சுப்பரந்தன் சந்திக்கு அருகில் உள்ள பாலத்துக்குள் சரிந்து விபத்துக்குள் ளானது. இதில் பஸ் சாரதி உட்பட 12 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களில் பெரும்பாலானோர் அரச ஊழியர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த விபத்துச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:

நேற்றுக்காலை 7 மணிக்கு யாழ். மத்திய பஸ் நிலையத்திலிருந்து இந்த பஸ் பூநகரி நோக்கிப் புறப்பட்டது. பூநகரிப் பகுதியில் உள்ள அரச அலுவலகங்கள், பாடசாலை களில் பணியாற்றும் அரச ஊழியர்கள், ஆசிரியர்கள் ஆகியோரே இந்த பஸ்ஸில் கூடுதலாகப் பயணம் செய்தனர் என்றும் பஸ் விபத்துக்குள்ளான வேளை அதில் 150 இற்கு மேற் பட்டோர் இருந்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த பஸ் நேற்றுக்காலை 9.35 மணியளவில் கிளிநொச்சி குஞ்சுப்பரந்தன் சந்திக்கு அருகில் உள்ள பாலத்துக்குள் சரிந்து விபத்துக்குள்ளானது. இதில் அந்த பஸ்ஸின் சாரதி உட்பட 12 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு பளை பிரதேச செயலரின் வாகனத் தின் உதவியுடன் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கபட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப் பட்டனர்.

பஸ்ஸில் ஆகக் கூடுதலான பயணிகள் ஏற்றப்பட்டமையே இந்த விபத்துக்குக் காரணம் எனக் கூறப்பட்டது. யாழ்ப் பாணத்தில் இருந்து பூநகரிக்கு ஒரேயொரு பஸ் மட்டுமே பயணம் செய்வதால் அதிகளவான பயணிகள் இதில் நாளாந்தம் பயணம் செய்வதாகத் தெரிவிக் கப்பட் டது.

இந்த விபத்தில் காயமடைந்தோர் விவரம் வருமாறு:

ரி.கதிரநாயகி (வயது-60)- வவுனியா, எஸ். மணிமாலா (வயது-40)- சண்டிலிப்பாய், ரி.அன்பரசு (வயது-40)- திருநெல்வேலி, எஸ். நவரட்ணம் (வயது-68) -நாவாந்துறை, எஸ். சசிகலா (வயது-32) -சாவகச்சேரி, எம்.தயாரஞ்சினி (வயது-26)- சங்கத்தானை,என். மாதவி (வயது-34)- வவுனியா, எஸ்.கேமமாலினி (வயது-33) -கோப்பாய், எஸ்.மங்களேஸ்வரி (வயது-29) -முழங்காவில், ஆர். சுபாசினி (வயது-33)-வறணி, ஜ.ஜசிந்தாதேவி (வயது-37), நாவாந்துறை.

(50-224-78-207)

## குழந்தைகளுக்கு மலகூட இருக்கை

கைதடி,பெப்.23

''யுனிசெவ்'' நிறுவனத்தின் அனுசரணையுடன் குழந்தைகளுக்கான மலகூட இருக்கைகளை சாவகச்சேரி பிரதேச சபை, சனசமூக நிலையங்களினூடாக அண்மையில் வழங்கியது.

குழந்தைகளுக்குச் சுகாதாரப் பழக்க வழக்கங்களை நடைமுறைப்படுத்தும் நோக்கிலேயே இது வழங்கப்பட்டதாக சாவகச்சேரி பிரதேச சபையின் அதிகாரி தெரிவித்தார். (50-288)




# ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் பயிற்சி நெறிகள் மார்ச் மாதம் ஆரம்பம்

அச்சுவேலி,பெப்.23

ஆசிரிய பயிற்சிக்கலாசாலைகளில் 2010 ஆம் ஆண்டு அனுமதிபெறும் ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சி நெறிகள் மார்ச் முதலாம் திகதி ஆரம்பமாகின்றன. புதிதாக அனுமதி பெறுவதற்கு விண்ணப்பித்தவர்களில் தகுதியானவர்களுக்கு அனுமதிக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்தவருடம் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளுக்கு ஐந்து பாடநெறிகளுக்கு மட்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஏனைய பாடநெறிகள் தொலைக்கல்வி மத்திய நிலையங்கள் ஊடாக தொலைக்கல்வி மூலம் பயிற்சி அளிக்கப்படவுள்ளன.

நாடளாவிய ரீதியில் உள்ள 10 ஆசிரிய கலாசாலைகளுக்கும் செயல்முறை பயிற்சியுடன் கூடிய நடனம், சங்கீதம், விவசா யம், உடற்கல்வி, மனைப்பொருளியல் ஆகிய பாடநெறிக்கே அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன.

தொலைக்கல்வி முறையில் பயிற்சி பெறுபவர்களில் செயல்முறைப் பயிற்சியுடன் கூடிய பாடநெறிகளைப் பயிலும் ஆசிரிய மாணவர்களும் ஒருவருட பொதுப் பயிற்சி நிறைவுபெற்ற பின்னர் விசேட பாடத்துறைக்கான செயல்முறை பயிற்சிகளைப் பெற்றுக் கொள்வதற்கு வசதியாக ஆசிரிய பயிற்சிக் கலாசாலை களுடன் இணைக்கப்படவுள்ளனர்.

இந்தவருடம் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அனுமதிக்கு மட்டுப்படுத்தப்பட்ட தொகையினரே தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். செயல்முறை பயிற்சியுடன் கூடிய சங்கீதம், நடனம், மனைப்பொருளியல், உடற்கல்வி தவிர்ந்த ஏனைய பாடத்துறைகளுக்கு தொலைக்கல்வி மத்திய நிலையங்கள் ஊடாக ஆசிரியர் பயிற்சி அளிக்கப்படவுள்ளது. (50-11)

# யாழ். திறந்தவெளி அரங்கு புனரமைக்கப்படுவதால் கலைவிழாக்கள் நடைபெறும் காலம் வருமா?

## கலைஞர்களும் பொதுமக்களும் கேள்வி எழுப்புகின்றார்கள்

யாழ்ப்பாணம் பெப்-23

யாழ்.திறந்தவெளி அரங்கு புனரமைப்புச் செய்யப்பட்டுவருவதால் அங்கு கலைவிழாக்கள், பௌர்ணமி கலை நிகழ்ச்சிகள் நடைபெறும் காலம் வருமா? என்ற கேள்விக் குறியுடன் கலைஞர்களும், பொதுமக்களும் ஆவலுடன் காத்திருப்பதாகத் தெரியவந்துள்ளது.

யாழ்.திறந்தவெளி அரங்கு அமைந்துள்ள காணி கடந்த ஒரு வாரமாகத் துப்பரவு செய்யப்பட்டு வருகிறது. யாழ். பொது நூலகம், துரையப்பா விளையாட்டரங்கு, நீதிமன்றங்கள் அடங்கிய வளாகம், சுப்பிரமணியபூங்கா, அஞ்சல் நிலையம், வீரசிங்கம் மண்டபம், தொலைத்தொடர்பு நிலையம் போன்றவை யுத்தம் காரணமாகச் சேதமடைந்த நிலையில் இருந்து தற்போது புனரமைப்புப் பணிகள் மேற்கொள்[illegible] வுடன் காணப்படுகின்றன. ஆனால் திறந்தவெளி அரங் கம்,முன்னாள் யாழ். மாநகரசபை அலுவலகமாக விளங்கிய கட்டடம் ,வாடி வீடு என்பன சேதமடைந்த நிலையிலேயே இப்போதும் உள்ளன. கடந்த சில மாதங்களுக்கு முன்பு திறந் தவெளி அரங்க வளாகத்தில் வளர்ந்திருந்த மரங்கள் வெட்டி அழிக்கப் பட்டிருந்தன. யாழ்.மாநகர சபைக்குரிய காணியை மக்கள் அபகரிக்க முயல் வதாகக் கூறி கம்பிக் கட்டை களால் வேலிகளும் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ரி-160)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சதீவுத் திருவிழாவில் தமிழகத்தவர் கலந்துகொள்வதில் சிக்கல் நிலைமை

## இலங்கை அரசின் அழைப்பு வரவில்லையாம்

இராமநாதபுரம், பெப். 23

கச்சதீவு திருவிழாவில் பங்கேற்க வருமாறு இலங்கை அரசு அழைப்பு விடுக்காததால் தமிழகத்தைச் சேர்ந்தவர்களுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகளை அரசு தரப்புச் செய்ய வாய்ப்பில்லை.

கச்சதீவில் உள்ள புனித அந்தோனியார் கோவில் திருவிழா வரும் 27இல் கொடியேற்றத்துடன் தொடங்கி இரண்டு நாட்கள் நடக்கிறது. தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் இவ்விழாவில் பங்கேற்பது வழக்கம். இலங்கை உள்நாட்டுப் போரால் 1978 இல் நிறுத்தப்பட்ட இத்திருவிழா, 22 ஆண்டுகளுக்குப் பின்னர் 2001 இல் நடந்தது. தொடர்ந்து 2005வரை நடந்த இத்திருவிழாவுக்கு போரைக் காரணம் காட்டி இலங்கை அரசு தடை விதித்தது.

தற்போது உள்நாட்டு போர் முடிவுக்கு வந்த நிலையில் மீண்டும் கச்சதீவுத் திருவிழாவை நடத்த இலங்கை அரசு அனுமதியளித்தது. தமிழகத்தைச் சேர்ந்தவர்களும் இதில் பங்கேற்க யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் தோமஸ் சௌந்திரநாயகம் அழைப்பு விடுத்துள்ளார். விழாவில் பங்கேற்கும் மகிழ்ச்சியில் பலரும் தயாராகி வருகின்றனர்.

சில அமைப்புகள், விழாவில் பங்கேற்க பாதுகாப்பு வசதி கேட்டு வருகின்றன. விழாவுக்கு இலங்கை அரசு ஒப்புதல் அளித்திருந்தாலும், அதில் தமிழகத்தைச் சேர்ந்தவர்களும் பங்கேற்கலாம் என்ற அறிவிப்பை வெளியிடவில்லை.

இதனால், கச்சதீவு செல்பவர்களுக்கு அரசு சார்பிலான பாதுகாப்பு ஏற்பாடுகள் இருக்கா எனத் தெரிகிறது.

இதுகுறித்து இராமநாதபுரம் கலெக்டர் ஹரிஹரன் கூறியவை வருமாறு -

இது இரு நாடுகளுக்கு இடையேயான பிரச்சினை. இதில், மாவட்ட நிர்வாகம் முடிவு செய்ய எதுவும் இல்லை. நீண்ட நாள் தடையிலிருந்த ஒரு விழாவுக்கு அந்நாட்டு அரசு அனுமதி அளித்துள்ளபோது, தமிழர்கள் பங்கேற்பது குறித்த எந்த அழைப்பும் இதுவரை வரவில்லை. யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் தோமஸ் சௌந்திரநாயகம் என்ற தனிப்பட்ட நபரின் அழைப்பை ஏற்று நாம் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்வது சாத்தியமில்லை. இருப்பினும், இது குறித்து வந்த கோரிக்கைகளை அரசுக்கு அனுப்பியுள்ளேன் - என்றார்.

## இந்தியச் செய்திகள்

# தீவிரவாத அச்சுறுத்தலால் புதுச்சேரியில் தமிழகப் பொலிஸார் பாதுகாப்புப் பணியில்



புதுச்சேரி, பெப். 23

தீவிரவாத அச்சுறுத்தல் எதிரொலியாக புதுச்சேரியில் பாதுகாப்புக்காகத் தமிழகப் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

புனே குண்டுவெடிப்பைத் தொடர்ந்து இந்தியா முழுவதும் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. அமைதி நிலவுகின்ற புதுச்சேரிக்கும் தீவிர வாத அச்சுறுத்தல் இருக்கிறது என மத்திய உளவுத்துறை எச்சரித்துள்ளது.

இதைத்தொடர்ந்து புதுச்சேரியில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. மக்கள் கூடும் இடங்களில் எல்லாம் தீவிர பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது. சாதாரண உடையிலும் பொலிஸார் கண்காணித்து வருகின்றனர்.

எல்லைப்பகுதிகளிலும் பொலிஸார் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். புதுவைக்கு வரும் வெளிநாட்டவர்கள் மீதும் பொலிஸாரின் பார்வை பட்டுள்ளது.

ஹோட்டல்களில் தங்கும் வெளிநாட்டவர்கள், வெளி மாநிலத்தவர் குறித்த விவரங்களை பொலிஸார் சேகரித்து வருகின்றனர். அவர்களது நடவடிக்கைகள் சந்தேகப்படும்படியாக இருந்தால் அதுகுறித்து பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்குமாறு ஹோட்டல் நிர்வாகத்துக்குப் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

புதுச்சேரியில் தங்கிவிட்டு தமிழக பகுதியான ஆரோவில்லுக்கு சென்று வரும் சுற்றுலா பயணிகள், வெளிநாட்டவரின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. அவர்களும் பொலிஸாரின் கண்காணிப்பு வளையத்திற்குள் கொண்டுவரப்பட்டுள்ளனர்.

மக்கள் அதிகம் கூடும் இடங்களான கடற்கரை, மணக்குள விநாயகர் கோவில், புதிய பஸ் நிலையம், சுண்ணாம்பாறு படகுதுறை, சினிமா திரையரங்குகள், நேரு வீதி, காந்தி வீதி ஆகிய பகுதிகளில் பாதுகாப்புப் பணிக்காக பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

புதுவையில் 24 மணி நேரமும் பொலிஸார் தீவிர ரோந்துப்பணியில் ஈடுபட்டுள்ளனர். சந்தேகப்படும்படியாக வரும் வாகனங்களை பலத்த சோதனைக்கு பின்னரே செல்ல அனுமதிக்கின்றனர்.

# விலைவாசி மற்றும் பயங்கரவாதத்தை சமாளிக்க அரசு துரித நடவடிக்கை

## ஜனாதிபதி பிரதீபா தெரிவிப்பு

டில்லி, பெப். 23

இந்தியாவில் எல்லை தாண்டிய பயங்கரவாதம் மற்றும் விலைவாசிப் பிரச்சினை பெரும் சவாலாக உள்ளன என்றும், இதனைச் சமாளிக்க அரசு பெரும் நடவடிக்கைகள் எடுத்து வருகிறது எனவும் ஜனாதிபதி பிரதீபா பாட்டீல் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றக் குழு கூட்டு கூட்ட அரங்கில் உரை நிகழத்துகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

முன்னதாக அவர் இராணுவத்தினரின் அணிவகுப்புடன் அழைத்து வரப்பட்டார். நாடாளுமன்றின் பட்ஜெட் கூட்டத் தொடர் நேற்றுத் தொடங்கியது.



இந்தப் பட்ஜெட் கூட்டத்தொடரில் அனைத்துக்கட்சியினரும், இடையூறு இல்லாமல் ஒழுக்கமாக நடந்து கொள்ள வேண்டும், ஒத்துழைப்பு நல்க வேண்டும் என பிரதமர் மன்மோகன்சிங் நேற்று நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார்.

முதல்நாளான நேற்று இரு சபைகளின் கூட்டுக் கூட்டத்தில் ஜனாதிபதி பிரதிபா பாட்டீல் உரை நிகழ்த்தினார்.

சபையைச் சுமுகமாக நடத்திச் செல்வது குறித்து விவாதிக்க, அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தை கடந்த சனிக்கிழமை சபாநாயகர் மீராகுமார் கூட்டியிருந்தபோது, அதில் பங்கேற்ற தலைவர்கள் பலர், விலைவாசி உயர்வு முக்கியமான பிரச்சினை. அதுபற்றி நாடாளுமன்றில் அவசியம் விவாதிக்க வேண்டும் எனத் தெரிவித்தனர். இல்லையெனில், சபையை சுமுகமாக நடத்த முடியாது என்றும் கூறினர்.

அதனால், நேற்று ஜனாதிபதி உரை முடிந்தவுடன் இன்று விலைவாசிப் பிரச்சினை குறித்த விவாதம், சபையில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எந்தப் பிரச்சினை குறித்தும் நாடாளுமன்றில் விவாதிக்கத் தயார் என பிரதமர் மன்மோகன்சிங் ஏற்கனவே அறிவித்துள்ளதால், அரசும் விலைவாசி உயர்வு தொடர்பாக விவாதம் நடத்த அனுமதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. பட்ஜெட் கூட்டத் தொடர் மே 7ஆம் திகதி வரை நடக்கிறது.

# சேதுத் திட்டத்தை நிறைவேற்ற போர்க்குணத்தைக் காட்டுவோம்

## முதல்வர் கருணாநிதி எச்சரிக்கை



சென்னை, பெப். 23

தமிழகத்துக்கு மிகுந்த பயன் தரக்கூடிய சேதுசமுத்திரத் திட்டத்தை நிறைவேற்ற தொடர்ந்து பாடுபடுவோம். தேவைப்பட்டால் நம்முடைய போர்க் குணத்தைக் காட்டுவோம் - என்று முதல்வர் கருணாநிதி கூறினார்.

சென்னையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற தி.மு.க. பொதுக்குழு கூட்டத்தில் அக்கட்சியின் தலைவர் கருணாநிதி பேசியவை வருமாறு -

கட்சியின் பொதுக்குழுவில், நாட்டிலுள்ள பல்வேறு பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கு தீர்வு காண்பது எப்படி என்ற வகையில் 29 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இதில் முக்கியமாக முல்லைப்பெரியாறு அணை தொடர்பாக ஆய்வு செய்யும் ஐவர் குழுவில் தமிழக அரசின் பிரதிநிதி பங்கேற்கப் போவதில்லை என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரத்தில் ஒரு தெளிவான முடிவை மத்திய அரசிடமிருந்து எதிர்பார்க்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, நம்மை நாமே வலுப்படுத்திக் கொண்டு இப்பிரச்சினையை அணுக வேண்டும்.

சேது சமுத்திர திட்டத்தில், உயர் நீதிமன்ற, உச்ச நீதிமன்ற தீர்ப்புகளை சாதாரணமாக புறம் தள்ளிவிடமுடியாது. அது ஆக்க பூர்வமான செயலாக இருக்காது.

அதனால்தான் இத்திட்டத்தில் இன்னும் பொறுமை காத்துக் கொண்டிருக்கிறோம். இத்திட்டத்தை நிறைவேற்றினால் தமிழகம் எவ்வளவு செழிப்புறும் என்பதை அனைவரும் அறிவோம். எனவே, இத்திட்டத்தை நிறைவேற்ற தொடர்ந்து பாடுபடுவோம்.

இந்த விவகாரத்தைப் பொறுத்தவரை மத்திய அரசுக்கு ஏற்பட்டுள்ள தர்ம சங்கடத்தையும் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

ஆளுங்கட்சியாக இருப்பதால் நம்முடைய கைகள் கட்டிப் போடப்பட்டிருக்கின்றன. ஆனால், ஒரு காலகட்டம் வரை தான் பொறுமை காக்க முடியும். எல்லை மீறி விடுமேயானால் போர் குணத்தையும் காட்டுவோம்.

முல்லைப்பெரியாறு பிரச்சினை, காவிரிப் பிரச்சினை, பாம்பாறு பிரச்சினை என எதுவாக இருந்தாலும் அதைச் சமாளிக்க வேண்டியது கட்சித் தலைவர்கள்தான் என்று எண்ணாமல், அனைவரும் ஒருங்கிணைந்து செயற்பட்டு வெற்றி பெற போராட வேண்டும். தொடர்ந்து வெற்றி பெற்றுவரும் நாம், அடுத்த இலக்கான பென்னாகரம் வெற்றியையும் நோக்கி செல்ல வேண்டியுள்ளது - என்றார்.

# மாட்டிக்கிட்டு முழிக்கிறோம்!

## நடிகர் அஜித் ஆங்கில நாளிதழுக்குப் பேட்டி

சென்னை, பெப். 23

முதல்வர் கருணாநிதிக்கு நடந்த பாராட்டு விழாவில் காவேரிப் பிரச்சினை, ஈழத் தமிழர் பிரச்சினைகளுக்கெல்லாம் குரல் கொடுப்பதற்காக நடிகர்களை மிரட்டி அழைக்கிறார்கள் என்று நடிகர் அஜித் பேசினார்.

இதுகுறித்து சண்டைப் பயிற்சி இயக்குநர் ஜாகுவார் தங்கம் நக்கீரன் வாரமிருமுறை இதழில் நடிகர் ஒருவர் மக்களுக்கு நல்லது சொல்கிறவராக இருக்க வேண்டும் என்று அஜித்தை சாடியிருந்தார்.

இதனால் அஜித் ரசிகர்கள் தன்னை மிரட்டி வருகின்றனர் எனவும், தன் காரை உடைத்துவிட்டனர் எனவும் முறைப்பாடு கூறியிருந்தார். இதையடுத்து நடிகர் சங்கம், திரைய ரங்கு உரிமையாளர்கள் சங்கம் அஜித், ரஜினிக்கு கண்டனம் தெரிவித்தது.

இந்நிலையில் அஜித் ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு பேட்டியளிக்கையில் -

கே - மிரட்டுகிறார்கள் என்று நீங்கள் பேசியது உங்களுடைய பாதிப்பா? இல்லை, மற்றவர் களின் தூண்டுதலின் பேரில் பேசினீர்களா?

ப - முன்னதாக தயார் செய்துவிட்டு பேசவில்லை. திடீரென்று பேசினேன். அந்த நேரத்தில் என் ஆழ்மனதில் பதிந்திருந்ததை பேசினேன். நான் பேசியதில் எந்த தவறும் இல்லை. உண்மையைத்தான் பேசினேன்.

கே - நடிகர்களை சமுதாயம்தான் உருவாக்குகிறது? அந்த சமுதாயத்திற்கான போராட்டத்தில் பங்கெடுப்பது அவசியம்தானே?

ப - இது ஒரு விவாதத்திற்குள்ளாக்கப்பட வேண்டிய விடயம். பிரபலமானவர்கள் மட்டும்தான் பொறுப்பாக வேண்டுமா? சமூகப் பிரச்சினைகளைத் தீர்க்க அரசும், அதற்கான அமைப்புகளும் இருக்கின்றன. அவை மீது நான் மிகுந்த மரியாதை வைத்திருக்கிறேன்.

கே - கருத்துச் சொல்ல முடியாத நிலை இருக்கிறதா?

ப - சினிமாவில் இண்டு குழுக்கள் இருக்கின்றன. நாங்கள் இந்த இரண்டு குழுக்களுக்கு நடுவில் மாட்டிக்கிட்டு முழிக்கிறோம்.

ஒரு நடிகனுக்கு அரசியல் குறித்தோ, மற்ற விவகாரங்கள் குறித்தோ முழுமையாகத் தெரிந்தால்தான் போராட்டத்தில் இறங்க வேண்டும். அறைகுறையாகத் தெரிந்து கொண்டு ஆர்ப்பாட்டத்தில் இறங் கக்கூடாது என்று நினைக்கிறேன். பொதுப் பிரச்சி னைக்கான போராட்டங்களின்போது மொழி, மதம், இனம் அடையாளப்படுத்தப்படுகின்றன.

சினிமா திரையரங்குக்குள் சென்ற பின்னர் பக்கத்தில் இருப்பவன் எந்த இனம், மதம் அவன் பேசும் மொழி என்று பேதம் பார்த்து ரசிகன் சினிமா பார்ப்பதில்லை.

கலைக்கு இருக்கிற பெரிய 'பவர்' இது தான். ஆனால் இந்தக் கலையுலகம் நடத்தும் போராட்டங்களின்போது மட்டும் மதம், இனம், மொழி எட்டிப்பார்க்கின்றன. அது தவறானது - என்றார்.

# ரூ. 80 கோடி மதிப்புள்ள ஹெரோயினை கடத்த முயன்ற 2 பேர் காஷ்மீரில் கைது

ஜம்மு, பெப். 23

ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தில் இந்திய - பாகிஸ்தான் எல்லையை ஒட்டிய பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளைக் கடத்த முயன்ற இருவரை இராணுவத்தினர் ஞாயிற்றுக்கிழமை கைது செய்தனர்.

அவர்களிடமிருந்து ரூபா 80 கோடி மதிப்புள்ள ஹெரோயினையும் பறிமுதல் செய்தனர். ஜம்முவில் இருந்து 60 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள எல்லைப்புறக் கிராமமான ஹமிர்பூரில் இருவர் சந்தேகத்துக்கிடமான வகையில் உலா வந்தனர்.

அவர்கள் வைத்திருந்த பையை இராணுவத்தினர் சோதித்தபோது அதில் 15 கிலோ எடையுள்ள ஹெரோயினும், ஒரு கிலோ எடையுள்ள ஓபியமும் இருப்பது தெரிய வந்தது. அதைப் பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

இருவரையும் கைதுசெய்து விசாரித்த போது அவர்கள் நீண்டகாலமாக போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டுள்ளமை தெரியவந்தது. அவர்கள் இருவரும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'நீரிழிவை வெற்றிகொள்வோம்' கண்காட்சியில் வைக்கப்பட்ட காட்சிப் பொருள்களும் அவற்றைப் பார்வையிடுவோரும்.

## 'நீரிழிவை வெற்றி கொள்வோம்' கண்காட்சியில் பெரும் திரளானோர் நேற்றுப் பங்கேற்றனர்

'நீரிழிவை வெற்றி கொள்வோம்' எனும் மாபெரும் விழிப்புணர்வு விழாவும், கணகாட்சியும் நிகழ்வின், முதல் நாள் நிகழ்வு நேற்று யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் ஆரம்பமானது.

இந்த கண்காட்சி நீரிழிவினால் நீண்ட கால பாதகமான விளைவுகளை உள்ளடக்கிய பகுதி, குருதிப்பரிசோதனையும் மருந்துகள் தொடர்பான இடமும், உணவு சம்பந்தமான ஆலோசனை வழங்கும் பகுதி, உடற்பயிற்சி சாதனங்களை உள்ளடக்கிய பகுதி, மன ஆறுதல்களுக்கான அறிவுரைகள் வழங்கும் பகுதி என ஐந்து பகுதிகளாக அமைந்திருக்கிறது.வயது வேறுபா டின்றி அதிக எண்ணிக்கையானோர் ஆர்வத்துடன் இந்தக் கண் காட்சி நிகழ்வினைக் கண்டு பயன் பெற்றதை நேற்று அவதானிக்க முடிந்தது.

இனிவரும் நாள்களில் இந்தக் கண் காட்சியைக்காண இன்னும் அதிக எண்ணிக்கையானவர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப் படுகின்றது.எதிர்வரும் 27ஆம் திகதி வரை இடம் பெறும் இந்தக் கண் காட்சி நிகழ்வில் மிகக் குறைந்த விலையில் நீரிழிவு நோயாளர்கள் பயன் பெறும் பல பொருள்கள் விற்பனை செய்யப் பட்டு வருகின்றன. (04-14)

'நீரழிவை வெற்றி கொள்வோம்'
எனும் மாபெரும் விழிப்புணர்வு விழாவும் கண்காட்சியும் நிகழ்வில் மிகக் குறைந்த விலையில் இவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

* குளுக்கோசு மீற்றர்
* இன்சுலின் பேனா
* அப்பியாசத்துக்கான உடற்பயிற்சி உபகரணங்கள்
* நீரழிவு தொடர்பான நூல், இறுவெட்டு
* உயர் குருதி அமுக்கம் தொடர்பான இறுவெட்டு
* மன ஆறுதலை தரக் கூடிய பூமரங்கள்
* நீரழிவு நோயாளருக்கான ஐஸ் கிறீம்

## நீரிழிவு நோயாளர் மட்டுமன்றி வயது வேறுபாடின்றி எல்லோரும்

### பார்த்துப் பயன்பெற வேண்டிய கண்காட்சி



'நீரிழிவை வெற்றி கொள்வோம்' கணகாட்சி மிகவும் பயனுடையதாக இருந்தது. நீரிழிவு நோயாளர்கள் மட்டுமல்லாது இதனை அனைவரும் வயது வேறுபாடின்றி பார்க்கவேண்டும்.

நீரிழிவு தொடர்பான விடயங்களை எமக்கு ஏற்ற விதத்தில் - விளங்கக் கூடிய வகையில் மிகத் எடுத்துத் கூறிவருகிறார்கள். இதில் நீரிழிவு நோய்க்கான குணங் குறிகளைத் தெரிவுபடுத்தினார்கள்.

நீரிழிவு நோயாளர்கள் உட்கொள்ள வேண்டிய உணவு வகை, உணவின் அளவு இவை மட்டுமின்றி அந்த உணவு எவ்வாறு தயாரிக்கபட வேண்டும் என்பன குறித்து வீடியோப்படம் மூலம் காண்பித்து கட்புல விளக்கத்தையும் வழங்கினார்கள்.

நோயாளருக்கான மாத்திரை குறித்து விளங்கப்படுத்தினார்கள் இதன் மூலம் நாங்கள் மாதாந்தம் கிளினிக்கில் பெறும் விளக்கத்தை விட மேலதிகமாகப் பெறக் கூடியதாக இருந்தது.ஒரு வார காலம் நடைபெறும் இந்த நீரிழிவு தொடர்பான கண்காட்சி நிகழ்வு எமது மக்களுக்கு ஒரு வரப்பிரதாசம் என்றே கூறவேண்டும். மிகவும் பொறுப்புணர்வுடன் பார்வையாளர்களின் எதிர்பார்பை அறிந்து மிகத் தெளிவாக விளங்கப்படுத்திய விதம் பாராட்டத்தக்கது.யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் இதனை ஒழுங்கு செய்தமை மிகவும் பொருத்தமானதாகும்.

கே.வி. பரமானந்தம் (தொண்டைமானாறு) முகாமையாளர் ப.நோ. கூ.சங்கம் - பருத்தித்துறை

## வைத்தியர்கள் சொல்வதைக் கேட்டு நடந்தால் நோயைக்கட்டுப்படுத்தலாம்

### வட்டுக்கோட்டையூர் முன்னாள் தபாலதிபர்



கை, கால் நோவிற் கென 2004ஆம் ஆண்டு சிகிச்சை பெற யாழ். போதனா வைத்திய சாலைக்கு சென்ற போது நீரிழிவு நோய் இருப்பது இனங் காணப்பட்டது.

வைத்திய நிபுணர் சிவன்சுதன் எனக்கு மருத்துவ பரிசோதனைகளைச் செய்து ஏற்ற வழிகாட்டலையும் வழங்கி வருகின்றார்.

நான் ஓய்வு பெற்ற தபால் அதிபர். எனக்கு மாதாந்தம் 1500 ரூபா வரை மருந்துக்குச் செலவாகிறது. தனியார் மருத்துவ நிலையங்களிலும் மருந்துகள் வாங்க வேண்டிய நிலைமை உள்ளது.

சிவன்சுதன் வைத்தியரின் வழிகாட்டல் மற்றும் ஆலோசனையினாலேயே நான் உயிர் வாழ்கின்றேன் என நினைக்கின்றேன்.

வைத்தியர்கள் சொல்வதைக் கேட்டு அதன்படி நடக்கும் எமது மனக்கட்டுப்பாடும் நோயைக்கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கு மிகமிக அவசியமானதாகும்.

யாழ்.மருத்துவ பீடத்தில் நீரிழிவு தொடர்பான கண்காட்சி இடம்பெறுவது அனைவருக்கும் மிகவும் பயனுடையதாக அமையும் என்பது நிச்சயம்.

வே.வீரசிங்கம் (வயது 77) வட்டுக்கோட்டை

## நீரிழிவு குறித்து அனைத்து விடயங்களையும் ஒரே இடத்தில் பார்த்துப் பயன்பெற வகை செய்துள்ளது



நீரிழிவு நோயினால் ஏற்படும் பாதிப்புக் குறித்து உரிய முறையில் வீடியோ மூலம் விளங்கப்படுத்தினார்கள். இது மிகவும் சிறப்பானதாக இருந்தது. இது போன்ற பயனுள்ள கண்காட்சியை அனைவரும் பார்த்துப் பயன்பெற வேண்டும். அனைத்து விடயங்களையும் உள்ளடக்கிய இந்தக் கண்காட்சியை ஒழுங்கு செய்தவர்களுக்கு நான் நன்றி கூறுகிறேன். இவ்வாறான கண்காட்சியை ஒழுங்கு செய்வது என்பது இலகுவான காரியமல்ல.

யாழ். போதனா வைத்தியசாலை யாழ்.மருத்துவ பீடம் இணைந்து ஒழுங்கு செய்துள்ள இந்தக் கண்காட்சியைக் காண அனைவரும் நேரம் ஒதுக்கி வரவேண்டும். அதன் மூலம் எமது சமூகம் பயன் பெற வேண்டும்.

திருமதி. எம். ராஜாராம் (உத்தியோகத்தர், யாழ் கல்வித் திணைக்களம்)

## தியானம் தொடர்பான விளக்கம் என்னை ஈர்த்தது



மிகவும் பயனுள்ள முறையில் இந்தக் கண்காட்சி ஒழுங்கமைக்கப்பட்டிருக்கிறது. வயது வந்தவர்கள் இதனைப் பார்வையிடுவதன் மூலம் அதிக பயனைப் பெறக்கூடியதாக இருக்கும்.

தியானம் தொடர்பாக மிகச் சிறப்பாக வீடியோ மூலம் விளங்கப்படுத்தியமை என்னை வெகுவாக ஈர்த்தது. எமது மனங்களை எப்படி ஒரு நிலைப்படுத்துவது என்பது குறித்தும் தெளிவு படுத்தினார்கள்

சிறு பிள்ளைகள் என்ற வித்தியாசமின்றி எம்மை வரவேற்று விளக்கமளித்திருந்தமை எனக்குத் திருப்தி அளிப்பதாக இருக் கிறது.

வயது முதிர்ந்தவர்கள் இங்கு வந்து கண்காட்சியைப் பார்க்க முடியாத நிலையிருந்தாலும் எம்மைப் போன்ற இளம் சமூகம் இந்த கண்காட்சியைப் பார்த்து விளங்கி எமது முதியவர்களுக்கு விளங்கப்படுத்தக் கூடியதாக அமைந்து இருக்கிறது.என்னைப் போன்று ஏனைய மாணவர்களும் கண்காட்சியைப் பார்த்துப் பயன்பெற வேண்டும்.

செல்வி பிறேமலதா சிறிகாந்தன்
(மாணவி, கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி)

## நீரிழிவு நோயாளர் இதற்கென நேரத்தை ஒதுக்கி பார்த்துப் பயனடைய வேண்டும்



'நீரிழிவை வெற்றி கொள்வோம்' என்ற இந்த மாபெரும் விழிப்புணர்வு விழாவும் கண்காட் சியும் மிகவும் பயனுள்ளதாக அமைந்தன.

நீரிழிவு தொடர்பான விடயங்கள் மற்றும் மன ஆறுதலுக்கான விடயங்கள் அனைத்தையும் முழுமைபெற மிகச்சிறப்பான முறையில் விளக்கத்தை வழங்கினர்.

விடியோ மூலமும், சித்திரப் படங்கள் மூலமும், அறிவுறுத்தல்கள் மூலமும் விளக்கத்தை வெளிப்படுத்தினார்கள்.

நீரிழிவு விடயம், குருதிப்பரிசோதனை, மனஆறுதல் உணவு முறை உடற்பயிற்சி முறைகள் என்பன இந்தக் கண்காட்சியில் இடம்பெற்றிருக்கின்றன. இவை நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு அதிக பயனுடையதாக இருக்கும். எனவே அவர்கள் எப்படியென்றாலும் நேரம் ஒதுக்கி இந்த கண்காட்சியைப் பார்க்க வேண்டும் என்பதே எனது வேண்டுதலாகும்.

பரத் (மாணவன், கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி)

## யாழ்.மருத்துவ பீடத்தில் நடைபெறும் "நீரிழிவை வெற்றிகொள்வோம்" கண்காட்சி மூலம் அது குறித்த விழிப்புணர்வைப் பெறுவோம்

* நீரிழிவு தொடர்பாக வைத்தியர்களின் விவாத மேடை
* நீரிழிவின் தாக்கங்கள், வைத்திய முறைகள் குறித்த நடனம்
* மருத்துவ மாணவர்களின் நாடகம், நடனம், இசை நிகழ்ச்சி
* தாதிய மாணவர்களின் நாடகம், நடனம்

ஊடக அனுசரணை உதயன்

தொகுப்பு: உமா
படங்கள்: உமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேட்டோ படையின் விமானத் தாக்குதலில் 33 சிவிலியன்கள் ஆப்கானில் உயிரிழப்பு!

## கொமாண்டர் ஆழ்ந்த கவலை தெரிவிப்பு

காபூல், பெப். 23

தென் ஆப்கானிஸ்தானில் ஞாயிற்றுக் கிழமை நேட்டோ படை மேற்கொண்ட விமானத் தாக்குதலில் சிவிலியன்கள்



கொல்லப்பட்டமைக்கு நேட்டோ ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளது.

ஹெல்மாந்துவை அடுத்துள்ள யுருஸ் கான் மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்த விமானத் தாக்குதலில் 33 சிவிலியன்கள் கொல்லப்பட்டுள்ளார்கள் என ஆப்கான் அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

''இராணுவ நடவடிக்கை மேற்கொள் எப் பட்டுள்ள பகுதியை நோக்கி திரளான கூட்டமொன்று வந்துகொண்டிருந்தது. தீவிரவா திகள் தாக்குதல் நடத்த வருகின் றார்கள் என்ற சந்தேகத்தின்பேரில் விமானத் தாக்குதல் நடத்தப்பட் டுள்ளது'' என்றும் நேட்டோ அதன் அறிக்கையில் தெரிவித் துள்ளது.

''இந்த விமானத் தாக்குதலை அடுத்து, அவ்விடதுக்குத் தரைப் படைகள் விரைந்தன. அப்போது தான் அங்கு கொல்லப்பட்டவர்களும், காயமடைந்தவர்களும் சிவிலியன்கள் எனத் தெரியவந் துள்ளது. இவர்களில் பெண் களும் பிள்ளைகளுமடங்குவர்'' என் றும் அந்த அறிக்கையில் விவரிக் கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானிலுள்ள நேட்டோ படை களுக்கும், அமெரிக்கப் படைகளுக்குமான கொமாண்டர் ஜெனரல் ஸ்டேன்லி மெக்கி ரைஸ் டல், இச்சம்பவம் குறித்து ஆப்கான் ஜனாதிபதி ஹமீத் கர்சாயிடம் மன்னிப்புக் கோரியுள்ளார்.

''அப்பாவிகள் கொல்லப்பட்டமை குறித்து நாங்கள் மிகுந்த வேதனையடைகிறோம். இது தொடர்பாகப் பூரண விசாரணை நடத்தப் படும்'' என்றும் அவர் தாம் விடுத்துள்ள அறிக் கையில் குறிப்பிட்டுள்ளார்

''நாங்கள் இங்கு ஆப்கானிஸ்தான் மக்க ளுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காகவே இருக் கின்றோம். அசமந்தப் போக்கில் சிவிலியன் களைக் கொல்வதும், காயப்படுத்துவதும் எம் மீதான நம்பிக்கையைக் கெடுத்துவிடும். அத் துடன் எங்களின் பணி மீது அவநம்பிக் கையை ஏற்படுத்திவிடும் என நான் எங் களின் படைகளுக்குத் தெளிவுபடுத்தியுள் ளேன்'' என்றும் அவர் அதில் விளக்கியுள்ளார்.

## உலக அரங்கில்

# பாக். பனிப்பாறைச் சரிவால் இதுவரை 102 பேர் மரணம்!

இஸ்லாமாபாத், பெப். 23

பாகிஸ்தானில் பனிப்பாறை சரிந்ததில், பலியானவர்களின் எண்ணிக்கை 102 ஆக உயர்ந்துள்ளது. பாகிஸ்தானின் வடமேற்கு எல்லைப்புற மாகாண கோஹிஸ்தான் மாவட்டத்தில் கடந்த வாரம் பனிப்பாறை சரிந்ததில் ஒரு சிறிய கிராமமே புதையுண்டுவிட்டது. இந்தக் கிராமத்துக்குச் செல்லும் சாலைகள் பனியால் மூடப்பட்டுள்ளன.

60 அடி உயரத்துக்குக் கொட்டிக் கிடக்கும் பனிக்கட்டிகளை அகற்றி, புதையுண்ட சட லங்கள் படிப்படியாக மீட்கப்பட்டு வருகின் றன. வீடுகளை இழந்த 250 பேருக்கு இரா ணுவ ஹெலிகொப்டர் மூலம் உணவும், அடுப்புகளும், போர்வைகளும் வழங்கப் பட்டு வருகின்றன.

இதுவரை 102 பேரின் சடலங்கள் மீட்கப் பட்டுள்ளன. இந்தப் பனிப்பாறைச் சரிவில் காயமடைந்தவர்கள், ஹெலிகொப்டர் மூலம் அருகிலுள்ள வைத்திய சாலைக்குக் கொண் டு செல்லப்பட்டனர்.

பல வீடுகள் பனிப்பாறைகளுக்கு அடியில் புதையுண்டுள்ளன. இதனால், சாவு எண் ணிக்கை மேலும் உயரலாம் என மீட்புப் பணி யில் ஈடுபட்டுள்ள இராணுவ அதிகாரி தெரி வித்துள்ளார்.

# போர்த்துக்கலில் வெள்ள அனர்த்தம்: 58 பேர் மரணம்; 68 பேருக்கு சிகிச்சை

லிஸ்பன், பெப். 23

போர்த்துக்கலில் கடும் புயல், அடை மழை, வெள்ளப்பெருக்கு ஆகியவற்றின் அனர்த்தங்களுக்கு இதுவரை 58 பேர் உயிரி ழந்துள்ளனர்.

ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான போர்த் துக்கலின் மாடய்ரா தீவில் கடந்த சில நாட்களாக முன்னர் எப்போதும் இல்லாத அள வுக் குப் புயல்காற்றுடன் கனமழை பெய்து வருகிறது. இதனால் சாலைகளிலும், தெருக்களிலும் வெள்ளம் பெருக்கெடுத்துள்ளது.

தாழ்வான இடங்களிலிருந்த வீடுகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. புயலிலும், வெள்ளத்திலும் சிக்கி 58 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் பலர் காணாமல் போயுள் ளனர். அதனால், பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படு கிறது. வெள்ளத்திலிருந்து மீட்கப்பட்ட 68 பேருக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு வரு கிறது.

வெள்ளத்தால் கடுமையாகப் பாதிக்கப் பட் டுள்ள மாடய்ரா தீவுக்கு மீட்டுப் படையினர் அனுப்பப்பட்டுள்ளனர். கடற் படை படகுக ளும், ஹெலிக்கொப்டர்களும் மீட்பு, நிவார ணப் பணிகளில் ஈடு பட்டுள்ளன என்று போர்த்துக்கல அரசு தெரிவித்துள்ளது.

வெள்ளப் பாதிப்பு கடுமையாக உள்ள தால் நாட்டில் அவரசநிலை அமுலபடுத் தப்பட்டுள்ளது. பிற ஐரோப்பிய நாடுகளிடமும் போர்த் துக்கல் உதவி கேட்டுள்ளது.

மாடய்ரா தீவு முழுவதும் தண்ணீரில் மிதக்கிறது. தெருவில் இறங்கி நடந்தால் வெள்ளம் அடித்துச் சென்று விடும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, மக்கள் பாது காப்பான இடங்களிலேயே தங்கியிருக்குமா றும், வீடுகளை விட்டு வெளியேற வேண் டாம் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

# பாகிஸ்தான் மேற்கில் இரு சீக்கியர் சிரச்சேதம்

பெஷாவா, பெப். 23

பாகிஸ்தானின் வடமேற்கு எல்லைப் புற மாகாணத்தில் 2 சீக்கியர்களை தலிபான்கள் தலையை வெட்டிக் கொன்றுள்ளனர்.

ரூபா 60 இலட்சம் பணயத் தொகைக் கேட்டு 4 சீக்கியர்களை தெஹ்றிக் - இ - தலிபான் அமைப்பினர் 34 நாட்களுக்கு முன்பரா என்ற இடத்திலிருந்து கடத்திச் சென்றனர். அவர்கள் குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் பணயத் தொகை கொடுக்கப் படாத தால் ஜஸ்பால் சிங், மஹல் சிங் ஆகியோ ரது தலையை தலிபான்கள் வெட்டிக் கொன்றுள் ளனர். மற்றவர்களின் நிலை குறித்து தெரிய வில்லை.

வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சீக்கியர்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் தேசப் பிரிவினை யின்போது இந்தியாவுக்கு வரமறுத்து அங் கேயே தங்கியவர்கள்.

இவர்கள் ஜிஸியா வரி செலுத்தவேண்டும் என தலிபான்கள் கடந்த ஆண்டு உத்தர விட்டனர். இதையடுத்து, சீக்கியர்களில் பலர் பாகிஸ்தானின் பல்வேறு நகரங்களுக்கும் குடிபெயர்ந்தனர்.

பாகிஸ்தானில் 2 சீக்கியர்கள் கொல்லப் பட்டமைக்குப் பாரதிய ஜனதா கட்சி செய்தித் தொடர்பாளர் ரவிசங்கர் பிரசாத் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். கால்நடைகளைக் கொல்வது போன்று, இவர்கள் கொல் லப்பட்டுள்ளமை மனிதகுலத்தைத் தலை குனிய வைக்கும் ஒரு மிலேச்சனத்தனமான செயல் என்றும் அவர் சாடியுள்ளார்.

# சமரசப் பேச்சுக்கான அழைப்பை ஆப்கான் தலிபான்கள் நிராகரிப்பு

காபூல், பெப். 23

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா தலைமையிலான இராணுவத்தை எதிர்த்துப் போராடி வரும் தலிபான்களை சமரசப் பேச்சுகளுக்கு வருமாறு ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி கர்ஸாய் விடுத்த அழைப்பை, தலிபான்கள் நிராகரித்துவிட்டனர்.

ஆப்கானிஸ்தான் ஹெல்மாண்ட் மாநிலத் தில்தான் தலிபான்கள் வலுவாக இருக்கிறார் கள். இந்த மாநிலத்திலுள்ள மர்ஜா என்ற பகுதியில் அமெரிக்கா தலைமையிலான இராணு வச் சிப்பாய்கள் தலிபான்களுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கி றார்கள்.

மர்ஜாவிலுள்ள தலிபான்களின் தலைமை யகத்தை அமெரிக்கா தலைமையிலான இராணுவம் கைப்பற்றியது. அங்கிருந்த ஆயுதங்களையும், தலிபான்களின் அடையாள அட்டைகளையும் இராணுவம் கைப்பற் றியது.

அத்தோடு பாகிஸ்தானில் பதுங்கியிருந்த தலிபான் இயக்கத்தின் இரண்டாம் இலக்கத் தலைவரான முல்லா அப்துல் கனி பராதர் பிடி பட்டார். இப்படித் தலிபான் இயக்கம் சரிவைச் சந்தித்து வரும் நிலையில், அந்த இயக்கத்தி னரை அமைதிப் பாதைக்குத் திரும்பும படியும், பேச்சுகள் நடத்த வரும்படியும் ஆப் கானிஸ்தான் ஜனாதிபதி கர்ஸாய் கேட்டுக் கொண்டார்.

அவர் இந்த அழைப்பை சனிக்கிழமை நாடாளுமன்றத்தில் தாம் பேசும்போது விடுத்தார். அவரது அழைப்பை ஏற்க தலிபான்கள் மறுத்துவிட்டனர். ''வெளிநாட்டு இராணுவம் முதலில் ஆப்கானிஸ் தானிலிருந்து வெளி யேற வேண்டும். இதன் பின்னரே சமரசப் பேச்சுக் குறித்துப் பரிசீலிக்கப்படும்'' என அவர்கள் தெரிவித் துள்ளனர்.

தலிபான் செய்தித் தொடர்பாளர் கோரி முகம்மது யூசுப் கூறுகையில், ''கர்ஸாய் ஒரு பொம்மை. அவரால் அரசின் பிரதிநிதியாக இருந்து பேசமுடியாது. அவர் ஊழலில் மூழ்கி விட்டார். அவரைச் சுற்றிலும் இருப் பவர்கள் போரைக் காரணம் காட்டிப் பணம் சம்பாதித்த பணக்காரர்கள்'' என்று குறிப் பிட்டுள்ளார்.

''அமெரிக்கா தலைமையிலான 15 ஆயிரம் இராணுவச் சிப்பாய்கள் போர் விமா னங்கள் சகிதம் மர்ஜா பகுதியில் தாக்குதல் நடத்தி வருகிறார்கள். அவர்களுக்கு எங்களது போராளிகள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்து வருகிறார்கள். எங்கள் எதிர்ப்பு இரவு பகல் என்று 24 மணி நேரமும் தளர்வு இல்லாமல் நீடிக்கிறது'' என்றும் யூசுப் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் மர்ஜா பகுதியில் இராணுவ நடவடிக்கைக்குத் தலைமை தாங்கி வரும் இராணுவத் தளபதி குறிப்பிடுகையில், ''இன்னும் 30 நாட்களில் இந்த பகுதியில் இருந்து தலிபான்களை விரட்டி அடித்து விடுவோம்'' என்று சூளுரைத்துள்ளார்.

# பெண் சட்டத்தரணிகள் நீதிமன்றில் ஆஜராவதற்கு சவூதியில் அனுமதி

ரியாத், பெப். 23

சவூதி அரேபியாவில் முதல் தடவையாக பெண் சட்டத்தரணிகள், வழக்கு விசாரணைகளின்போது ஆஜராவதற்கு அனுமதியளிக்கப் படவுள்ளது. புதிய சட்டமொன்றின் மூலம் பெண் சட்டத்தரணிகளுக்கு இந்த வாய்ப்பு அளிக்கப்படவுள்ளது.

சவூதி அரேபிய மன்னர் அப்துல்லாவின் சட்டத்துறையை மேம்படுத்தும் திட்டத்தின் ஓர் கட்டமாக இந்தப் புதிய சட்டம் அறிமுகப் படுத்தப்படவுள்ளது. இதன்படி குடும்பப் பிணக்குத் தொடர்பான வழக்குகளில் பெண் கள் ஆஜராகுவர்.

குறிப்பாக விவாகரத்து, சிறுவர்களை யார் பராமரிப்பில் பேணுவது ஆகியவை போன்ற வழக்குகளின்போது பெண் சட்டத் தரணிகள் ஆஜராகுவர்.

அண்மைக்காலமாக சவூதி அரேபியாவில் பெண்களுக்கான பல உரிமைகள் வழங்கப்பட்டு வருகின்றன. எனினும், இன்னும் பல்வேறு துறைகளில் பாரிய அபிவிருத்தி எட்டப்படவேண்டிய நிர்ப் பந்தம் உண்டு எனக் குறிப்பிடப்படுகிறது.

# லண்டனில் சீக்கியர் கொலை: பணம், உடைமைகள் கொள்ளை

லண்டன், பெப். 23

லண்டனில் சீக்கிய வாத்தகர் கொல் லப்பட்டு அவரது உடைமைகள் ஒரு கும்பலால் கொள்ளையிடப்பட்டுள்ளன.

லண்டன் அருகேயுள்ள கவுகிளிப் பகுதியை சேர்ந்தவர் குர்மயில்சிங் (வயது - 63), பிரிட்டன் வாழ் சீக்கியரான இவர் கவுகிளிப் ஹில் ரோடு பகுதியில் ஒரு கடை நடத்தி வந்தவர். மேலும் பல வியாபாரங்களும் செய்து வந்தவர்.

சம்பவத்தன்று இரவு இவரது கடைக்கு 6 பேர் கொண்ட கும்பல் வந்து குர்மயில் சிங்கை சரமாரியாகத் தாக்கியுள்ளது. இதில், இவர் படுகாயமடைநதுள்ளார். இதையடுத்து அக்கும்பல கடையிலிருந்த பணம, சிகரெட் பெக்கெட்டுகள், இதர பொருட்கள் ஆகிய வற்றைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளது.

இதற்கிடையே காயமடைந்த குர்மயில் சிங் வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டார். அங்கு சிகிச்சை பயனின்றி பரிதாபமாக உயிர் நீத்தார்.

இச்சம்பவம் குறித்து கவுகிளிப் பகுதி பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். கொலை செய்யப்பட்ட சிங்குக்கு 2 புதல்வர்கள் உள்ளனர்.

# கத்தோலிக்கரின் எண்ணிக்கை 116 கோடியாக அதிகரிப்பு

உலகில் வாழும் கத்தோலிக்க கிறிஸ்தவ மக்களின் ஒட்டுமொத்த எண்ணிக்கை 116.6 கோடியாக அதிகரித்துள்ளது என வத்திக் கான் அறிவித்துள்ளது.

வத்திக்கானில் வெளியிடப்பட்ட கிறிஸ் தவ ஆண்டுவிழா மலரின் புதிய பதிப்பு பாப்ப ரசர் 16 ஆவது ஆசீர்வாதப்பர் முன் ஞாயிற்றுக்கிழமை சமர்ப்பிக்கப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது சமூகத்தின் எதிர்காலம் குறித்த விழிப்புடன் முஸ்லிம் அரசியல்வாதிகள் செயற்பட வேண்டும்

## முஸ்லிம் கவுன்ஸில் கோரிக்கை

''மூன்று தசாப்த கால யுத்தத்தின் முடிவில் இடம்பெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து இப்பொழுது பொதுத் தேர்தல் ஒன்றை நாம் எதிர்நோக்கியுள்ளோம்.

''இத் தேர்தல் முஸ்லிம் சமூகத்தின் எதிர் காலத்திற்கு மிக முக்கியத்துவம் பெறுகிறது. இதனைக் கருத்திற்கொண்டு முஸ்லிம் அரசியல்வாதிகள் செயற்பட வேண்டும்.''

- இவ்வாறு முஸ்லிம் கவுன்ஸில் வேண் டுகோள் விடுக்கின்றது.

எதிர்வரும் பொதுத் தேர்தல் தொடர்பாக முஸ்லிம் இயக்கங்களின் கூட்டமைப்பான 'முஸ்லிம் கவுன்ஸில் ஒப் ஸ்ரீலங்கா' விடுத் துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக் கப்பட்டுள்ளது.

முஸ்லிம் கவுன்சிலின் தலைவர் என். எம். அமீன், செயலாளர் ஹில்மி சுலைமான் ஆகியோர் விடுத்துள்ள அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பவை வருமாறு:-

ஜனாதிபதித் தேர்தலையடுத்துத் தோன்றியுள்ள புதிய அரசியல் சூழ்நிலையில் அமையவிருக்கும் புதிய நாடாளுமன்றத்தில் முஸ்லிம் சமூகத்தின் அரசியல் பிரதிநிதித்துவம் குறைவடையக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன எனும் ஓர் அச்சம் சமூகத்தில் தோன்றியுள்ளது.

இதற்கு முன் எப்போதுமில்லாதளவில் முஸ்லிம்கள் மத்தியில் அரசியற் கட்சிகளின் அதிகரிப்பும், முஸ்லிம் அரசியல் வாதிகளுக்கிடையான அரசியல் பிளவுகளும், ஒற்றுமையின்மையும் இந்த அச்ச சூழ்நிலையை மேலும் அதிகரித்திருப்பதை நன்கு வெளிப்படுத்துகின்றது.

அமையவிருக்கும் புதிய நாடாளுமன்றத்தினூடாக அரசியல் சட்ட சீர்திருத்தங்களும், தேர்தல்முறை மாற்றங்களும், இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டங்களும் கலந்தாலோசிக்கப்படவுள்ளன என ஜனாதிபதி தெரிவித்துள்ள சூழ்நிலையில், முஸ்லிம் சமூகத்தின் அரசியல் பிரதிநிதித்துவம் நாடாளுமன்றத்தில் கணிசமான அளவில் இருப்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டியது முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்த வரையில் மிகவும் அத்தியாவசியமாகவுள்ளது.

அரசியல்வாதிகள் மத்தியிலுள்ள ஒற்றுமையின்மை காரணமாக சமூகத்தின் பிரதிநிதித்துவம் இழக்கப்பட்டு விடவோ அல்லது குறைக்கப்பட்டு விடவோ கூடாது என்பது முஸ்லிம் சமூகத்தின் மீது அக்கறை கொண்ட எல்லோரும் தெரிவிக் கும் ஆதங்கமாகும்.

முஸ்லிம் சமூக நலனை முன்னிலைப்படுத்தி நாடாளுமன்றத் தேர்தலில் நாட்டின் பல பாகங்களிலும் சிதறி வாழுகின்ற முஸ்லிம் சமூகத்தின் அரசியல் பிரதிநிதிகளை உறுதிப்படுத்திக் கொள்ளக் கூடிய செயற்பாடுகளைக் கவனத்திலெடுக்க வேண்டும்.

இதுதொடர்பாகக் கருத்துப் பரிமாற்றங்களையும் கலந்துரையாடல்களையும் தேவையேற்படின் உடன்பாடுகளையும் தமக்கிடையே ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

முஸ்லிம் அரசியல் கட்சிகளும், அரசியல் வாதிகளும் சமூக நலனில் அக்கறையுடனும், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடனும் உண்மையான இஸ்லாமியத் தோழமை கொண்ட நட்புடனும் செயற்பட்டு எதிர்வரும் தேர்தலை முகங்கொடுப்பதற்கு ஆயத்தமாக வேண்டுமென முஸ்லிம் கவுன்சில் உருக்க மாக வேண்டுகோள் விடுக்கின்றது - என்றுள்ளது.

(ஒ-சி)

# அத்துமீறும் இலங்கை மீனவருக்கு எதிராக அரசு சட்ட நடவடிக்கை

## கடற்றொழில் அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 23

இந்தியக் கடற்பரப்பினுள் சட்டவிரோதமாக நுழையும் இலங்கை மீனவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு இலங்கை அரசு தீர்மானித்துள்ளது.

இந்தியக் கடற்பரப்பினுள் இலங்கை மீனவர்கள் அடிக்கடி நுழையும்போதே மோதல்கள் ஏற்படுகின்றன என மீன்பிடித் துறை அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா சுட்டிக் காட்டியுள்ளார்.

'டெய்லிமிரர்' இணையதளத்திற்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

இலங்கைக் கடற்பரப்பிலிருந்து அத்துமீறி இந்தியக் கடற்பரப்புக்குள் நுழையும் படகுகளைக் கண்காணிப்பதற்காக மீன்பிடிப் படகுகளில் ராடர் உபகரணம் பொருத்தப்படவிருக்கிறது. இதன்மூலம் இலங்கை மீனவர்களின் அத்துமீறல்கள் கண்காணிக்கப்படும்.

இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்களுக்கு எதிராக இந்திய அதிகாரிகள் சட்ட நடவடிக்கை எடுத்துவருகின்றனர். இதனைக் கருத்திற் கொண்டே இலங்கை அரசும் இவ்வாறான நடவடிக்கையை எடுக்க முடிவுசெய்துள்ளது - என்றார்.

(ஒ-சி)

# யாழ். பல்கலை மாணவர் ஒன்றியத்துடன் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சந்திப்பு

கொழும்பு, பெப். 23

இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளுடன் சந்திப்பொன்றை நேற்று நிகழ்த்தியுள்ளார். இந்தச் சந்திப்பு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பொது அறையில் நடைபெற்றது எனத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விட்டு வெளியேறிய பின்னர் தமிழ் மக்களுக்கான அடிப்படைக் கொள்கையிலிருந்து விலகாத புதியகட்சி ஒன்றை ஆரம்பிக்கும் நோக்கத்துடனே இந்தச் சந்திப்பு நடைபெற்றது எனக் குறிப்பிடப்படுகி றது.

நேற்றைய இந்தச் சந்திப்பின்போது அண்மைய காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஏற்பட்ட பிளவுகள் சிதைவுகள் தொடர்பாகவும் சிலருடைய நடவடிக்கைகள் தொடர்பாகவும் அங்கு கலந்து கொண்ட மாணவர்கள் கடுமையான அதிருப்திகளை வெளியிட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சந்திப்பில் பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்களும் கலந்துகொண்டனர் எனவும் கூறப்படுகிறது.

(ஒ-சி)

# கொழும்புத் துறைமுகத்தில் இந்தியாவின் போர்க்கப்பல்

கொழும்பு, பெப். 23

இந்தியக் கடற்படையின் போர்க்கப்பல் ஒன்று கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நிற்கிறது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. 'ஐ.என்.எஸ். சுகன்யா' என்ற இந்தப் போர்க்கப்பல் கடந்த வெள்ளிக்கிழமை கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது.

இந்தக் கப்பலில் கொமாண்டர் பரீஷ் சௌனி தலைமையிலான 110இற்கும் அதிகமான கடற்படையினர் பணியாற்றுகின்றனர்.

இந்தியப் போர்க்கப்பலுடன் மாலைதீவுக் கடற்படையின் கடலோரக் காவல் கப்பல் ஒன்றும் கொழும்புக்கு வந்துள்ளது.

இலங்கைக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் திஸார சமரசிங்க நேற்று முன்தினம் சென்று இந்தியப் போர்க் கப்பலான சுகன்யாவைப் பார்வையிட்டு அதன் கட்டளை அதிகாரியுடன் பேச்சு நடத்தியிருந்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவருடன் கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் அசோக் கே காந்தாவும், இந்தியத் தூதரகத்திலுள்ள பாதுகாப்பு ஆலோசகர் கப்டன் பிரதீப் சிங்கும் இந்தப் போர்க்கப்பலுக்கு விஜயம் செய்திருந்தனர்.

அவர்களுக்கு சுகன்யா போர்க்கப்பலில் இந்தியக் கடற்படையினர் அணிவகுப்பு மரியாதை வழங்கியிருந்தனர்.

இந்தியப் போர்க்கப்பலும், மாலைதீவுக் கடலோரக் காவல் கப்பலும் நேற்று கொழும்புத் துறைமுகத்தை விட்டுப் புறப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது இலங்கை கடற்படையின் நான்கு அதிகாரிகள் மேலதிக கடல்சார் பயிற்சிகளுக்காக இந்தியப் போர்க்கப்பலில் புறப்பட்டுச் செல்வர் எனவும் கூறப்பட்டது.

(ஒ-சி)

# அரசுக்கு எதிரான சதியில் சம்பந்தப்பட்டுள்ள சர்வதேச தொண்டு அமைப்புகளுக்குத் தடை!

## அமைச்சர் ரிஷாத் தெரிவிப்பு

கொழும்பு, பெப். ,23

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசிற்கு எதிராகச் சதிசெய்த அரச சார்பற்ற அமைப்புகள் தடைசெய்யப்படும். அவற்றின் வெளிநாட்டுப் பணியாளர்கள் நாடு கடத்தப்படுவர் என மீள்குடியேற்ற அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இலங்கையின் ஜனநாயகத்தைப் பலவீனப்படுத்துவதற்காக சில நாடுகள் சர்வதேச மற்றும் உள்ளூர் அமைப்புகளுக்கு நிதியுதவி வழங்குகின்றன என வெளியாகியுள்ள தகவல்கள் குறித்து அரசு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இது குறித்த விசாரணைகள் விரைவில் பூர்த்தியாகும்.

அரசு சில அரசசார்பற்ற அமைப்புகளை இனங்கண்டுள்ளது.

அந்த அமைப்புகள் குற்றம் இழைத்திருக்கின்றமை உறுதியானால் அவற்றைத் தடை செய்வோம். அவற்றின் வெளிநாட்டுப் பணியாளர்களை நாடு கடத்துவோம். - என்றார் அமைச்சர்.

(ஒ-சி)

# தேர்தலின் பின் புதிய அரசமைப்பை உருவாக்க ஜனாதிபதி திட்டவட்டம்

## டளஸ் அழகப்பெரும கூறுகிறார்

கொழும்பு, பெப். 23

பொதுத்தேர்தலின் பின்னர், புதிய அரசமைப்பு ஒன்றை சில சீர்திருத்தங்களுடன் அமைக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்திருக்கிறார் என போக்குவரத்துத்துறை அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

கொழும்பு, மகாவலி கேந்திர நிலையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் மாநாட்டில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

ஐக்கிய சுதந்திர முன்னணி அரசில் புதிதாக அமைக்கப்படும் அமைச்சரவையில் உறுப்பினர்களின் எண்ணிக்கை 40 இற்குள் அடங்கும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய சுதந்திர முன்னணி மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறும் என்பதில் சந்தேகத்திற்கிடமில்லை எனவும் அமைச்சர் டளஸ் அழகப்பெரும குறிப்பிட்டார்.

புதிய நாடாளுமன்றத்தில் 50 புது முகங்கள் வரவிருக்கின்றனர் எனவும், இதன் அடிப்படையில் சிறிய அமைச்சரவை ஒன்றை அமைக்க ஜனாதிபதி எண்ணமிட்டுள்ளார் எனவும் டளஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

(ஒ-சி)



ஜனநாயக தேசிய முன்னணி நேற்றுக் கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டின்போது...

# மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிட்டும் என்பதில் அரசு மிக உறுதி

கொழும்பு, பெப். 23

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கு, அரசமைப்பில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கான மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை மக்கள் வழங்குவார்கள் என அதன் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அம்பாந்தோட்டை, கம்பஹா மாவட்டங்களுக்கான வேட்பு மனுக்களை நேற்றுக் கையளித்தது.

நாட்டிலுள்ள சகல மாவட்டங்களுக்குமான வேட்பு மனுக்களை இன்றும், நாளையும் சமர்ப்பித்து விடுவோம்.

18 மாவட்டங்களுக்கான வேட்பாளர் மனுக்களில் ஏற்கனவே கைச்சாத்திட்டுள்ளோம். ஏனையவை தற்போதே கைச்சாத்தாகின்றன.

நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள அரசமைப்பை மாற்றுவதற்கான மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் மக்கள் நாட்டுக்குத் தேவையான சரியான தீர்ப்பை வழங்குவர் என எதிர்பார்க்கி றோம். - எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, செய்தியாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்துள்ள அமைச்சரவைப் பேச்சாளர் டலஸ் அழகப்பெரும -

பொதுத் தேர்தலில் வெற்றிபெற்ற பின்னர் அடுத்த ஆறு மாதங்களுக்குள் தேர்தல் சீர்திருத்தங்களையும், புதிய அரசமைப்பையும் முன்வைப்போம்.

நாடு தற்போது எதிர்கொள்ளும் அரசியல் - தேர்தல் நெருக்கடிகளுக்குத் தீர்வாகவே இதனைக் கொண்டு வருகிறோம். - எனக் குறிப்பிட்டுள்ளார்.

(ஒ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவாஜிலிங்கமும் ஸ்ரீ காந்தாவும் சேர்ந்து புதிய கூட்டமைப்பை ஆரம்பித்தனர்

கொழும்பு, பெப். 23

ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிட்ட எம்.கே. சிவாஜிலிங்கமும் யாழ். மாவட்டத்தின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஸ்ரீகாந்தாவும் தமிழ்த்தேசிய விடுதலைக் கூட்டமைப்பு என்ற அமைப்பை அமைத்துள்ளனர்.

அந்த வாய்ப்பில் அமைப்பின் சார் அவர்கள் இருவரும் சேர்ந்து நிப்போன் ஹோட்டலில ஊடகவியலாளர் சந்திப் பொன்றை நடத்தினர்.

அங்கு எம்.கே. சிவாஜிலிங்கம் கூறிய தாவது:-

தமிழ் மக்களைக் கொலை செய்ய துணைபோன இந்தியாவுக்கு உடந்தையாகவும் சோனியாவின் காங்கிரஸ் அரசாங்கத்தின் விருப்பத்திற்கேற்பவும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இயங்கியது. இந்த யுத்தத்தை ஆரம்பித்தது இந்தியா தான் என்றுஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே சொல்லியிருந்தார்.

மாவிலாறு பிரச்சினையிலிருந்ததான் யுத்தம் தொடங்கியது.

அந்த நேரத்தில் அதாவது 2006ஆம் ஆண்டு தமிழ்த்தேசிய கூட்டமைப்பன் தூதுக்குழு இந்தியாவுக்கு சென்றது. எனினும் பிரதமா மன்மோகன் சிங்கை சந்திக்க முடியவில்லை. அதே ஆண்டு டிசெம்பர் மாதம் கூட்டமைப்பின் தூதுக்குழு இந்தியப் பிரதமரை சந்தித்தது.

அதன் பின்னர் கிட்டத்தட்ட 28 மாதங்களாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தூதுக்குழு இந்தியாவுக்கு காலடி எடுத்து வைக்கவில்லை. 2007 ஆம ஆண்டு கிட்டத்தட்ட 15 இற்கும் அதிகமான வெளி நாடுகளுக்குச் சென்று யுததத்தை நிறுத துமாறு கோரிக்கை விடுத்த மூவரும் இந்தியாவுக்கு செல்லாததற்கான காரணம் என்ன?

எங்களால் இந்தியாவுக்கு சென்று அங்குள்ள முக்கிய பிரதிநிதிகளை சந்திக்க முடியுமாக இருந்தால் தமிழ்த்தேசிய கூடடமைப்பு ஏன் அந்த முயற்சியை எடுக்க வில்லை?

இதிலிருந்து இந்திய அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்பவே இவர்கள் செயற்படுகிறார்கள் என்பது புலனாகிறது.

அதுவரை இந்திய அரசாங்கத்திடம எதுவும் கோராதவர்கள் 2009 ஆண்டு ஏப்ரல் மாதம் சந்திப்புக்கான கோரிக்கை விடுத்தார்கள். அதற்காக எமது உறுப்பினர்கள் 14 பேர் கூடினார்கள். இவர்களில் 13 பேர் அங்கு போகக் கூடாது என எதிர்த் தார்கள்.

இரா.சம்பந்தன, சுரேஷ் பிரேமச சந்திரன், மாவை சேனுதிராஜா, செல்வம் அடைக் கலநாதன் ஆகியோ புதுடிலலிககுச சென்றனா. நான லண்டனிலிருந்து அவசரமாக வந்து, இந்தியா துரோகமிழைக் கிறது. செல்ல வேண்டாம் எனச் சொன் னேன.

இந்த வேண்டுகோள் எனக்கூடாக விடுதலைப் புலிகளால் இவர்களுக்கு விடுக்கப்பட்டது.

புலிகளால் நேரடியாகவும் கூட அவர்களுக்கு செய்தி அனுப்பப்பட்டது.

ஆனால் அதனையும் மீறிச் சென்றார் கள் என்றால் அதற்கான காரணத்தை நீங் களே தீர்மானித்துக்கொள்ளுங்கள்.

இந்திய பொதுத் தேர்தலிலே தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சியை வெற்றிபெறச் செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட ஏமாற்று முயற்சிகளிலே தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பகடைக்காய்களாக பாவிக் கப்பட்டது.

இவர்களும் அதில் விரும்பி கலந்து கொண்டார்கள் என்பதுதான் எங்களுடைய பகிரங்க குற்றச்சாட்டு. இதைப் பற்றி வேண்டிய நேரத்தில் வாதாடவும் தயாராகவுள்ளோம்- என்றார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினா ஸ்ரீகாந்தா உரையாற்றுகையில்-

சோனியா அரசுக்கு விசுவாசமான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன றக் குழு இருக்க வேண்டும என இந்தியா விரும்புகிறது.

கிளர்ச்சியாளர்கள், தட்டிக்கேட்ப வர்கள், இந்தியாவின் துரோகத்தைப் பற்றி கடந்த காலத்தில் பேசியவாகள் இருக்கக் கூடாது என்பதில் சோனியா காங்கிரஸ் அரசாங்கம் தீர்மானமாக இருக்கிறது- என்றார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பன்போது புதிய இடதுசாரி முன்னணியின் தலைவா விக்கிரமபாகு கருணாரத்ன பார்வையாள ராக வருகை தந்திருந்தார். (அ-6)

## அர்ஜுண ரணதுங்க ஜே.வி.பி. அணியில்

கொழும்பு, பெப். 23

இலங்கைக் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும், எம்.பியுமான அர்ஜுண ரணதுங்க இந்த நாடாளுமன்றத் தேர்தலில் சரத் பொன்சேகாவின் கட்சியில் இணைந்து போட்டியிடத் தீர்மானித்துள்ளார்.

பொன்சேகாவின் கொழும்பு அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இந்த முடிவை அறிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நான் எட்டு வருடங்கள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்திருக்கிறேன். நான் பிரதிநிதித்துவப்படுத்திய எனது கட்சியில் இடம்பெற்ற ஊழல், மோசடிகள் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும்.

பொன்சேகா ஜனாதிபதியானால் இந்த ஊழல், மோசடிகளை இல்லாதொழிக்க முடியும் என்ற நம்பிக்கையில்தான் நான் ஜனாதிபதித் தேர்தலில் பொன்சேகாவுக்கு ஆதரவு வழங்கினேன். இப்போதும் அவரைத் தலைவராகக் கொண்ட கூட்டணியில் இணைந்து போட்டியிடவே நான் தீர்மானித்துள்ளேன்.

நாட்டுக்காக அதிகளவு தியாகம் செய்தவா சரத் பொன்சேகாதான் என்று இந்நாட்டு மக்கள் அனைவருக்கும் தெரியும். அவர் அரசியலில் ஈடுபட்ட ஒரே காரணத்துக்காகக் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து செயற்பட்டமை போல் நாடாளுமன்றத் தேர்தலிலும் ஒன்றிணைந்து செயற்படுமாறு மக்கள் எம்மிடம் கூறுகின்றனர். - என்றார்.(அ-சி)

### பொன்சேகா......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதித் தேர்தலில் சரத் பொன் சேகாவை ஆதரித்தோம்.

அந்தத் தேர்தலில் ஊழல், மோசடிகள் இடம்பெற்றதால் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட உண்மையான ஜனாதிபதி இல்லாமல் போய் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகியுள்ளார்.

இதன் காரணமாக நாம் மீண்டும் ஒன்றிணைந்து பொன்சேகாவின் தலைமையின் கீழ் இந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கான அவசியம் ஏற்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டிருக்கும் சரத் பொன்சேகா இந்த அவசியத்தை உணர்ந்து இந்தத் தேர்தலிலும் நாம் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும் என்ற தகவலை அவரது பாரியார் அனோமா பொன்சேகாவின் ஊடாக ஜே.வி.பிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் தெரிவித்துள்ளார்.

ஆனால், ஐக்கிய தேசியக் கட்சி யானைச் சின்னத்தின் கீழ் தனித்துப் போட்டியிடத் தீர்மானமெடுத்துள்ளது. இதனால், நாம் சரத் பொன்சேகாவைத் தலைவராகக் கொண்ட ஜனநாயக தேசிய முன்னணியின் கீழ் போட்டியிடத் தீர்மானித்துள்ளோம்.

இருப்பினும், இந்தக் கூட்டணியில் வந்து இணையுமாறு நாம் மீண்டும் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வேண்டுகோள் விடுக்கின்றோம். அக்கட்சி ஆரம்பத்தில் எடுத்த தீர்மானத்தை மாற்றிக் கொண்டு எமது கூட்டணியில் வந்து இணைவதற்கு இன்னும் கால அவகாசம் உள்ளது.

தற்போது இந்தக் கூட்டணியின் கீழ் ஐந்து கட்சிகள் போட்டியிடுகின்றன. இன்னும் பல கட்சிகள் இதில் வந்து இணையும். இக்கூட்டணியை மிகப் பலமுள்ள கூட்டணியாக மாற்ற நாம் நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

இந்தக் கூட்டணி மக்களின் பிரச்சினைகளை உரிய முறையில் தீர்ப்பதற்கான பொறுப்புகளை ஏற்றுச் செயற்படும் என்று நாம் இந்நாட்டு மக்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம். - என்றார்.

### கொழும்பு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நியமிக்கப்பட்டிருப்போரின் விவரங்களும் இன்னும் ஓரிரு நாள்களில் வெளியிடப் படும் என்றும் அவா சொன்னார்.

பொன்சேகாவின் இந்தக் கூட்டணி வடக்கு - கிழக்கு உள்ளிட்ட நாட்டில் உள்ள 22 தேர்தல் மாவட்டங்களில் போட்டியிடும் என்றும் விஜித ஹேரத் கூறினார்.

சரத் பொன்சேகா கைது செய்யப்பட்டிருக்கும் இந்த நிலையில் அவரது கட்சியைத் தவிர்த்து வேறு கட்சிகளில் போட்டியிடுவது மனச்சாட்சிக்கு விரோதமானது என்றும் அவர் சொன்னார்.

பொன்சேகாவின் கொழும்பு அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார். (அ-சி)

### ஐ.தே.க.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று ஜே.வி.பி. தலைவர்கள் வெளியிட்ட வற்புறுத்தலை ரணில் விக்கிரமசிங்கவும், ஏனைய ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர்கள் சிலரும் ஏற்க அடியோடு மறுத்தமையை அடுத்து இரு தரப்புகளும் பிரிந்து பொதுத் தேர்தலை எதிர்கொள்வது என்பது ஓரளவுக்கு உறுதியாகிவிட்டது.

ஐக்கிய தேசிய முன்னணியில் இடம் பெற்றுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜனநாயக மக்கள் முன்னணி, ஸ்ரீலங்கா சு. க. மக்கள் அணி ஆகியவற்றின் தலைவர்கள், எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஓரணியில் நின்று பொதுத் தேர்தலை எதிர்கொள் வதையே வற்புறுத்திய போதிலும் -

ஐ.தே.க. - ஜே.வி.பி. இடையே இறுதி இணக்கப்பாடு எட்டப்படாத நிலையில் வேறு வழியின்றி ஐ.தே.முன்னணியுடன் இணைந்து செயற்படும் முடிவுக்கு அவர்கள் தள்ளப்பட்டனர் என்று கூறப்பட்டது.

இப்படி பிரதான எதிரணித் தரப்புகள் இரு கன்னைகளாகப் பிரிந்து பொதுத் தேர்தலை எதிர்கொள்ளும் நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளபோதிலும் -

ஆளும் தரப்பைத் தோற்கடிக்கும் ஒரே நோக்கத்துக்காகவேனும் அவற்றைத் தேர்தல் பிரசாரத்துக்கு ஒரே மேடையில் ஐக்கியப்பட வைக்கும் எத்தனங்கள் சில தரப்பினரால் இப்போது முன்னெடுக்கப் பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்படு கின்றது.

## தேர்தல் சுவரொட்டிகளை அகற்றுவது மார்ச் 26இன் பின்னரே ஆரம்பம்

கொழும்பு, பெப். 23

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்காக ஒட்டப்படும் தேர்தல் சுவரொட்டிகளை அகற்றும் பணியை மார்ச் 26 ஆம் திகதிக்குப் பின்னர் ஆரம்பிக்கவுள்ளதாகத் தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ண தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் பொது இடங்களையும், சுவர்களையும் அலங்கோ லப்படுத்தும் - விதத்தில் சுவரொட்டிகள், பதாகைகள் போன்றவற்றுக்குப் பெருமளவு பணத்தை விரயம் செய்யக்கூடாது.

இதற்குப் பதிலாக சுவரொட்டிகளை அச்சடித்து அவற்றைப் பொதுமக்களுக்கு விநியோகிக்கலாம்.

வேட்பாளர்கள் பெருமளவு பணத்தைச் செலவழித்து சுவரொட்டிகளை அச்சிடுகின்றனர்.

மார்ச் 26 ஆம் திகதிக்குப் பின்னர் பொலிஸார் சுவரொட்டிகளை அகற்றும் பணியை ஆரம்பிப்பர் - எனத் தெரிவித்துள்ளார்.

### அமெரிக்க நீதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்க வெளியுறவுத்துறையால் தீவிரவாத அமைப்பு என்று பட்டியலிடப்பட்ட இயக்கங்களுக்கு மனிதாபிமான உதவிகள் வழங்குவது அந்நாட்டு தேசப்பற்றுச் சட்டத்தின்படி குற்றமாகும். இந்நிலையில், அது தொடர்பான கட்டுப்பாடுகளைத் தளர்த்தக் கோரிருத்திரகுமாரன் வாதாடவுள்ளார் என்றும், அமெரிக்க உச்ச நீதிமன்றத்தில் வாதாடும் முதல் தமிழா அவர்தான் என்றும் இணையதளங்கள் தெரிவிக்கின்றன. (அ-சி)

### தபால் மூல.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடாக மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலகர்களிடம் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கமுடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கால எல்லை மீண்டும் நீடிக்கப் படமாட்டாதெனத் தேர்தல்கள் செயலகம் கூறுகிறது. (அ-சி)

### யாழில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விபத்துச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது:-

நேற்றுக்காலை 7 மணிக்கு யாழ்.மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து புறப்பட்ட பேருந்து காலை 9.35 மணியளவில் கிளிநொச்சி குஞ்சுப்பரந்தன் சந்திக்கு அருகில் உள்ள பாலத்துக்குள் சரிந்து விபத்துக் குள்ளானது.

பஸ்ஸில் கூடுதலான பயணிகளை ஏற்றிச்சென்றதே இந்த விபத்து நேரக்காரணம் எனத் சொல்லப்படுகின்றது.

விபத்தில் காயமடைந்த 12 பேரும் பளைப் பிரதேச செயலகத்தின் வாகனத்தில் கிளிநொச்சி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.மருத்துவமனைக்கு மாற்றப் பட்டனர். (அ-10)

(விவரமான செய்தி 5 ஆம் பக்கத்தில்)

## சிறுவர் குற்றச்செயல்களை விசாரிக்கப் புதிய நீதிமன்றம்!

கொழும்பு, பெப். 23

சிறுவர் குற்றச் செயல்கள் சம்பந்தமாக விசாரிப்பதற்கெனத் தனியான நீதிமன்றம் ஒன்றை கொழும்பு புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் அமைக்க நீதிமைச்சு தீர்மானித்துள்ளது எனத் தெரிவிக்கப் படுகிறது.

இதுவரை சிறுவர்களின் குற்றச் செயல்கள் குறித்து பொதுவான நீதிமன்றத்திலேயே விசாரணைகள் நடத்தப்பட்டன. 16 வயதுக்கு உட்பட்டவர்களின் குற்றச் செயல்கள் இனிமேல் இப்புதிய நீதிமன்றத்தில் விசாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சிறார் குற்றச்செயல்கள் தொடர்பாகவும் சிறுவர்களைத் தடுத்து வைத்தல் சம்பந்தமாகவும் ஆராயவென அமைக்கப்பட்ட குழுவின் தலைவர் நீதியரசர் ஷிரானி பண்டாரநாயக்கவின் ஆலோசனையின் பேரில் இந்தப் புதிய நீதிமன்றம் அமைக்கப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-சி)

### தங்கேஸ்வரி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேட்பாளர்களும் வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினர் சிவநாதன் கிஷோரும் நேற்று ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இதேவேளை இவர்கள் நேற்று முன் தினம் ஐ.ம.சு.கூட்டமைப்பின் சார்பில் வேட்புமனுத் தாக்கல் செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-சி)

### சரத் பொன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனுதாரர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சிப்லி அசீஸ், அரச தரப்பில் பிரதி சொலி சிட்டர் ஜெனரல் சஞ்சய் ராஜரத்தினம் ஆகியோர் இன்று மன்றில் ஆஜராகி இரு தரப்பு வாதங்களையும் முன்வைப்பர் என எதிர்பார்க்கப்படுகின்றது.


## கண்ணீர் அஞ்சலி



இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையின் பொருளாளரும், இலங்கை செஞ்சிலுவை சங்கச் சங்கானை பிரிவுத் தலைவருமான திருநாவுக்கரசு உதயசூரியன் அவர்களின் அன்புத் தாயார்

**அமரர் திருநாவுக்கரசு பரமேஸ்வரி**

அவர்கள் 20.02.2010 அன்று இறைபதம் அடைந்ததை அறிந்து பெரும் துயருற்றும், அன்னாரது மறைவிற்காக எமது கண்ணீர் அஞ்சலியையும் அவரது இழப்பால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா ஆண்டவருடன் சங்கமமாகி சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், ஆளுநர் சபை உறுப்பினர்கள், பணியாளர்கள், தொண்டர்கள்
இலங்கை செஞ்சிலுவை சங்கம் - யாழ். கிளை

(e/565067)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.02.2010இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org